# தர்ஜுமா தப்ரீஜ் அல்-ஹாதிர் பீ மனாகிபிஷ் ஷெய்கு அப்தில் காதிர்

*மூல ஆசிரியர்:* **முஹியத்தீன் இப்னு இர்ஜலி இமாம்**

ஹிஜ்ரி 1309

*தமிழில்:* **அபு இஸ்மாயில் இப்னு இஸ்மாயில்**

காஹிரூர் முஹம்மது அப்துல் காதிர் லெப்பை அவர்களின் குமாராகிய அவூது பிள்ளை என பட்டம் துலங்கிய ஷெய்கு அப்துல் காதிர் எனும் முஹிப்பானவர் என்னிடம் கேட்டு கொண்டமையால் அரபால் உள்ளதை அரபு தமிழாக உரை செய்தேன் முஹம்மது சதகதுல்லாஹ் லெப்பை பின் அஷ்ஷெய்கு முஹம்மது லெப்பை அல்ஆலிமுல் காஹிரி.

الحمد لله الذي رفع اهل القربة من حضيض البشرية الي اعلي ذروة الاصطفائية وخصهم من بين عباده بالفيضات القدسية

وجعل ذكرهم سببالنزول الرحمة ودافعال لبلية والنقمة بالعناية الازلية

அல்லாஹ்வென்னும் திருநாமம் கொண்டு இக்கோர்வையை தொடங்குகிறேன். இவ்வுலகில் எல்லோர்க்கும்; கிருபையாளன், ஆகிரத்தில் முஃமினீன்களுக்கு சொந்தமாய் அருள் புரியும் தயாளனாகிய அல்லாஹ் தஆலாவிற்கே புகழ்ச்சி அனைத்தும் உண்டாவதாக! அவன் எவ்விதமானவன் எனில் முடுகுதல் வந்தனத்துடயோர்களை மனுக்குனாகுனத்தரை தாழ்த்தியை விட்டும் தெளிவெனும் உச்சத்தின் மேலாம்பரத்தளவில் உயர்த்திவிட்டவன்;. இன்னும் அவனது தூய்மையான சமூகத்தின் பைளுகளைக் கொண்டு அவன் அடிமைகளில,; அவர்களை தெரிந்து சொந்தமாக்கி கொண்டவன். இதுவும் அவர்களுடைய நாமங்களை நடத்தைகளை எடுத்துரைப்பதை அவன் கிருபாக்கடாச்சம் இறங்குவதற்கு சபபாகவும் அவனின் பூரிப்பை வேண்டுதல் கிருபையினால் வேதனை சோதனையை தட்டி விடும் பரிசையாயுமாக்கி விட்டவன். அவர்கள் இவ்வித பெயர் பெற்ற நாதாக்களானதால் இவ்வுலகில் சூரியன் தன் பிரகாசத்தினால் எவ்விதம் பிரசங்கமாகயிருக்குதோ அத்தன்மையாய் கோணங்களில் எல்லாம் அவர்கள் கீர்த்தனங்களும் லோகங்களில் அவர்கள் காரணீகங்களும் பெரிதளவாய் பரந்துவிட்டது. ஆகையால் அவர்களே இளஞ்சிக்கும் தயாளரென ஊனுதல் பிடித்தவர்கள். தங்கள் தங்கள் சரீர இச்சையின் சிச்சைகளை விட்டும் அச்சம் தீர்வார்கள். ஆதலால் அவர்களோ சில கவ்முகள் அவர்களோடிருப்பவர் ஷெய்தான்களைவித அளிச்சாட்டியங்களால் மூதேவியாகாதே அப்படியான கூட்டங்கள் ஆலம் உண்டாக ஏதுவும் கருவும் குருவுமாய் வந்த நாயகம் மௌலானா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் நேர் நேரிகளை கொண்டு அதபு பெற்றோர்களான தோழர் மீதும் கருணையும் ஈடேற்றமும் உண்டாவதாக. இதற்குப்பின் அறிவாயாக.

ஆண்டவன் அருள் அளவில் ஆசித்தவனான இர்பளி சேகரம் முஹியத்தீன் அவர்கள் மகனான அப்துல் காதிர் சொல்வது அவுலியாக்களின் சரித்திரங்களை எடுத்து பேசுவது அகத்தின்

கறையை சிக்கலாடும் ஆயுதமாய் கண்ணொளிவை துலக்கி வருத்தங்கள் எனும் இருளை நீக்குவதாயும் எத்தளத்திலும் துன்பம் துயரத்தை விளக்கி சஞ்சலம்களை அகற்றுவதாயும் இருக்குதென யான் கண்டபோது அதிலும் அவுலியாக்களுக்கு கிரீடமாகவும் அஸ்பியாக்களுக்கு அத்தாட்சியாகவும் ஆலத்தின் குதுப் எனவும் அருள் நன்கொடை சொரியும் அருவியாயும் அரசர்களுக்கு அரசராயும் ஹக்கு பால் சேர்ந்திட்டோர்க்கு முன்னிலை இமாமாயும் வந்துதித்த அவுலியாக்களான ஆன் பெண் அனைவர் தோள் மீது என் பாதாரம் என்று அல்லாஹ் தஆலாவின் உத்தரவால் சொன்னவர்களான கௌது சமதானி பர்து ரஹ்மானியானவர்கள் தங்கள் பாட்டனார் முஸ்தபா நபி கதத்திலிருந்த ஆண்டகை ஹஸனிய்யி ஹுஸைனி என்று தாய் தகப்பர் வமிசத்தில் கீலானி எனும் அஜமி பாஷயை அரபியாக்கி சொல்கின்ற ஜீலானூரில் பிறந்த ஷெய்கு அப்துல் காதிர் நாயகத்தின் மனாக்கிபு முன் கூறிய உபயோகங்களிலுள்ளதென கட்டாயமாய் கண்டிடவே, இதுவும் முஹம்மது சாதிகுல் காதிரி என்பவர்கள் தங்கள் ஷெய்காகிய கௌதுல் அஃலமின் அடையாளம் வெளியாகும் துரையாகிய ஷெய்யிது அப்துல் காதிர் ஆரிபுல்லாஹ் அவர்களின் உத்திரவின் படி சேகரம் செய்து எடுத்த மனாகிபு பார்ஸி பாஷையால் கோர்வையாக்கினதை நான் கண்டு எடுத்து தப்ரீஜ் அல்-ஹாதிர் பீ மனாகிபிஷ் ஷெய்கு அப்தில் காதிர் என்ற நாமமும் வைத்து அரபு பாஷையாக்க நாடினேன். அதின் பொருட்டால் அந்த நாயகத்திரு சமுகத்தலங்கார் வாசலினிடத்தே ஒப்புக் கொள்ளப்படுகின்ற நற்கூட்டத்தில் என்னையும் அல்லாஹ் தஆலா கூட்டுறவாக்கி கொள்வான் என்ற ஆசிப்புக்கு அவனே போதுமானவன். கோர்வைகள் எனும் மைதானத்தில் கோர்வை செய்பவர்கள் என்ற குதிரை வைய்யாளி போடுவர்களின் களம்கள் எனும் குதிரைகள் அது ஓடும் போது கால் சருகுதலை விட்டும் ஒழிந்திருப்பது சுருக்காமாகி விடுவதால் இது கோர்வையில் தப்பு பிழைகள் இருப்பது போல் பார்த்தவரும் ஓர் தவறும் கண்டால் அவரின் பொறுக்குதல் சங்கை என்ற பிடவை முந்தானியால் மறைத்து கொள்வதை ஆதரவு வைக்கிறேன்.

நல்லுதவி கட்டளை இடுவது அல்லாஹ் தஆலாவை கொண்டு தான். அவனே எனக்கு போதுமானவன் அவனே எமக்கு நற்தோழன். நான் சொல்லுகிறேன் திட்டமாக கருமமாகிறது இந்த கிதாபு வரலாறுகளை பார்க்க கேட்க முன்னமே சில வேண்டுமையான கல்விகளை முன்மொழியாய் கூறப்படுகின்றது. அதை அறிவது கடமை. அதனால் மனிதர்கள் அவுலியாக்களை முஹப்பத் வைக்க வேண்டியதை கெட்டிபடுத்தவும் உகப்பை பரிபூரணமாய் திடப்படுத்தவும் வேண்டி உடப்பிறப்பே நீ அறி. அல்லாஹ் தஆலாவை புகழ்ச்சியையும் வார்த்தைகளில் ஏதையும் நீ கேட்கில் அவ்வார்த்தையில் நாயகத்தனத்திற்கு ஏதும் குறையில்லை என்றும் நீ அறிந்தவனாக இருக்கிற ஹாலில் அது புகழ்ச்சியை சொன்னவர் இன்னவர் என நீ அறியாதிடினும் சொல்லை உண்மை கொள்வது உன் மீது கடமையாம். அப்படிப்போல் தான் நபிமாரின் ஹக்கிளையும் நீ பட்டதிற்கு அப்புகழ்ச்சியில் ஒரு குறைவு உண்டுபடாதிடில் ஒப்புக்கொள்வது உன் மேல் விதியாம். இன்னும் அப்படிப்போல் தான் அவுலியாக்களின் ஹக்குலே வன்னிப்பு வரிசை கீர்த்தனம் காரணிகங்கள் அவைகளை நீ கேட்டாய். அவைகளில் நாயக தன்மையின் தனதும் நபி பட்டத்தின் சொந்தமாம் கருமங்களில் ஒன்றும் அணுகாத வார்த்தையாக இருக்கில் அதையும் ஒப்புக் கொள்வதே கடமையல்லாது இங்காரு இடர்வார்த்தையை அண்டிடாதே. ஏனெனில் அவுலியாக்களின் காரணீகங்களை

இங்காரு செய்வது அன்பியாக்களின் திருஷ்டாந்தரங்களை இங்காரு செய்வதளவில் இழுத்திடும். ஆதலால் ஏதுக்கானால் ஒவ்வொரு வலியும் ஒவ்வொர் நபியின் கடத்தில் இருப்பார்களாயினதால். ஆதலால் அன்பியாக்களது முஃஜிஜாத்தைக் கொண்டு ஈமான் கொள்கின்றனர். அவுலியாக்களினுடைய கராமாத்து கொண்டு ஈமான் கொள்வார். அப்படியல்லால் இங்காரு செய்வது ஹக்கு புறத்தால் இருந்தே தீர்ந்திடும் வேதனை சதி, சோதனை வருத்திடும். ஏனெனில்; ஹதீது குதுஸியில் வந்திருக்கிறது, எனக்குள்ள ஓர் ஒலியை எவன் ஒருவன் நோவினை செய்திடில் யான் அவனோடு போர் செய்வது கொண்டு அவனுக்கு அறிவித்தல் செய்தேன் என்றதால் ஷெய்த்தான் நப்செனும் சத்துருவிருவரின் சர்ரைவிட்டும் அல்லாஹ் தஆலா காப்பாற்றி கொள்வானாக. அவனைக் கொண்டு துவங்கி கொள்கிறோம்.

இன்னும் அப்படியேதான் அகத்தில் ஒளிவு தெளிவு நற்குணம் சர்குணமுற்ற சங்கவாங்களாகின ஸூபியாக்களின் திருவாய்கள் மலர்ந்தருளும் மொழிகளை நீ கேட்கில் அதின் வெளிரங்கமானது வழி விழைத்திடாமல் நேர்வழியை காட்டிட வந்த நபிநாயகத்தின் மார்க்கத்திற்கு ஒத்துமையானது இல்லை என்று உனக்கு தோன்றில் நீ அதில் ஒன்றும் சொல்லாமல் தரிப்பட்டு நின்று நீ அறியாத அறிவை அறிவாளானால் அல்லாஹ்வில் நின்றும் அறிவருளும்படி அவனிடத்தே கேட்டுக்கொள். அதுவே அன்றி வேதனையை வருத்திடுமான வாதிடர் வார்த்தையில் சார்ந்திடாதிருப்பாயாக. ஏன் அவர்களின் வாக்குகளில் சிலதெல்லாம் ஷையிக்கினை சொற்களும் அவர்கள் செயர்களும் அல்லாத ஜனங்களின் விளக்கத்திற்கு அகப்படாத வார்த்தைகளுமாக இருக்கும். அது உள்ரங்கத்தில் சங்கை தங்கிய குர்ஆன், நாயக தையாளர், நபியின் ஹதீது, இருகளின் அகமியப்பொருள்கள் அநேகம் இருப்பதில் ஒன்றிருக்காவது ஒத்துமையாக இருக்குமே அல்லாது வேற்றுமையாகாது.

மீளவும் நீ அறி. மனுக்களின் ரூஹ்களாகிறது பலவிதம் ஆலத்தில் வழிப்படுகிற விதம் கொண்டு மூன்று வகையிலாக இருக்கிறது. ஒன்றாவது: தனித்த ரூஹ், அது ஜடலத்தோடு கொளுகு முதலும் சர்பு செய்யும். இரண்டாவது: ரூஹ், அது இருபதிக்கும் வேண்டுமாம் கருமத்திய நிரப்பத்தை தேடி எடுக்க சரிரத்துல் அடங்கி அதில் சர்பு செய்யிரது ஆசிகு மஃசூக்கோடும் வாகனத்தோடு அதில் ஏறுவன் போலும் கொளுக்கி நிருக்கும். மற்றும் ஜீவ சந்தினி இருக்களுக்கு மாற்றமாய். மூன்றாவது: பிரிந்த ரூஹ், ஜடலத்தை விட்டும் பிரிந்து மறுமையில் நடக்கும் கருமங்களுக்காய் கொளுகுதல் பாக்கியாய் இருக்கிறது. முன் கூறியதை அறிந்தாயாகில் இன்னும் அறிந்திடு நிறப்பமுற நாதாக்களுக்கு மூன்று தஸற்றுப் இருக்கிறது. சூரத்துக்கள் கொண்டு கொளமேடுக்குதல் ஜடலமுன்று படுதல். இது சரீரத்தில் கொளுக முன்னும் நடக்கும். அது ஸல்மானுல் பாரிஸி ரலியல்லாஹ் அன்ஹுவை அவ்யா மிருகதீங்கை விட்டும் நிவார்னை செய்ய அசதுல்லாஹ்வான அலி ரலியல்லாஹ் அன்ஹு ஜடலம் ஒன்றுபட்டு வந்தது போல். இன்னும் ஒரு விதம் ஜடலத்தில் உயிர் கொளிகிய பின்னும் அதெப்படிபோல் நிறப்பவாளர்கள் தங்கள் மூரீதுகளுக்கும் அவர்களை உகந்தபேருக்கும் முஸாகதாவில் அல்லது மனாமின் காழ்ச்சியில் வந்து பேசிக்கொள்வதும் நேர் நேரியை படிப்பித்து கொடுப்பதும் இப்படியாய் வெளிப்படுவது போல் இன்னமும் ஓர் லஹ்டத்தில் பலபல இடங்களில் காணப்பட்டவர்களை வெளிப்படுவது போலுமாயிருக்கும்.

கிதாபுகளில் பேசிவருவது கலீபுல் பான் ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் வெளிப்பட்டது போல் ஆக இப்பேர்படான் என்ற நடப்பு உயிர் உடலை விட்டு பிரிந்த பின்பும் பாக்கியாயிருக்கும். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் இரவில் அன்பியாக்களுடைய ரூஹ்களை வானுலகில் கண்டது போலும் பைத்துல் முகத்திஸ் பள்ளியில் இமாம் ஜமாஅத்தை தொழுகினது போலும். இரண்டாம் தஸர்ருப் என்னவானால் இன்ஸானிய்யத்தான ஜடலங்களில் ஸர்பு செய்வதாகும். அது ஜடலம் கண்டிப்பு கனமுடையதாயிருப்பதை மெருவுதலாகிய ரூஹானியாயும் நுரானியாயும் ஆகிவிட வேண்டியாய் அதேதுபோல் நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உடால் போல் அவர்கள் படகோலத்தின் அசல் நூரானி அவர்களின் ரூஹானிய்யானது மலக்கூத்து ஆலத்தின் சிற்றான பொருளாயிருக்குது. அதனால் தான் நாயகத்திற்கு காலை மாலையில் அவர்களின் உடலுக்கு நிழல் சாய்கை கிடையாது. இன்னும் பிலால,; உவைசில் கர்னி ரலியல்லாஹ் அன்ஹுமா உடைய உடற்போலும் அதற்கு ஏமுகம் முன்தகப் கன்ஜின் உம்மால் என்ற கிதாபில் இருக்கிறது. அபூஹுரைரா ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் பேசி வந்த ஹதீது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை பார்த்து கேட்டார்கள,; நீர் இஸ்லாமில் பிரயோஜனிக்குமான ஆதரவான அமல் எதை செய்தீர் சுவர்க்கத்தில் எனக்கு முன்பதாய் உமது இரு செருப்பு நடையின் சத்தம் இன்னிரவில் கேட்டேன் என்று. அதற்கு பிலால் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் சொன்னார்கள், என்ன அமல் நான் செய்தேன். எப்பவாகிலும் நான் ஒளுவெடுத்தால் உடனே சுன்னத் தொழுகை அல்லாஹ் தஆலா உதவியாக்குன மட்டுக்கும் தொழுவேன் என்றார்கள்.

இன்னும் ஓர் ரிவாயத்தில் வருவது பிலால் ரலியல்லாஹ் அன்ஹு அவர்களிடம் நபி நாயகம் கேட்டார்கள் ஏது காரணத்தால் சுவர்க்கத்தளவில் எனக்கு முந்தி விட்டீர். எப்பவாகிலும் சுவர்க்கத்தில் நான் புகுந்தால் எனக்கு முன்னாலே உமது நடை சத்தம் கேட்கிறனே என்றார்கள். அதற்கு பிலால் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் சொன்னார்கள். நான் பாங்கு சொல்வதில்லை, இரண்டு ரக்அத்து தொழுதே அல்லாமல் எனக்கு வுளு முறிச்சல் தொளுவதில்லை நான் வுளு செய்து இரண்டு ரக்அத் தொழுதே ஒளிய என்று சொன்னார்கள். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள் இதனால் தான் அப்பதவி பெற்றீர் என்றார்கள்.

இன்னும் அப்துல்லாஹ் பின் புரைதா ரலியல்லாஹ் அன்ஹு சொல்கிறார்கள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள் சுவர்க்கத்தை எனக்கு காண்பிக்கப்பட்டது, அப்போது அபி தல்ஹா உடைய பெண்ஜாதியை கண்டேன் பின்பு எனக்கு முன் ஒரு நடை சத்தம் கேட்டான். அது பார்க்க பிலால் வாரார்;. ஜாபிர் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் சொன்னார்கள் நபி நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள், சுவர்க்கத்தில் புகுந்தேன், ஒரு நடை சத்தம் கேட்டேன். இது என்னவென்று கேட்க மில்ஹானுடைய மகள் ஜொமிசா என்றார்கள்.

மஸாயிக்குமார்கள் சிலர்கள் கிதாபில் பேசி வரப்படுகிறது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காப கவ்சைனி அவ்அத்னாவில் மக்அது சித்க் என்னும் தளத்தில் ஒரு மனிதர் தலை தொடுத்து கால் வரையும் ஓர் பிடைவை போட்டு மூடி இருக்க கொண்டு உடன் அவர்களுக்கு காய்மாலம் தொட்டு கேட்டார்கள். நாயகனே இம்மனிதர் யார். இவ்விதம் அதபாயிருக்க வேண்டிய தளம் அல்லவோ என்றார்கள். அப்போது அல்லாஹ் தஆலா புறத்தால் சப்தம் உண்டாகியது. இவர் உவைஸ் 70 வருடத்திற்குப் பின் ராகத்து பெருகிறார். அவரை மறைத்துக் கொள்ளும் படி என்னிடம் கேட்டார். நான் அதற்கு ஓம் என்று ஜவாப் சொன்னேன்.

மூன்றாம் தஸற்றுப்பாகிறது வஸ்துவுகளில் ஸர்பு செய்வது அது எப்படி போல் என்றால் அந்தந்த வஸ்து கண்டிப்பாக இருப்பதை லதீபெனும் மெறுவுதலாக்கி போடுவது இப்படி செய்வது மலக்குகள் ஜின்கள் இவர்களில் நின்று உண்டாம். பல்கீசுடைய சிம்மாசனத்தை சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வரவழைக்க ஏவிய நேரம் அதை லதீபெனும் மெருவுதலாக்கி போடுவது. இப்படி செய்வது மலக்குகள் ஜின்கள் இவர்களில் நின்றும் உண்டாம். பல்கீசுடைய சிம்மாசனத்தை சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வரவழைக்க ஏவிய நேரம் இதை லதீபெனும் மெருகுதலாக்கி மலாயிக்கத்துகள் சர்பு செய்து பல்கீசையும் அவர்கள் சிம்மாசன மாளிகையும் ஹாலிராக்கியது போல் இது செய்தியை அல்லாஹ் தஆலா குர்ஆனில் திருவுளமாயிருக்கிறான். சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள் உங்களில் யார் பல்கீஸ் உடைய அர்சை கொண்டு வருகிறதென்று கேட்கவும் ஜின்களிடத்தில் யிப்ரீத் என்ற ஜின் சென்னது உங்கள் தளத்தை விட்டும் நீங்கள் எழும்பு முன் நான் கொண்டு வருகிறேன் எனக்கு இயலும்; என்றது. அப்போது ஆசிப் இப்னு பர்கிய்யா சொன்னது நீங்கள் கண் மூடி முழிக்க முன் நான் கொண்டு வருகிறேன் என்று சொல்லி அந்த படி ஹாலிராக்கியது போல், இந்த அர்சு அது இருக்கிறதை பிய்யதின் படி ஹாலிராக்க இடமாக மாட்டாது. ஆசிப் இப்னு பர்ஹிய்யா உடைய துஆவை கொண்டு சாட்டப்பட்ட மலக்குகளின் தஸற்றுப்பால் அல்லது அவருடைய தஸற்றுப்பால் அதை லதீப்பாக்குவதல்லால் வேறில்லை.

இன்னும் நீ அறி;ந்துகொள் நிறப்பமுற்ற நாதாக்களின் ரூஹ்கள் உதவி ஒளிக்குதலாகிறது பல வகையாக இருக்கிறது. ஒன்றாகிறது இந்த ளாகிறான ஆலத்தில் முகம் முகமாய் பேசிக் கொள்வதும் அறிவு சொல்லி கொடுப்பதும் கொண்டு தர்பிய்யத்து செய்வது. இரண்டாவது காணாதிருந்து தர்பிய்யத்து செய்வது இந்த தர்பிய்யத்து இருவர் காலத்திலும் உண்டாயிருக்கும். அந்த ஷெய்குடைய காலத்திற்கு பின்னாலயும் நடக்கும்.

முந்;தினது எப்படி எனில்; நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உவைசுல் கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தர்பிய்யத்து செய்தது போலும், ஜஃபர் சாதிக்; ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூ யஜீதுல் பிஸ்தாமி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தர்பிய்யத்து செய்தது போலுமாக இருக்கும்.

இரண்டாவதாகிறது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் ஜமானுக்குப் பின் தர்பிய்யத்து செய்வது போல் இனி முன் கூறிய பல வகையில் மூன்றாம் வகையாகிறது மனாமின் காட்சியால் தர்பிய்யத்து செய்வது ஆக இரண்டாம் வகைக்கும் மூன்றாம் வகைக்கும் பரக்கத்துகளுடைய பைளென்று சொல்லப்படும்.

இனி நாலாம் வகையாகிறது அவர்கள் உடலோடு கொளுகமுன் தனித்த ரூஹுகள் உடைய தர்பிய்யத்து. அது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்பியாக்களுடைய ரூஹ்களை தர்பிய்யத்து செய்தது போல் இந்த தர்பிய்யத்திற்கு ரூஹுடைய தர்பிய்யத்து என்று பேர் சொல்வார்கள்.

இனி நிறப்பமான தர்பிய்யத்தாகிறது தர்பிய்யத்து செய்பவர்க்கும் செயய்யப்பட்டவர்க்கும் இடையில் நிறப்பமான நேர் பாதை கொண்டே அல்லாது உண்டாகாது. நிறப்பமான நேர் பாதையன்பது மூன்று கர்மம் கொண்டாயிருக்கும். கால் நடை, உண்மையான நாவு, உண்மையான கல்பு இம்மூன்றும் ஆகும்.

அதற்கு விவரம், கால் நடை என்பது அதபுகள் எனும் வழியில் நடப்பதும் நற்குணங்கள் எனும் பாதையி;ல் ஏகுதலும் நப்சு கல்பு ரூஹ் சிற்றுல் ஹபி வல்அஹ்பா இவைகளின் மகாமுகள் எல்லாம் கடக்குதலும் ஆக இதுகளை தொட்டும் இபாரத்தாக இருக்கும். உண்மை நாவின்றது காமிலானவர்கள் தாலிபீன்கள் அளவில் இஸ்;தி◌ஃதாதெனும் ஏற்று வந்த முறமைப்படி சேர்த்து வைப்பதைத் தொட்டும் இபாரத்தாக இருக்கும். எதை சேர்க்கிறதானால் அந்த காமிலீன்களுக்கு வஹியின் புறத்தாலும் இல்ஹாமெனும் உதிப்பின் புறத்தாலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவில் நின்றும் அல்லது மலாயிக்கத்துகளினின்றும் பழக்கம் கேட்கிற புறத்தாலும் அல்லாஹ் தஆலா அவர்களுக்கு அறிவித்து கொடுத்ததாய் சேர்த்து வைப்பார்கள்.

இனி அந்த உண்மை நாவுடைய குருவாகிறவர்கள் எப்படி இருப்பார்கள், அவர்களின் வாக்கு உண்மையும் அவர்களின் மன்றாட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டதும் அவர்கள் செய்யும் துஆக்கள் ஏற்கப்பட்டதும் அவர்களின் இரவானது ஹக்கை தரிபடுத்தி பாதிலை போக்குவதாயும் ம◌ஃனைகளின் சிற்றுகளை வெளிப்படுத்துரவர்களாகவும் அவர்கள் படிப்பித்து கொடுப்பது உள்ளால் உள்ளபடியான நாட்டத்தளவில் சேர்த்துவிக்கிறவர்களாக இருப்பார்கள். ஆக இப்பேர்பட்ட கராமத்துகளைக் கொண்டு சங்கை செய்யப்பட்டவர்களாயிருக்கும்.

சாதிக்கான கல்பென்றது ஆலமுல் காயிப் ஆலமுஸ் ஸஹாதாவின் திஷ்டாந்தரங்கள் காமில் உடைய கல்பில் தொத்தரவில் முழிப்பிலாவது நித்திரையிலாவது மிதாலிய்யத்தான சூரத்தில் வெளியாகுவதாயிருக்கும். இன்னும் ஒரு விதம் சாதிக்கான கல்பென்பது அந்த காமிலீன்களுக்கு இல்மின் பிலவந்தத்தில் சுரூபங்களை விட்டும் உரியப்பட்ட அரோபியான ம◌ஃனாக்கள் தரிப்பட்டிருப்பதை தொட்டும் இபாரத்தாக இருக்கும். சுரொனி வெளியாவதற்கு அத்தாட்சி ماكذب الفؤاد ما رأي கல்பு கண்ட காட்சியை பொய் சொல்லவில்லை என்ற ஆயத்தும் அரூபிக்கத்தாட்சி فاوحي الي عبده ما اوحي அவனுடைய அப்தெனும் ரஸுல் அளவில் அவன்

ஜனித்ததை எல்லாம் வசனித்தான் என்ற ஆயித்துமாகயிருக்கும். அவுலியாக்களின் மனாகிபை கேட்குமிடம் யகீன் பலகீனமானவர்கள் பிசகிக்கொள்ளாதே உறுதிபடுத்திக் கொள்வதற்காய் இந்த மட்டும் பேசி வந்தது போதும். சிறப்பு பொருந்த மனாகிபெனும் கீர்த்தனம் சரித்திரங்கள் காரணங்கள் வண்ணிப்புகள் இவைகளை எடுத்துரைக்கவாகினன் துவக்கமாக சொல்வதை அறியுங்கள்.

முதலாவது ஹிகாயத்தாவது: கௌதுல் அஃலமின் தோள்மிசை முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பார்த்ததை வைத்த விஷயங்களை ஜவாஹிருல் கலாயித் எனும் காரர் மஜ்மஉல் பலாயில் என்று கிதாபில் வருவதை எடுத்து பேசி வருகிறார்கள். அதில் சொன்னார்களா:; நமது நாயகம் அஷ்ஷெய்கு அப்துல் காதிருல் கைலானி ரலியல்லாஹு அன்ஹு ஆகிறவர்கள் அவர்கள் தான் கௌதுல் அஃலம் என்ற லகபு அலம் என்று சொல்லப்படும். ஏன் கௌது என்று சொல்லப்பட்டால் அது கொண்டு நாட்டம் அவர்களாயிருக்கும். ஹக்கு தஆலா அவர்களை அது கொண்டு கூப்பிட்டதால் என்று மஸாயிகுமார்களை தொட்டும் எப்படி சொல்ல கேட்டேன் என்றார்கள். இப்படி போல் கௌதியா என்று கிதாபிலும் சொல்லப்பட்டிருக்கிறது. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இவர்கள் மிஃராஜில் கொண்டு அனந்திர பரிவட்டம் முஹம்மதிய்யத்தான விலாயத்தின் சிறப்பை கொண்டு சிறப்பு பெற்றார்கள் என்று, அதின் பிரிவு நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள், என் பாட்டனார் அவர்களை மிஃராஜுக்கு ஏற்றப்பட்டு சித்ரத்துல் முன்தஹா தளத்தை ஏற்றிய நேரம் ஜிப்ரயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதில் நின்று கொண்டு இனி ஒரு இறையின் மட்டுக்கு நான் மடுகினால் கரிந்து போவேன் என்று சொன்ன நேரம் அல்லாஹ் தஆலா அத்தளத்தில் எனது ரூஹை அனுப்பினான்; செய்யுதுல் அனாமில் நின்றும் நான் பிரயோஜனம் பெறுவதற்காய். அதனால் நான் சிறப்பும் பெற்று கனம் பொருந்திய நிஃமா வஞப்பமுற்ற ஹிலாபா அனந்திரம் கொள்வது மீது நான் ஹாசிலாக்கி கொண்டேன். அவ்விதம் ஹாலிராகினேன். என்னை புராக்கின் தலத்திலாக்கி என் மீது என் பாட்டனார் அவர்கள் ஏறிக்கொண்டு قاب قوسين اوادنى எனும் தளத்தில் ஏகினார்கள்.

அப்போது எனக்கு சொன்னார்கள்: என் பிள்ளையே! எனது கண்மணியே! இது என் பாதம் உமது தோள் மீது, உமதிருப்பாதமும் அவுலியாக்கடங்களின் தோல் மேல் என்றார்கள். நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர்களின் கஸீதாவில் சொல்லிருக்கிறார்கள். அந்த கஸீதா:

وصلت الي العرش المجيد بحضرة

فلاحت لي الانوار والحق اعطاني

نظرت لعرش الله قبل تخلقي

فلاحت لي الاملاك والله سماني

وتوجني الوصل بنظرة

ومن خلعة التشهير والقرب اكساني

வலுப்பம் தங்கிய அர்ஷளவில் என் ஹத்ரத்தில் சேர்ந்தான். எனக்கு ஒளிவுகளிரங்குச்சுது. ஹக்கு தஆலா எனக்கு தந்ததையெல்லாம் தந்தான் அல்லாஹ் உடைய அர்சில் இவ்வுலகில் சம்யோக முன்னமே நான் பார்த்தேன் எனக்கு மலக்குகள் வெளிப்பட்டு துலங்குனார்கள். அல்லாஹ் தஆலா எனக்கு பேர் வைத்தான். ஏன் அல்லாஹ் அவர்களுக்கு வைத்த பேர் கௌது. ஏன். எனது சிறிய தகப்பனார் செய்யிது முஹம்மது லெப்பையில் ஆலிம் அவர்கள் கஸீதாவில் சொல்லியிருப்பது.

سماك ربك غوثا شافي العلل

ووالداك بعبد القادر الجيلي

يامن يكني ابا محمد الكمل

مدعودين الهدي يامحي الدين

அல்லாஹ் வைத்த கௌது, தாய் தகப்பர் இட்ட பேர் அப்துல் காதிர். அரபு வழமையின் படி குன்யத்தெனும் சயிக்கினை கூப்பிடுதல் அபூ முஹம்மது தீனுல் இஸ்லாம் கூப்பிட்ட பேர் முஹியத்தீன். மூன்றவதின் பொருள் அல்லாஹ் தஆலா எனக்கு கிருபை பார்வை கொண்டு சேர்த்தலெனும் கிரீடம் வைத்தான். சிறப்பெனும் பரிவட்டம் புகுத்தினான். முடுகுதலெனும் உடுப்பையும் உடுத்தான். கனம் பொருந்திய ஆரிபான செய்யிது நிஃமத்துல்லாஹ் அவர்கள் தங்களின் சபீனா எனும் கிதாபில் சொல்லுகிறார்கள் சூபியாக்களான சாதாத்களில் ஒருவரை தொட்டும் சொல்ல கேட்டேன், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜில் எங்கள் தளத்தை எத்திய பொழுது அல்லாஹ் தஆலா உடைய சமூகத்தால் சப்தம் உண்டாச்சிது, முஹம்மதே தரிபடும். உமது நாயன் தக்தீஸ் செய்கிறான், அவர்களின் ஹாலை சரிப்பாக வேண்டி. ஆதலால் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள், அல்லாஹ்வின் உத்தரவின்படி எனக்கு அல்லாஹ் உடன் ஓர்

வக்துண்டு, முடுகுதலான மலக்கும் முற்சலான நபியும் எனக்கு விஸ்தீரணமானார்கள் அதில் என்று. அப்பால் வழுப்பம் பொருந்திய திரையின் பொருத்தால் இருந்து மயில் ரூபமாய் தாத்தியான ஆசை வெளிப்பட்டு வந்தது. அதை குறித்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்கவும் உதிப்பின் பிறத்தால் அறிவிக்கப்பட்டது, இது உமக்கு பிச்சலத்தில் உமது விலாயத்தையும் அனந்திரம் கொண்டு உமக்கு பின் தீனையும் ஹயாத்தாக்கி அப்துல் காதிர் என்ற நாமமும் கொண்டு கௌதுல் அஃலம் என்ற ஹக்கு கூப்பிடப்பட்டவர் என்று அறிவிக்கப்படும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சந்தோசம் உண்டாக்கி அல்லாஹ் தஆலாவை சுகுர் செய்து கொண்டார்கள். இதுவும் முன் குறித்த ஷெய்கு கௌதுல் அஃலமை தொட்டுமே பேசி வந்த சங்கதி, நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நவின்றதாக சொல்லுகிறார்கள், அல்லாஹ் சுப் ஹானஹு வதஆலா உடைய ஹபீபு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜிற்கு போகும் இரவில் அன்பியாக்கள், அவ்லியாக்கள் ரூஹ்கெல்லாம் எதிர் கொண்டழைக்க, வந்தது. அப்பால் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அர்சுக்கு முடுகிய போது அதை பார துரமாய் உயர்ந்ததாக இருக்க கண்டு அதன் அளவில் ஏறிக் கொள்ள ஓர் ஏணி வேண்டுமே என்றிருக்கும் போது அல்லாஹ் தஆலா எனது ரூஹை அவர்கள் அளவில் அனுப்பினான.; என் தோளை ஏணி வைக்கும் தளத்தில் வைத்தேன். அவர்கள் இரு பாதத்தை எனது தோள் மேல் வைக்க நாடிய போது என்னை குறித்து யார்? என்று ஆண்டவனிடம் கேட்கவும் இல்ஹாமாச்சிது. இவராகிறது உமது பிள்ளை. அவர் நாமம் அப்துல் காதிர். நான் உம்மை கொண்டு நபி பட்டத்தை முத்திரை இடாதிடில் உமக்குப்பின் அவர் அப்பட்டத்திற்கு தகுமாவார் என்று.

உடனே அல்லாஹ் தஆலாவை சுகுர் செய்து கொண்டு என்னுடைய பாட்டனார் அவர்கள் எனக்கு சொன்னார்கள், அருமை மகனே உமக்கே சோபனம். என்னை கொண்டு எனது நிஃமத்தையும் பார்த்து கொண்டீர், இதுவும் உம்மை கண்டவர்க்கும் கண்ட வரை கண்டவர்க்கும் கண்ட வரை கண்ட வரை கண்டவர்க்கும் சோபனம். என்று இப்படி 27 தலைமுறை வரைக்கும் சொன்னார்கள். இன்னும் துன்யா ஆகிரம் இருபதியிலும் எனக்கு உம்மை மந்திரியாக ஆக்கி கொண்டேன், எனது பாதத்தை உமது தோள் மீது வைத்தேன், உம்மிருபாதமும் அவ்லியாக்கடங்கள் புயங்களது மீதிலாயிருக்கும், பெருமை அடிப்பதில்லை, வீறு பேசவில்லை, எனக்குப்பின் நபி பட்டம் இருக்கில் அதை நீர் பெறுவீர். எனக்குப் பின்னர் நபி கிடையாது என்றார்கள். இதுவும் சங்கை வாழரான குருவுகளாகிய நிரப்பமுற்ற பெரியோர்கள் கிதாபுகளில் சிலதில் பேசப்பட்டிருக்குது.

நமது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அர்சு அளவில் ஏகிய போது கொஞ்சம் தரிப்பட்டார்கள். அவ்வேளை நமது நாயகம் ஹல்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரூஹ் ஹாலிராகி நபியின் பாதத்திற்கு தாழால் இவர்களின் தோளை வைத்தார்கள். அப்போது இவர்களிடம் நீர் யார் என கேட்கும் போது நான் உங்களின் பிள்ளைகளில் உள்ள ஓர் அப்துல் காதிர் என்று சொன்னார்கள். உடனே நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைய பரக்கத்தான பாதத்தை கிருபையாக

வைத்தார்கள். இன்னும் சொன்னார்கள், என்னுடைய கதம் உமது தோல் மேல் உம்மிரு கதமும் அல்லாஹ் தஆலா உடைய வலிகளடங்கள் தோள் மேலாக இருக்கும் என்று. இதுவும் சூபியான நாதாக்கள் எல்லோரை தொட்டும் நக்லாகினது.

நமது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னதாய் ஹிகாயத்து, அல்லாஹ் தஆலா எனது ரூஹை என் பாட்டனார் ஹபீபுல்லாஹ் அவர்களின் காட்சிக் கொண்டு சிறப்பாகிய பொழுது கேட்டான், முஹம்மதே! இந்த மனிதன் யார் என்று அறிவீரா? என்று. அப்போதவர்கள் சொன்னார்கள், நாயகா இவரை என்னை விட நீதான் அறிவாய் என்று சொல்லவும,; ஹக்கு சுப்ஹான வதஆலா சொன்னான் அவர் உமது பிள்ளைகளில் ஒருவர் ஹஸன் இப்னு அலிய்யின் பிச்சளம.; உமக்குப்பின் அவரை எனது மஹ்பூபாக்கி இருக்கிறேன். அவருடைய நாமம் அப்துல் காதிர். அன்பியாக்களுக்கிடையில் உமது கருமம் கீர்த்தியாகினது போல் அவுலியாக்கிடையில் அவர் கருமம் மேலைக்கி ஆகிவிடும் என்று. அவைகளை ஹக்கு தஆலா சொல்லியபின் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கன் சொன்னது, என் பிள்ளையே! என் கண் குளிர்ந்தவரே! உம்மை காண்பதினால் என் மனம் மணமாச்சு. என்னை காண்பதால் உம்முடைய மனம் மணமாச்சுது. நீர் எனது மஹ்பூபு. இன்னும் அல்லாஹ் உடைய மஹ்பூபு. எனக்குப்பின் என் விலாயத்து மகாமில் எனது வாரிசு. என் பாதம் உமது தோள் மீது வைத்தேன். உமது இரு பாதம் எனது உம்மத்தில் அவுலியாக்களின் தோள் மீதிலாக இருக்கும் என்றார்கள்.

ஷெய்குமார்களில் ஒருவரை தொட்டும் நகல் செய்யப்பட்டிருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் இரவில் 7 வானமும் ஏறிய பின் அர்சானது பேருப்பமும் உயர்ந்ததுமாய் கண்டிருக்கையில் ஆலமுல் குத்ஸில் நின்றும் ஒரு சத்தம் என் ஹபீபே ஏறும் என கேட்டது. அப்போதவர் கலகத்தில் உசாட்டினது இவ்வுயரம் கொண்டதில் நாம் எவ்விதம் ஏறுவோம் என எண்ணவும் அந்த ஹாலில் ஓர் முகம் அழகிய வாலிபர் வந்து நின்று திருசமூகத்திற்கு தகுமதான தஹியத்தது சலாம் சொல்லி இருந்தார்கள். முபாரக்கத்தான கடமை இவர்கள் தோள் மிஷை வைத்திட பாதினான நாவினால் தேடினார்கள். உடனே நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாதத்தை வைத்தார்கள். எழுப்பினார்கள். அர்சலவிலேகு மட்டும் உயரலேந்தார்கள். அப்பால் வாலிபரை நோக்கி அவருடைய நாமத்தை குறித்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள். பின் இரு கையையும், நெஞ்சு மேல் வைத்தார்கள். நபி திருசமூகம் அதபுடன் வாலிபர் நின்றார்கள். அப்போது நபி நாயகத்தினகத்துல் ஊசாடினது. இவ்வாலிபருக்கு தீர்ச்சயில்லா பதவியும் விலாயத்துடைய மகாம்களில் எல்லா மகாமிருப்பது போல் தேப்பதாய் அவ்வேலை அல்லாஹ் பிரத்தால் அறிவிப்பு. எனது உகப்பு தோழரே இவர் உமது பிச்சளத்தில் உள்ளவரும் உம்முடைய கண் குளிர்ச்சி மகிழ்ச்சியுற்றவர் என்றும் அவர் நாமம் அப்துல் காதிர். உமது தெளிவு மார்க்கத்தை வழிகேடர்க்கும் நேரம் ஹயாத்தாக்கி வைப்பவர் முஹியத்தீன் என்று கூப்பிடப்பட்டவராவார், என்பதாய.; இவ்வளவும் கேட்ட உடன் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இம்மொழியை கேட்டு சந்தோசமாகி மிக துஆவும் செய்து சொன்னார்கள். என் கண்ணின் ஒளிவே! எனது அஹ்லு பைத்தின் தெளிவே!

என் பாதம் உமது தோல் மேல் மேலாகியது போல் உம்மிரு பாதம் அவுலியா அடங்களின் தோல் மீதிலாகும். அப்பாதத்தை ஒப்புக் கொள்பவதற்கு வளுப்பமாகிய பதவியுண்டு. ஒப்புக்கொள்ளாதவரை அவுலியா தகுதியை விட்டிறக்கி தாழ்த்தப்படும் என்று நவிந்தார்கள்.

ஷெய்குல் மஷாயிக் அப்துல் லதீபுல் பக்தாதி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வர் ஷெய்கு கமாலுத்தீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கிதாபு லதாயிபுல் லதீபிய்யாவில் பேசி வருகிறார்கள். கௌதுல் அ:்லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ரூஹ் நபி நாயகத்தின் சமுகமுலகை தெரிசிக்க ஆசியின் கடுமயால் அவுலியாக்களின் மகாமில் கடைசியாக இருக்கின்ற தமது மகாமில் நின்றும் தீர்ச்சையாகி செய்து மெருகுதலுடன் எடுத்து நபியவர்களி;ன் காட்சியால் சிறப்பும் பெற்று நபியவர்கள் மி:்ராஜை கொண்டு தனதுய்ய பைலால் பைலும் நபி நாயகத்தில் நின்றும் எடுத்தார்கள். தங்கள் தோள் மேல் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பாதத்தை வைக்கும்படி தேடின போது காதிரே என்றார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பாதத்தை வைத்தார்கள். அப்போது நபி நாயகத்துடன் எதிர் மொழி அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா உடைய பிரத்தால் வந்தது. இவ்வுடல் உயிருடைய யார் எவரோ என்ற இவரோ என்று. அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள் நாயகா இஸ்கு முஹப்பத் நிறப்பத்தால் என்னுடன் கலந்தவராக இருக்குராம். அவரின் பேரை நீதான் அறிவாய் என்று. அப்போது சத்தம் உண்டாச்சுது. இவர் உமது பிள்ளைகளில் நின்றும் ஹஸனுப்பு அலி பிச்சளத்திலுள்ளவர் அப்துல் காதிரு என்று. அவருக்கு நாமம் வைத்தேன் ம:்சூக்கிய்யா தகுதியிலும் விலாயத்தின் துரயிலும் இவரைப் போலொரு ஒலியுமில்லை. இவர் புரிப்பமான மஹ்பூபும் நேமமான ம:்சூக்குமாயிருக்கும். உமது அருமை பொருந்திய சிறிய ஓர் பிள்ளையாயிருக்கும் என்று மொழிகள் கேட்டு அல்லாஹ்வை சுக்று செய்து கொண்டு சொந்தமாம் பைழு கொண்டு அவர்களை தனதாக்கினார்கள். இன்னும் என் பிள்ளையை உம்மை கண்டுதால் என் மனமும் என்னை கண்டதால் உம்முடைய மனமும் மனம் புரிந்துது. என் பாதம் உமது தோள் மேல் உமது பாதம் என் உம்மத்தின் அவுலியாக்களின் தோள் மேல் என்றார்கள். ஆதலால் கௌது நாயகம் அவர்களுடைய தோள் மேல் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பரக்கத்தான பாதம் வைத்ததின் அடயாளம் காணப்பட்டும். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைய லான்ஜினை இருந்தது போல்.

சரீயத்து ஹகீகத்தை சேகரித்து இருந்த ஷெய்கு ரஷீத் எங்கப்பட்டவர்கள் ஹிர்ஜுல் ஆஷிகீன் எனும் கிதாபில் சொல்லுகிறார்கள். மி:்ராஜிரவில் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புராகை கொண்டு வந்து நபி நாயகத்தை ஏறச் சொல்லும் போது அது இடம் கொடாமல் இருந்திச்சு. உன் முதுகில் ஏற நீ ஏன் இடம் தரமாட்டாய் என்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்க, நபி நாயகத்தை பார்த்து கியாம நாளில் நீங்கள் சொர்க்கம் புகும்; போது என் மீதில் ஏறி போவீர்கள் என வாக்கு தருவேன் என்று என புராக் சொல்லுமே அப்படியே உன்னுடைய நாட்டம் உண்டாம் என நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லவும,; கியாமத்து நாளில் எனக் கூற தயாளமாக

இருக்கும் என்று தங்களின் பரக்கத்தான கையை என்னுடைய பிரடி மேல் அடிக்கவேண்டும் என தேடுகிறேன், என்று புராக் சொல்லவும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய திருக்கரத்தை இடித்து எடுத்தார்கள். அது மிகவும் சந்தோசமானது. எது மட்டுக்கும், அதின் உயிருக்கு உடல் விஸ்தீனமாகாது என்ற மட்டுக்கும். இன்னம் அதின் சந்தோசத்தின் விரிவினால் தன் சரீரம் 40 மூலம் வளர்மை பூரிப்பு உண்டாக மட்டுக்கும், அப்பால் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு லஃதத்துக்கு அதில் ஏறுவதில் தரிபட்டு நின்றார்கள். அது ஏன் மறைவான பூரிப்பத்தளவில் சேர்ந்து ஒரு ஹிக்மத்துக்காக.

அக்கணம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடைய ரூஹ் வெளிப்பட்டு வந்து நின்று என் நாயகமே உங்கள் பாதத்தை என்னுடைய தோள் மேல் வையுங்கள், ஏறுங்கள் என்று சொன்னார்கள், நபியுல்லா அவ்விதம் வைத்து ஏறினார்கள், என் பாதம் உம்முடைய தோள்; மேல் உம்முடைய பாதம் எல்லா ஒலியின் தோள் மேலயாயிருக்கும் என்றும் சொன்னாhகள்.

என் உடப்பிறப்பே உனக்கு அச்சம் பூட்டுறேன் அச்சம் பூட்டுறேன் நீ இன்காரு செய்து கொண்டு இவர்களுடைய ரூஹ் மிஃராஜ் இரவில் எவ்விதம் ஹாலிராகிவிட்டுது என்று புதுனப்படுகுறார்களே அக்கூட்டத்தில் நின்றும் ஆகிவிடாதே, ஏன் என்றால் அப்படி ஹாலிராபினது அவர்கள் அல்லாதவரில் நின்றும் விஷயமாயிருப்பதற்காய். இது சஹீஹான ஹதீதில் வந்திருப்பதை முன்னமே நாம் சொல்லிக்காட்டினது போல் அது என்னவானால் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றும் அன்பியாக்களின் ரூஹுகளை வானத்திலேயும் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை சுவனத்திலும,; உவைஸுல் கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மக்அது சித்கிலயும,; தல்ஹாவின் பெண்ணை சுவன பதியிலும் கொண்டது போல் இன்னமதில் மில்ஹான் மகளார் ஜொமிஷா எனும் பெண் பிள்ளையின் காலதி சப்தத்தை கேட்டது போலும் ஆக இப்படி எல்லாம் ஹதீது வந்திருப்பதல்லவா, அது போல தான் கௌது நாயகம் அவர்களுடைய ரூஹும் ஹாலிராச்சு என்பதாம்.

ஹிர்ஜுல் ஆசிகீன் எனும் கிதாபிலும் அதெல்லாததிலும் பேசப்பட்டது, நமது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் இரவில் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை சந்திக்கவும் சாலிஹான நபி சாலிஹான உடன்பிறப்புக்கு சோபனம் என்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறிய பின் எனது உம்மத்தில் வரும் ஆலிம்கள் பனி இஸ்ராயீல்களில் வந்த நபிகளைப் போல் என்று நீங்கள் சொல்லி இருக்கிறார்கள். இப்போது அவர்களில் ஓர் ஆலிம் என்னுடைய பழக்கம் பேசிக் கொள்வற்கு ஹாலிராக, என்றுமென நாடுகிறேன் என்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொல்லவுமே கொஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ரூஹை ஹாலிராக்கினார்கள். வந்து இருவரும் சலாம் சொல்லி கொண்டு பின் உமது பேர் என்ன? என்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்டார்கள். முஹம்மதிப்னி முஹம்மதிப்னி முஹம்மது

கஸ்ஸாலி என்று நவின்றார்கள், உமது பேரை கேட்டதல்லாது தகப்பன் பாட்டன் பேர் கேட்கவில்லையே என்று மூஸா நபி அவர்கள் சொல்லவுமே, உங்களிடம் நாயகன் உமது வலது கையில் இருப்பது என்ன என்று உரைக்க அது என் அசாவென சொன்னால் போதாதோ, அது என் அசா அதில் ஊன்றிக் கொள்வேன். இது கொண்டு ஆட்டை ஓட்டுவேன், இன்னம் அதில் வேரே ஹாஜத்துகள் உண்டு என்றெல்லாம் ஏன் சொன்னீர்கள் என்று கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கேட்கவும் ஜவாப் சொல்லுகிறார்கள், ஹக் தஆலா நமக்கு மறைவானது வெளியானது எல்லாம் அவன் அறிந்தவனாக இருக்கையில் ஏத்தவன கேட்பதேல்லாம் அவனோடு பேசிக் கொள்வதால் நான் மருவுதலாயிருக்கவே தான் என்று அறிந்து அவ்வேலைக்கு உள்ளவீதம் பேச்சை அதிகப்படுத்தினேன். நான் இன்பமடைந்து மருவுதல் பெற வேண்டி எதற்;காக என்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னதற்கு இமாம் சொன்னார்கள், என்னையும் நீங்கள் பேசி கொள்வதற்கு தானே தேடினார்கள் உங்களோடு பேசிக்கொள்வது கொண்டு நானும் இன்பம் பெறவும் மருவுதலாயிருக்கவும் தான் பேச்சை அதிகப்படுத்தினேன் என்றார்கள், அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் கரத்தே இருக்கும் அசாவினால் கஸ்ஸாலி இமாம் அளவில் ஷைக்கினை காட்டி மூஸா நபியோடு நீர் அதபை பேணவில்லையா என்றார்கள். அது அசாவின் அடையாளம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சரீரத்தில் வெளியானதாக இருந்ததாம்.

ரஹீகுத் துல்லாப் எனும் கிதாபில் ஆரிபீன்களில் கனம் பெருந்திய ஷெய்கு முஹம்மதுல் ஜிஸ்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள், என் உம்மத்தில் நின்றும் சில ஆண் பிள்ளைகளை மிஃராஜ் இரவில் கண்டேன், என் மகாமில் அல்லாஹ் தஆலா எனக்கு காண்பித்து தந்தான் என்று. அது மகாம் மஹ்மூது அவர்கள் அல்லாத அன்பியாக்கள் ரஸூல்மார்கள் உம்மத்து அவுலியாக்கள் அவர்களில் ஒருவரும் கூட்டாகாத தளம்.

ஷெய்கு நிஜாமுத்தீனில் கன்ஜவி ரலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புராக்கில் ஏறினார்கள், அதில் லகான் வரியன் தோலில் இருந்தது என்று.

இமாம் நஜ்முத்தீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கிதாபுல் மிஃராஜில் அது சமாசாரம் பேசிவருவதினால் சொல்லுரார்கள், பின்னு சித்ரத்துல் முன்தகா அளவில் உயர்த்தப்பட்டது, அப்போது நிறம் அனைத்தும் இருக்கின்ற ஒரு மேகம் பேதித்தது, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நின்று விட்டார்கள், அப்பால் கலம்கள் எழுத்து மிரச்சலின் சப்தம் கேட்குமிடம் சேர்ந்தார்கள், அர்சொலிவில் மறைக்கப்பட்ட ஓர் மனிதரை கண்டு இவர் மலக்கா நபியா? என்று கேட்க சொல்லப்பட்டது, இவர் ஓர் மனிதன் துன்யாவில் அவர் நாவு அல்லாஹ்வை திக்ரு செய்வதால் இரணித்தது. அவர் கல்பு பள்ளிவாசல்களை கொண்டு கொழுகியிருந்தது, அன்னை பிதாவை ஒருபோதும் ஏசாதிருந்தவர், நாயகனை கண்டு கொண்டார் என்று சொல்லப்பட்டது, உடனே சுஜூது செய்தார்கள், அவ்வேலை நாயகன் பழக்கம் பேசிக்கொண்டு முஹம்மதே என்று கூப்பிட்டான், அவர்கள் லப்பைக்க யாரப்பு என்றார்கள், நீர் நாடியதை கேளும் தரப்படும்

என்றான். நீ அறிந்து கொள் உவைஸுல் கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மஃஅது சித்கில் நித்திரை செய்யிரவர்களாக இருந்தார்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கண்டு கொள்ள நஷீபில்லாமல் அவ்அத்னா மகாமை விட்டும் பிந்தி விட்டார்கள். கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வலுப்பமுற்ற நிஃமத்தும் உயர்த்தியான தகுதியும் உண்டாச்சுது, இது அல்லாஹ் உடைய வருசை கட்டளையிடுதல், அதுவை அவன் நாடிய பேருக்கு கொடுப்பான், அல்லாஹ்வாகுகிறவன் வழுப்பமான வருஷையுடவனாயிருக்கும், இதற்காகத்தான் செய்யிது முஹம்மதுல் மக்கி அவர்கள் பஹ்ருல் மஆனி எனும் கிதாபில் சொல்லுரார்கள், அவுலியாவுக்கரசர் அப்துல் காதிருல் கைலானி ரலியல்லாஹு அன்ஹு ஆகிறவர்கள் மஹ்பூபிய்யா மகாமில் வழுப்பமான பரிசித்தமுண்டு, அவர் அல்லாதவர் படியலை, உவைஸுல் கர்னி ஆனவர்கள் இஸ்ஸத்தெனும் கூடாரத்துள் மறைக்கப்பட்ட மஹ்பூபில் உள்ளவராக இருக்கும், கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஹ்பூபிய்யா பிரசங்கம் ஹபீபுல்லாஹ் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நாயகத்தின் மஹ்பூபிய்யா பிரசங்கம் போலவாயிருக்கும், ஏன் இவர்கள் அவர்கள் கடத்தில் இருப்பர்களானால்,

**இரண்டாம் ஹிகாயத்தாவது அவர்கள் பிறந்த சமாசாரத்திலாயிருக்கும்.**

நபி நாயகத்தின் ஹிஜ்ரத் 470 ஆண்டில் ரமலான் பிறை முதலாம் இரவில் பிறந்தார்கள். அவர்கள் பிறப்புக்கும், வயதிற்கும், வபாத்திற்கும் ஓர் பைத்தில் அடங்கின தொகையும் பொருளிணக்கமுமாய் சொன்னவர்க்கு ஹைரை அல்லாஹ் மிகுதமாக்கிய புதுமையில் எதைத்தான் சொல்வோம்.

ان باز الله سلطان الرجال

جاء في عشق لوفي في كمال

இந்த பைத்தின் பொருள், அல்லாஹ் உடைய பாஜான அவுலியாக்களுக்கு சுல்தானான நாயகமானவர்கள், இஸ்கேனும் ஆசையில் வந்தார்கள், கமால் எனும் நிறப்பத்தில் வபாத்தாக்கப்பட்டது, இஷ்ப் என்றதின் இலக்கம் 470 அவர்கள் பிறந்த வருடமாச்சுது, கமால் என்றதின் இலக்கம் 91 அவர்கள் வயதாச்சுது, இஷ்கையும் கமாலையும் சேர்த்தால் மொத்தம் 561. அவர்கள் வபாத்தான வருஷமாச்சுது, அவர்கள் பிறந்த இரவால் 5 கருமம் வெளியாச்சுது, முதலாம் கருமம் அவர்களின் தகப்பனார் தீனுக்கும் ஹக்குக்கும் வெளிவான மகிமை தங்கிய செய்யிது அபூ ஸாலிஹ் மூஸா ஜன்கி தொஸ்து ரலியல்லாஹு அன்ஹு ஆனவர்கள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சங்கையான தோழர்பனுடகும், நேர் வழி இமாம்களும் வலுப்பமான அவுலியாக்களோடும் வர கண்டார்கள், வந்து சொன்னார்கள், என் பிள்ளையே! ஸாலிஹுடைய தகப்பனே! அல்லாஹ் தஆலா உமக்கொரு மகனை தந்திருக்கிறான். அது எனது பிள்ளை, என் மஹ்பூபு. அல்லாஹ் உடைய மஹ்பூபு அவுலியா

அக்தாபுகளில் அவருக்கு சில கருமம் உண்டாகும் அன்பியா ரஸூல்மார்கிடையில் என் கருமத்தை போல்.

இரண்டாம் கருமம் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நன்மாராயம் சொன்னபின் அவர்களோடு வந்து அன்பியா ரஸூல் அனைவரும் மனாமில் தகப்பர் அவர்களுக்கு நன்மாராயம் சொன்னார்கள். மஃசூமீன்களான இமாம்களைத் தவிர உள்ள அவுலியா அடங்களும் உமது பிள்ளையின் வழிப்பாட்டின் கீழாக இருக்கும். அவர் பாதத்தை அவர்கள் கழுத்தின் மேல் வைப்பார்கள். அவருக்கு அவர்கள் வழிப்படுவது அவர்களின் பதவிகள் ஏறுவதற்கு சபபாயிருக்கும். அவ்வழிப்பாட்டை விட்டு திருப்பியவன் முடுகுதல் எனும் உச்சத்தை விட்டு நீக்கி பேர் கேட்டேனும் தாழ்த்தியளவில் வீழ்வான் என்பதாய்.

மூன்றாம் கருமமாவது கீலாநூரில் இவர்கள் பிறந்த இரவில் ஆண் பிள்ளையாகவே தவிர பிறக்கப்படவில்லை. அப்படி ஆணாய் பிறந்தவர் 1100 பேர்கள் அனைவரும் அவுலியாக்களாய் சர்பு செய்யும் ஆண் பிள்ளைகளாய் பிறந்தார்கள். ஷெய்கு முஹம்மது ஈஸா புர்கான் யூரி உடைய மல்போனும் தொட்டும் நகலா இருப்பது போல் அவர்கள் மொழித்தல்களின் பொருள் கௌதிய்யத்தான நுத்பாவெனும் முத்தானது நபிவய்யதான சரீஅத்தை கொண்டு வந்தனம் செய்யும் தகப்பரின் முதுகன் தண்டை விட்டு துப்புரவாகிய தாயார் எனும் சிப்பியின் கெற்ப குவளறையில் தரித்து உருவை சமைந்து தெளிவை பிறந்த பொருட்டு ஆலன்கள் ஒளிவை இலங்கிய பொழுது அல்லாஹ் தஆலா உயர்த்தி ஓர் ஹத்ரத்தை பேணி அனேக அவுலியாக்களை ஆபாகளின் முதுகை விட்டும் வெளிப்படுத்தி தாய்மார்கள் கற்பத்தின்; அளவிளாக்கி இந்த கௌதுடைய பைளுகளை பெறுவதற்கு அலத்திலவர்களை வெளிப்பிரமாக்கினான்.

நாலாம் கருமம் ரமலான் மாசத்தில் கிழக்கு வெளுப்பது முதல் வெளுத்து அஸ்தமிக்கமட்டும் தாய் முலை பால் குடிக்கவில்லை. நோன்பு திறக்கும் நேரமல்லாது பால் குடிக்கார்கள், இது அளவில் இஷாரா செய்தவர்களாய் தாங்களே பைத்திலும் சொல்லியிருக்கிறார்கள். அந்த பைத்து

بدايةامري ذكره ملا الفضا

وصومي في مهدي به كان شهرتي

இதின் பொருள் எனது கருமத்தின் துவர்க்கமானது அதை எடுத்து பேசுவது ஆலம் வெளி நிறம்பி இருக்கிறது, நான் மடியில் குழந்தையாக இருக்கும் நாளிலே நோன்பு பிடித்தது. அது கொண்டு எனது பிறசித்தமுன்டானது.

ஐந்தாம் கருமம் முதலாம் கீர்த்தன் பாடத்தில் நாம் எடுத்து பேசி வந்ததின்படி நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கதமை இவர்கள் தோளில் வைத்ததால்

அதன் அடையாளம் இவர்கள் தோள் மேல் காணப்பட்டுவதாயினது. கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை கீழாநூரில் பிறப்பிக்கப்பட்டது, காபை ஜிஹா பிரட்டி ஜீலான் எனவும் நவிலப்படும், நிஸ்பதின் ஏ யுதன் ஜியல்லி என்றும் சொல்லப்படும், தங்களின் தாயார் சரீநத்தானவர்கள் பெரும் வயதின் நத்தாஷை முரிந்து அறுவது வயதில் இ;ப்பாலகரை பெற்று எடுத்தார்கள். இதுவும் வழமைக்கு மாற்றமான ஓரு காரணீகமென்டறிக. கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை பிறப்பட்டுது ஒளிவு இலுங்கியவர்களாயும் ஹைபத்துடையவர்களாயும் ஒருவரும் சத்தி பெறார்கள். முகத்தை பார்த்து கொள்வதற்கு ஏன் அதின் தெளிவு துளம்பர கடுமையால் இன்னம் ஹைதரு அலி அவர்களின் தத்துவம் சுத்த வீரத்தன்மை அறிவயமுடையவர்களாயும் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அமர்த்தி பெற்றவர்களாயும் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் நீதம் செலுத்திரவர்களாயும் அபூபக்ருல் சித்தீக்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உண்டையுடவர்களாயும் யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய அழகிலங்கியவர்களாயும் முஹம்மதிய்யதான சர்குணங்கள் கொடுக்கப்பட்டவர்களாயும் பிறந்தார்கள்.

**மூன்றாம் ஹிகாயத்தாவது மற்ற அவுலியாக்களை விட இவர்களின் மற்தபா உயர்த்தி என்பதின் பேரில் ஷெய்குமார்கள் சாட்சி சொன்ன சங்கதி.**

இவர்களின் குத்பிய்யத்தில் உயர்த்தியாம் மற்தபாவைக் கொண்டு ஒவ்வொருவரை நன்மாராயம் கூறிய பெரியோரை எடுத்து பேசிவரும் 'ரவ்ழத்துன் நவாலிர் வநுர்ஹதுல் ஹவாதிர்' என்ற கிதாபில் ஆறாம் பாடத்தில் இமாம் முஹம்மதுப்னு சஈத் எனும் அவ்ரவு அஷ்ஹது சொல்லுகிறார்கள்.

شهدت برقبته جميع مشايخ

في عصر كانوا بغيرتنا كر

அவர்கள் காலத்தில் யாதுமொரு பொருத்த குறைவில்லாமல் அவர்கள் தகுதியை கொண்டு ஷெய்குமார்கள் சாட்சி சொல்லியிருக்கிறார்கள்.

اما الذين تقدموا قد بشروا

بقدومه الميمون اكرم طائر

முந்தி இருந்த மூத்தாகளானவர்கள் இவர்களுடைய பரக்கத்து செய்யப்படா என்ற முன்னோக்கிவருவதை கொண்டு நற்குறி நன்மாராயம் சொன்னார்கள் என்று அறிக.

كالعالم البصري هو الحسن الذي

عمرطريق السالكين لسائر

மற்றெல்லொருக்கு சாலிகீன்களுடைய பாதையை துலக்கி துலாம்பரமாய் பரிபாரம் செய்வித்த ஹஸனுல் பஸரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை போல.

من عصره السامي الي عصر الشري

ف القطب محي الدين عبد القادر

மற்றெல்லார் என சொன்னதேவரோகில் ஹஸன் பஸரி நாயகம் காலம் தொடுத்து சிறப்புள்ள முஹியத்தீன் அப்துல் காதிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலம் வரையும் உள்ளவாகள்;.

مامن رئيس كان صدر زمانه

الاوبشرهم بعبد القادر

அந்த அந்த காலத்துடயோருக்கு தலையாயிருந்து தலைமைக்காரர் எல்லாம் அவர் அவர் கவ்முகளுக்கு இந்த அப்துல் காதிர் நாயகத்தை கொண்டு நன்மாராயம் சொல்லிய அல்லாமல் இல்லை.

هوصاحب القدم الذي خضعت زفا

ب الاولياء له بغير تشاجر

அந்த அப்துல் காதிரான அவர்கள் அவுலியாக்களுடைய பிரடிகள் எல்லாம் பிணக்கம் இல்லாமல் அவருடைய பாத்திரத்திற்கு சாஷ்டாங்கம் செய்திட்டுதே அப்பேர்.

اذقال ماموراعلي كرسيه

قدمي علي رقبة جميع اكابر

ஹக்கு தஆலா புறத்தால் உதாரத்தின்படி எனது கதம் பெரியோரான அவுலியா அனவோர் ரகபத்தின் பேரிலாயிருக்கும். எனவே தமது சிம்மாசனத்தில் இருந்து சொன்ன நேரத்தில்.

فحنت جميع الاولياء رؤسهم

لجلاله باديهم والحاضر

அப்போது அவர்களின் வழுப்பத்துக்கவர்களில் உள்ளோரார் பிற ஊரார் எல்லோரும் அவர்களின் தலைகளை சாய்த்திட்டார்கள்.

لم يمتنع احد سوي رجل سها

عن حاله من اصفهان مكابر

இஷ்பஹான் தேஷத்தில் இருக்கும் பெருமை அடித்ததன் ஹாலை மறந்து தலை சாய்த்தலை விட்டும் விலகிய ஓர் மனிதனை தவிர மூத்தவர்கள் ஒருவரும் விலக்கில்லை.

قد كان بين الاولياء معظما

بالعلم والحال الشريف الفاخر

பெருமைப்பாடும் சிறப்புமுள்ள நடபிடிக்கை அறிவினால் அவர் அவுலியாக்களுக்கடையில் வழுப்பப்படுத்தப்பட்ட உயர்ந்த மனிதன்.

لكنه غلبت عليه شقاوة

سبقت كابليس اللعين الكافر

என்கிலும் அம்மனிதன் மீது மூதேவித்தனம் முன்னின்று மிகைத்திட்டது, இப்லீஸ் லஃனதுல்லா பெருமை அடித்ததால் ஹக்குடைய ஏவலின்படி சுஜூதை விட்டொழிந்து தன் தகுதி மட்டில் அந்து காபிராகினது போல் இவரும் தன் தகுதிகள் இழந்தார். மேல் கூறிய ரவ்லதுன் நவாதிரில் ஐந்தாம் பாடத்தில் சொல்லப்பட்டது. யசாரின் சந்ததியான அலியின் தந்தையரான ஹஸனுல் பஸரி நாயகம் தொடுத்து ஷெய்கு முஹியத்தீன் அப்துல் காதிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியாகும் வரையில் எந்த ஓர் ஷெய்கும் ஓர் மஜ்லிசில் கட்டுப்பாடாக்கி சஜாதா விழுருப்பதில்லை. ஷெய்கு முஹியத்தீன் அப்துல் காதிருல் கைலானி வெளிப்படுவார் என நன்மாராயம் சொல்வதும் அவரது காலத்திற்கு அவர் குத்பு என்ற சமாசாரம் நவில்வதுமாயிருந்தார்களே அன்னியில்லை.

**நாலாம் ஹிகாயத்தாவது அவர்களின் நாமத்தை ஒளுவில்லாமல் திக்ரு செய்பவர் ஹலாக்காகுரதாயிருந்திலும் பின்பு அதை பொருப்பு செய்து அப்படியா காலமலர்ந்து சமாசாரத்திலும் பேசுவதாயிருக்கும்.**

'குல்சாரில் மஆனி' எனும் கிதாபில் சொல்லப்பட்ட செய்தி ஜலாலிய்யத்தென்கிற சிபத்து இவர்களின் ஹாலது துவர்க்கத்தில் மிகைப்பா இருந்ததால் இவர்கள் நாமத்தை ஒளுவில்லாமல் ஓதினவன் அவன் உடையை விட்டும் சிரசு பிறிந்திடுவதாயிருந்தது. அதின் பின்னர் தங்கள் பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து இது ஹாலை விட்டு விட்டும் மேலைக்கொரு காலம் அல்லாஹ்வின் நாமத்தையும் என் நாமத்தையும் அதபு ஹுர்மத்தில்லாதே திக்ரு செய்யும் காலம் வரும் என்று சொல்லவும் அந்த ஹாலை உம்மத்து பேணியிருக்கிறதிற்காக விட்டுவிட்டார்கள்.

இன்னம் சில பேர் சொல்லிருப்பது இந்த ஹால் பராபத்தியாகி (பிரஸ்;தாபமாக்கி) இவர்களின் சிறப்பான நாமத்தை ஒருவரும் ஒளுவில்லாமல் எடுத்துரைக்க தன்னை பயந்து தரானி பெறாதிருந்த போது பகுதாதூர் அவுலியாக்கள் ஒன்று சேர்ந்து இவர்கள் பால் ஒதுங்கி இக்கொடுரத்தை விட்டு பொருப்பு செய்யும் இடயாருக்கியங்கி அருள் புரிய தேடினார்கள். அப்போதிவர்கள் சொன்னது இப்படி நடப்பு வேனும் என்ன நான் உகக்கவில்லை, ஆகிலும் ஹக்கு ஜல்லஜலாலுகு என்னுடன் பேசினான், நீர் எனது நாமத்தை வளுப்பமாக்கினீh.; நாம் உமது நாமத்தை வளுப்பமாக்கி வைத்தோம். எவரொருவர்; சிறப்பித்தாரோ, அவரையும் சக்கென்றி சிறப்பிக்கப்படும் என்பதாய், ஷெய்குமார்கள், பேசி வந்து இருக்கிறார்கள், அவர்களின் சிறப்பான நாமத்தை ஒளுவில்லாமல் சொன்னவன் மீது இரணம் கிட்டுமயம், அவர்கள் சமூகத்துக்கு நேர்ச்சை செய்தால் அதை நிறைவேற்றவும் உறுப்பில்லாகுவதில் வீழ்ந்திடுவான். ஆதலால் நிறைவேற்ற வேண்டும்.

வெள்ளிக்கிழமை இரவில் இவர்கள் சமூகத்தொரு மதுர தித்திப்பான வஸ்துவை ஹத்யா செய்து பாத்திஹா ஓதி அதை புகராக்களுக்கு பங்கிட்டு இவர்களால் உதவி வேண்டி கண்டால் மிகுந்த உதவிகள் செய்வார்கள். சில நேரத்தில் முதல் இப்பேரில் காவலாக கௌது நாயகத்தின் ஹழ்ரத்திற்கு பாத்திஹா ஓதினால் இருலோகத்தின் நிஃமத்தையும் விஸ்தீரணமாக்கப்படும். ஒளுவின் பேரில் இருந்து நிரப்பம் கொண்டு கலப்பருதலுடனே இவர்கள் பேரை திக்ரு செய்வானாகில் அன்று அவனுடைய தீங்குகளையும் அழித்து சந்தோசம் கொடுக்கப்பட்டவனாயிருப்பான்.

இன்னும் ஒருவர் சொன்னார்கள், என்னுடைய ஷெய்குமார் சொல்ல கேட்டிருக்கிறேன், நமது நாயகம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சைபுல்லா என்றும் ஹிர்ஜுல் முர்தலவி என்றும் பேர் வைக்கப்பட்ட ஹிர்ஜில் யமானி என்பதை ஓதுவதில் மிக பராமுகமாக இருந்தார்கள. அதனால் அவர்களின் ஹாலின் துவக்கத்தில் ஜலாலிய்யாத்து வந்து மிகைத்து முன்கிற்கள் களுக்குகளை தரித்திட்டும் வாழ்போலும் மனமுறன்டு சேவனின் ஈராலில் நீரை தைத்திடும் அம்பு போலவுமாகினார்களா.; ஆதலால் அவர்களின் பெயரை யாராவது ஒருவர் ஒளுவில்லாதே திக்ரு செய்தான் என்று வருகில் ஆலத்தார்கரசன் அல்லாஹ் உடைய

தத்துவமெனும் வாளாலே வதை செய்வதிலகப்பட்டு தலை வேறு உடல் வேறாகுவான். இப்படியாய் நடந்து வருகையில் நபி நாயகத்தை கஸ்பில் கண்டு நீர் தானே வாளாகிவிட்டதால் அதை ஓத தேவையில்லை, என்று சொன்ன உத்தரவின்படி சில நாலாய் ஓதாமல் விட்டு திரும்ப நபியவர்களின் இஷாராவினால் அவ்வோதல் அளவில் மீண்டார்கள்.

இப்போது பேசி வந்த கலாமுக்கு உதவியாகுது, ஒரு ஹிகாயத்து, அதாகிறது விலாயத்துடையோரில் ஒரு மனிதர் அவர்களிடத்தில் போய் இது பெரும் சங்கதிப்பும் பாரதும்பமும் விட்டு மனிதர்களுக்கு மாயை கொடுக்க மன்றாடினார். அப்போது அவரை முறாகபாவில் இருக்கும்படி நாயகம் உத்தரவு செய்தார்கள். அவர் முறாகபாவில் இருந்து அதின் நடுவில் காழ்ச்சி காண்டார். எப்படி அர்சின் கீழ் ஒரு வாழ் கொழுகப்பட்டிருக்குது, அதில் ஈ என சொல்லப்படுகின்ற பூச்சிகள் போய் விழுந்து அவ்வாளினால் தன் தன் நப்ஸுகளை வெட்டிக் கொண்டு இருபாதியாய் வீழ்ந்து மாழுது. இப்படி காண்கும் நேரம் ஷெய்கு கண்ணை திறவும் என்று ஏவவும் திறந்தார். ஷெய்கு சொன்னார்கள் ஈகளானது வாளுடன் போர் போவிடில் தன் தன் தலை அறிந்து பாழாகுவதல்லாது வேரை காணுமோகானாது, ஆதலால் கலப்பட்ட உகப்பாளர் என பிறையை அதபு ஹுர்மத்தோடு எனது ஹாலிலும் திக்ரு செய்வார். எவ்வேலையிலும் குத்தம் பொறுத்து மன்னிப்பு செய்வதெனும் முன்தாணியை பிடித்துக் கொள்வார். எதிர்மாத்தம் உடைய பொருத்த கேடர் அதபை போனார்களாதலால் அதியோடத்து பாலாகுவதில் வீழ்வார் என்று நாயகம் சொல்லி இன்னும் சொன்னார்கள். நானாகுறவன் என்னுடைய வாள் உரை உருவப்பட்டது எனது வில்லு நாண் பூட்டப்பட்டது. என் அம்பு தப்பாதே குறிப்பு நேராய் தைப்பது என் குதிரை ஜீன் வைக்கப்பட்டது. நானோ அல்லாஹ் உடைய பொறுப்பு நூராதே இருக்கப்படுகின்றது என்றார்கள். பஃகுதாதுரவர் அனைவரும் நாயகமிடம் மன்றாடி கொண்டதின் பின் முரண்டுகாரராய் விட்டும் இந்த ஹாலிலாகுவதை நீக்கப்பட்டது,

**ஐந்தாம் ஹிகாயத்தாகிறது முஹம்மதி மார்க்கத்துடைய ஓர் மனிதருடன் ஈஸா நபி அவர்கள் பேர் சொல்லி திரியும் வேதக்காரரில் ஒருவன் தர்க்கமிடும் சங்கதியில் கௌது நாயகம் கப்ரை உடைய மய்யிதை ஹயாத்தாக்கி வைத்த சமாசாரத்தில் பேசுவது,**

'அஸ்ராருத் தாலிபீன்' எனும் கிதாபில் பேசிவரப்பட்டது, ஒரு நாளைத்தினம் ஓர் தானத்தில் நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நடந்து போகும் போது ஒரு முஸ்லிம் ஒரு நஸ்ரானியும் தர்க்கமிட்டிருக்க கொண்டு அதை குறித்து விசாரணை செய்தார்கள். அப்போது அம்முஸ்லிம் சொன்னார் இந்த ஈஸவீ சொல்கிறான் எங்கள் நபி ஈஸா உங்கள் நபியை விட ஏற்றம் என்று. அப்படி இல்லை நமது நபி ஏத்தமென்று நான் சொல்கிறேன் என்றார். அப்போது நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த நஸ்ரானியை பார்த்து கேட்டார்கள், ஏது முகாந்தரத்தினால் உங்கள் நபி ஏற்றம் என்று உரைத்தாய் என்று. அதற்கு அவன் எங்கள் நபி செத்தாரை ஜீவனுடையார் ஆக்குவார் என்றான். அப்போது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் நானாகிறவன் ஒரு நபியில்லை ஆகிலும் எங்கள் நபி முஹம்மதை துயர்ந்தோர்களில் ஒருவன்தானே. நான்

ஒரு மய்யித்தை ஹயாத்தாக்கிவிட்டால் எங்கள் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கொண்டு ஈமான் கொள்வாயா என கேட்டார்கள். ஆம் என்று சொல்லவும், எங்கள் நபியுடைய வருசையை நீ காண்பதற்கு உக்கி இரந்த பழைய ஓர் கப்ரை காண்பி என்றார்கள். அம்மனிதன் ஓர் கப்ரை காண்பித்த உடன் அவரிடம் நாயகம் கேட்டார்கள் உங்கள் நபி மய்யித்தை ஹயாத்தாக்கும் வேலை ஏது வார்த்தை சாற்றுவார்கள் என கேட்கவும் அல்லாஹ்வின் உத்தரவால் எழும்பு என்பார்கள் என சொன்னான். அப்போது நமது நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவனுக்கு சொன்னார்கள் இந்த கப்ரை உடையவன் இவ்வுலகில் இராகம் பாடியாய் இருந்தவன்; அப்படி இராகம் பாடிக்கொண்டே எழும்பி வரும்படி ஹாயாத்தாக்க நாடுவாகில் அப்படியே செய்வேன் என்றார்கள். அவர் நல்லது என்று சொல்லவும் கப்ரை நோக்கி கும் பியித்னி - என் உத்தரவின்படி எழும்பிடு என்று நாயகம் சொல்லவே கப்ரு பிளந்து மய்யித்து சீவனுடையானாய் இராகம் பாடி கொண்டு எழும்பினான். அப்போது அந்த நஸ்ரானி இது கராமத்தையும் நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருசையையும் கண்ட போது நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கைய்யில் உடனே இஸ்லாமாகி விட்டார்.

**ஆறாம் ஹிகாயத்தாவது அவர்களுடைய சிறப்பான இஸ்மெனும் நாமமாவது வழுப்பமான இஸ்முல் அஃலம் போல் ஒன்றவிஷகலம்.**

'ஹகீகத்துல் ஹகாயிக்' என்ற ரிஸாலாவில் பேசப்பட்டது, ஒரு பெண் பிள்ளையானவள் தன்னுடைய பிள்ளைகடாளில் விழுந்து தாழ்ந்து விட்டுது அந்த பெண் பிள்ளை கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சமூகம் வந்து என் பிள்ளை கட்டிலில் தாழ்த்து ஹலாக்காக்கிவிட்டுது. எனது நிய்யமுருதிப்பாடு என் பிள்ளை என்னளவில் மீட்டிவிக்க கூடி எவர்கள் நீங்கள் என்று சொல்லவும். உன் வீட்டுக்குபோ பிள்ளையை கண்டுக் கொள்வாய் என்றார்கள். வந்து பார்க்க காணவில்லை, திரும்பவும் நாயகத்திடம் போய் சொன்னதற்கு வீட்டிற்கு போய் பார் என்று சொன்னார்கள.; வந்து பார்க்க காணவில்லை. மூன்றாம் தடவையும் அழுது சலித்தவலாய் வந்து சொல்லவும் முன் சொல் போல் தான் சொன்னார்கள். வந்து பார்க்கும் போது பிள்ளையை கண்டாள். பின்பு நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மஹ்பூபிய்யா வாட்டையின் படிக்கு சொல்லுகிறார்கள். நாயகனே அந்த பெண் பிறந்தவளிடத்தில் இரண்டு விடுத்தம் என் சொல் நிறைவேறாமல் வெட்கப்பட செய்தாயே ஏதுக்காய் என்று கேட்க, நன்குடயருழுமிறா ஜனான் அல்லாஹ் பிறத்தால் சப்தமுன்டானது, அவளுக்கு நீர் சொன்ன நேரமே அது உண்மையாயிட்டுது, முதலாம் தடவை மலக்குகள் அப்பிள்ளையின் பிரிந்த உறுப்புகளை சேகரித்தார்கள். இரண்டாம் தடவையில் நான் அதற்கு சீவன் கொடுத்தேன், மூன்றாம் விடுத்தயில் கென்கையை விட்டு வெள்ளிப்படுத்தி அம்மங்கை வீட்டளவில் சேர்தேன் என்பதாய். அப்போது நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் நாயனே ஆலம் அனைத்தையும் ஆவோன் மேவலினால் அமைத்தாயே ஒரு ஜமானும் ஒரு நேரமும் முந்தாதிருக்கும் ஹாலில் இன்னம் மறுமை நாளில் தீர்ச்சையில்லா கோடான கோடி சீவாத்துமாக்களின் பிரிவாமுருப்புகளனைவயயும் ஒருவன் வெட்டி விளிக்கும் நேரத்துள் சேர்த்துப்போடுவாயே, இதோ ஒரு ஜடலம் அதை உயிராக்கி

அவள் வீட்டளவில் அனுப்புவது ஒருசித்து வேலைத்தானே இப்படி பிற்படுத்துவதில் இருந்த ஹிக்மத்தென்னவென்று கேட்ட போது, தத்துவத்துடைய ரப்பு புறத்தால் சப்தம்; வந்தது நீர் தேடுவதை என்றி கொள்ளலாம் உமது மினி ஜன்ஜலமுன்டாயினதற்கு பகரம் நாம் தருவோம் என்பதாய், அவ்வேலை கௌது அவர்கள் சாலையப்பட்டு தங்களின் திருமுகத்தை மன் மீது வைத்து சொன்னார்கள். நாயகனே நான் ஒரு படைப்பாகினவன் நான் படைக்கப்பட்டவதையும் வீதத்தால் எனக்கு தேடிக்கொள்வதே தகும், நீயோ படைத்தவன் உனது வலுப்பம் நீ படைத்தவன் என்னும் தகுதிக்கு கொடை கொடுப்பதே உனக்கு தகும் என்று முனாஜாத் செய்யவும் ஹக்கு தஆலா புறத்தால் வந்த மொழிச்சல் உம்மை ஜும்ஆ நாளில் கண்ட வரகவோரும் முகற்றபான வலியாவாh.; நீர் மண்ணளவில் பார்த்தாலும் பென்னாகிவிடும் என்பாய். அந்நேரம் நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், நாயகனே இவ்விரண்டால் எனக்கு ஒரு புறயோஜனிப்பிள்ளை இதைவிட வழுப்பமான கருமமாயும் எனக்குப் பின்னும் அது தரிப்பட்டு இருப்பதிலும் புரயோஜனம் செய்வதாயும் இருக்க ஓர் கருமம் கொடு என்றார்கள். வள்ளனம் சிறப்புக்குரிய அல்லாஹ் தஆலாவில் நின்றும் சல்லா நம்லி அரைந்தது உம்முடைய நாமங்களை தவாபிலும் குணப்பாடு செய்வதிலும் என்னுடைய நாமத்தை போலவே ஆக்கிக் கொண்டேன். இனி யாதாம் ஒருவன் உமது அஸ்மாக்களின் நின்றும் ஓர் இஸ்மை ஓதுவானாகில் எனது அஸ்மாவில் நின்றும் ஓர் இஸ்மை ஓதியவன் போலாகி விடுவான் என்றான்.

**ஏலாம் ஹிகாயத்தாவது மலக்குல் மவ்து கைபற்றின ரூஹ்களை ஹலாசாக்கிய கருமத்தில் பேசுவதாயுருக்கும்.**

அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிதாவான செய்யிது ஷெய்குல் கபீரு அஹ்மதுர் ரிபாயீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தொட்டும் ரிவாயத்து, அவர்கள் சொன்னார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஒரு ஹாதிமை வபாத்தாக்கப்பட்டது, அவர் பெண் ஜாதி கௌது நாயகம் அவர்களிடம் வந்து சாலயப்பட்டு நீங்களே தஞ்சம் என்று துங்கி புருஷனை ஹயாத்தாக்கி தர வேண்டும் என தேடினாள். உடனே நாயகம் அவர்கள் முறாக்கபாவில் முன்னோக்கி பார்க்க மறைவான ஆலத்தில் மலக்குல் மவ்த்து அலைஹிஸ்ஸலாம் அன்று வாங்கிய அர்வாஹைக் கொண்டு வானத்தளவில் ஏறவதாய் கொண்டு என்னுடைய ஹாதிம் இன்னானுடைய ரூஹை தந்திடும் என கேட்டார்கள். அதற்கு மலகுல் மவ்து சொன்னார்கள் நான் நாயகன் உடைய ஏவலான ரூஹ்களை கைப்பற்றி அவன் வல்லபவாஷலில் ஒப்பி வைப்பேன். என்னுடைய நாயகனின் ஏவலினால் நான் வாங்கிய ரூஹை உம்மிடம் தருவதற்கு என்ன இடமாகும் என்று சொன்னார்கள். அதற்கு நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் ஹாதிமுடைய ரூஹை தந்திடும் என மடக்கி மடக்கி கேட்டார்கள். தரக்கூடாதென விலகிக் கொள்ளவும் மலக்குல் மவ்து அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கைய்யில் கூடையின் கோலம் போல் மஃனவிய்யான பாத்திரம் கைப்பற்றிய ரூஹுகள் இருந்த பாத்திரத்தை இழுத்து எடுத்தார்கள். அச்சனம் எல்லா ரூஹும் தன் தன் ஜடலத்தலவே மீள்ச்சையாச்சுது. உடனே மலக்குல் மவ்து நாயகனோடு முனாஜாத் செய்து சொன்னார்கள். நாயனே எனக்கும் உன்

மஹ்பூபு உன் வலி அப்துல் காதிர்க்கும் இடையில் நடந்த கருமத்தை நீ அறிந்தவன். அவர் அரசியல்பு ஊச்சித கத்துவத்தால் நான் கைப்பற்றிய ரூஹ்களை எடுத்து கொண்டாரே என்றதற்கு, ஹக்கு ஜல்ல ஜலாலகு சொன்னான் மலகுல் மவ்தே கௌதுல் அஃலமாகிறவர் எனது மஹ்பூபு மத்லூப் அவர் பணிவிடையான் ரூஹை ஏன் கொடாதிருந்தீர். அதனால் அநேக ரூஹெல்லாம் உமது பிடியை விட்டு போய் விட்டது. இவ்வேலை நீர் சலிப்பிலா நீர் என்றான்.

**எட்டாம் ஹிகாயத்தாவது பெண்ணை ஆணாக்கிய ஆகத்தில் பேசுவதாயிருக்கும்.**

இந்த மனாகிபுகளை பாரிஸு பாஷையால் கோர்வை செய்த ராவி சொன்னார்கள். என் ஷெய்காகிய ஷெய்கு தாவூதுல் காதிரி சீர்கயிர் அவர்களை தொட்டும் நான் கேட்டேன், கௌதுல் அஃலமளவில் ஓர் மனிதனார் வந்து நின்று இந்த உயர்த்தியான வாயலானது ஹாஜத்துக்களுக்கு கிப்லாவாகவும் தன்பமென்று துங்கும் நாமமாயிருக்கும். ஆதலால் அவ்வாசல் அளவில் யான் ஒதுங்கி ஓர் ஆண் குழந்தை வேண்டும் என தேடுகிறேன் என்று அவர் மொழியவும், கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னது நீர் நாடினதை ஆண்டவன் உமக்கு தர தேடினேன். அப்படியே தருவான் என உரைத்தார்கள். அப்பால் நாள் தோறும் இவர்கள் மஜ்லிசுக்கு வரத்து போக்கை பற்றிப் பிடித்திருந்தார். முத்லகான காதிரின் கற்பனையினால் அவருக்கு ஒரு பெண் பிறந்துது. அதை எடுத்து கௌது நாயகம் அவர்கள் அளவில் கொண்டு வந்து நம்முடைய பேச்சானது ஆண் குழந்தையை பற்றி அல்லவோ. இது பெண்ணாகவல்லவா பிறந்திருக்கிறது என்று சொன்னார். அவருக்கு கௌது நாயகம் சொன்னார்கள். அதை பிடவையால் பொதிந்து கொண்டு வீட்டளவில் போவும், மறைவான திரைகளுக்கு பிரமாலிருந்து வெளிப்படும் புதுனத்தை காண்பீர் என்று உரைக்கவும் பொதிந்து எடுத்து வீட்டுக்குப் போய் பார்க்க அல்லாஹ் தஆலா உடைய குத்ரத்தால் ஆணாகா ஆகிவிட்டது.

**ஒன்பதாம் ஹிகாயத்தாவது அவர்களை பற்றிப்பிடிக்கும் முரீதுகளை இம்மை மறுமை இருபதி நெருப்பின் கரிப்பை விட்டு நிவாரணை செய்ததுலே பேசி வருவது,**

ஹக்குக்கும் தீனுக்கும் தகுதி தலமயாயும் உலமா உருவாக்கு முன்னிலை இமாமயும் வந்த அலவிய்யின்; சந்ததி எனும் ஷாஹ் முஹம்மதின் புத்திரர் என்ற மியாம் நிதாம் முஹம்மதின் புதல்வராகிய காழி அமாதின் குமாரரான மிய்யான் அத்மதுல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு என்பவர்கள் சொல்கிறார்கள், புரகானியூர் பட்டணத்தில் நம் வீட்டை சேர்ந்த வீட்டு தயாராகிய முசலயுடைய ஓர் ஹிந்தி மனிதன் உண்டாயிருந்தாh.; அவருக்கு நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சம்கத்தை பற்றி பரிபூரன் நின்னயமுண்டு. அவர்தனை கௌது நாயகத்தளவில் பேசுரவரா இருந்தார். அவர் வருஷம் தோறும் மிகுந்த உஜிபனம் உண்டாக்கி நல்லொர் பெரியோர் புகராக்களை அழைத்து கொடுப்பதும் மெளுகு திரி விளக்குகள் வைப்பதும் வாசனை அலங்கார வகை கொண்டு மஜ்லிசை அலங்காரமாக்குவதும் இப்படி எல்லாம் கௌது நாயகத்தின் மேல் முஹப்பத் வைத்து செய்கிறவராக இருந்தார். அப்பால் அவர்க்கு மரணகாலம் வந்து மறைக்கவும் அவர் ஜாதி வழமையின் படி செத்தவனை சுடும் சுடுகாட்டிற்கு எடுத்துப் போகி மிகுந்த விறகுகளை சேகரித்து வேண்டிய நெய்யும் ஊற்றி

விறகின் அருகே வைத்து நெருப்பை மூட்ட மூட்ட இவரை நெருப்பு கரிக்குதல் இல்லை. உபகாரியான அல்லாஹ் உடைய குத்ரத்தினால் அவரின் ஒரு ரோமத்தில்லாவது நெருப்பு குணப்பாடு செய்யவே இல்லை. ஆக இப்படி அவரின் ஹாலை கண்ட போது அவர்களுக்கிடையில் பேச்சு பழக்கம் நீறமாக்கி ஒத்தொருமித்து முடிவு வார்த்தை சாற்றினார்கள். இவரை ஓடு தண்ணீரில் எடுத்து போட்டு விடுவோம். அவரவர் நப்ஸை நரகம் விட்டு ஹலாசாக்கி கொள்ள வேண்டியதாய் என்று. அப்படி அவர்கள் அவரை தண்ணீரில் எடுத்து போட்ட பின்பு அவுலியாக்களில் ஒருவர் மனாம் கண்டார்கள், கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து சொல்வதாய் புலான ஹிந்தியானவன் எனது மஃனா பிரத்தால் உள்ள பிள்ளைகளில் ஒருவன் அஹ்லுல்லாஹ்கள் இடத்தில் சஃதுல்லாஹ் என்று பேர் வைக்கப்பட்டவனாய் என்னளவில் சேர்ந்திட்டான். ஆதலால் அவனை எடுத்து குளிப்பாட்டு தொழுவித்து அடக்கம் செய்யும.; திட்டமாக அல்லாஹ் தஆலா எனக்கு வாக்கு தந்திருக்கிறான். உமது முரீதுகளை இம்மையிலும் மறுமையிலும் நெருப்பினால் சுடுவதில்லை என்றும், துன்யாவில் முத்திராங்கத்தினளகை கொண்டு தான் கடைசி முத்திரை போடுவேன் என்றும். ஆகையால் இந்த நேமமாகிய நிஃமது மீது எல்லா புகழும் அல்லாஹ்வுக்கா இருக்கும்.

**பத்தாம் ஹிகாயத்தாவது மனாம் காட்சியில் கௌதுல் அஃலம் அவர்கள் நின்றும் ஷாஹ் நக்ஷபந்தி அவர்கள் பைழு பெற்ற பாங்கை பேசுவதாயிருக்கும்.**

'ஹவாரிகுல் அஹ்பாப்' என்ற கிதாபில் இருப்பதை ஐந்தாம் பாபில் ஷெய்கு பஹாவுத்தீன் முஹம்மதுன் நக்ஷபந்தி என்ற குத்பவர்களை எடுத்து பேசும் சமாசாரத்தில் ஷெய்கு ஆரிப் அப்துல்லாஹில் பல்கி ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் சொல்லுரார்கள் புஹாரா பட்டனத்தில் குடியிருந்து பரிபாரம் செய்வோரான நிறரப்பமுற்ற ஷெய்குமார்கள் சொல்லக் கேட்டதாய் ஹுவாஜகி சர்மஸ்து ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்ல நான் கேட்டேன் அவர்கள் ஹிகாயத்து பேசி வந்தார்களாம் ஒரு நாளைத்தினம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மேல் வீட்டின் மேல் ஜமாஅத்துடன் நிற்கும் போது புஹாரா ஊர் பக்கம் நோக்கினார்கள். சங்கை வாங்களுடைய வாடை வீச முகந்தார்கள். அப்போது சொன்னார்கள் என் வபாத்திற்குப் பின் 157 வருடம் திலைந்த நேரம் முஹம்மத்திய குனம் குடிப்பு புகட்டப்பட்டு பகாவுத்தீன் முஹம்மத் நக்ஷபந்தி என்ற நாமம் தரித்து கலந்தர் கிளையில் ஓர் மனிதர் வெளிப்படுவார். என் சொந்தமான நிஃமத்தால் பாக்கியம் பெறுவார் என்பதாய.; நாயகம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல் போலவே தான் வந்து முடிவாச்சுது.

இன்னம் ரிவாயத்து செய்யப்படுகுது, இந்த ஷாஹ் நக்ஷபந்தி ரஹிமஹுல்லாஹ் என்பவர்கள் தங்களின் ஷெய்கு செய்யிது அமீர் குலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் தரீக் எடுத்து முறீதான போது ஹக்கு தஆலா உடைய தாத்தின் இஸ்மைக் கொண்டு பராமுகமாக இருக்கும்படி ஷெய்கு அவர்கள் ஏவினார்கள். அவர்கள் கல்பில் இஸ்முல் அஃலம் சூரத்து படியமாகுதில்லை. அதனால் ஷாஹ் நக்ஷபந்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கு மனமுட்டுதல் உண்டாகி மைதான் வெளிக்கி போனார்கள். அவ்விடத்தில் ஹிழ்ர்

அலைஹிஸ்ஸலாம் அவர்களை வர கண்டார்கள். அப்போது அவர்களுக்கு இவர்கள் முன்னோக்கி ஸலாம் சொல்லவும் ஹிழ்ர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள், ஓய் பஹாவுத்தீனே கௌதுல் அஃலமில் நின்றும் எனக்கு இஸ்முல் அஃலம் வந்து சேர்ந்தது. உமக்கு நான் உணர்ச்சை வருத்துரென். அவர் சமூகம் நோக்கிக் கொள்ளும். அவருடைய பரக்கத்தால் நீர் பாக்கியம் சீக்கரம் பெற வேண்டி என்று ஹிழ்ர் நபி சொன்னார்கள். அப்பால் அடுத்த இரவில் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மனாமில் ஷாஹ் முஹம்மது நக்ஷபந்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கண்டார்கள். தங்களுடைய வலது கையை கொண்டு அவர்கள் நெஞ்சளவில் இஷாரா செய்யும்படியாய் கண்ட மாத்திரமே ஷாஹ் அவர்களுடைய அகத்துல் இஸ்முல் அஃலம் சூரத்து கௌது நாயகத்தினுடைய சிற்றினால் பதிவாச்சிது. ஏன் ஐந்து விரலும் இஸ்முல் அஃலமின் அச்சரம் போல் ஆனதால், பின்பு ஷாஹ் எந்த ஒரு வஸ்துவையும் கண்டால் அதில் அல்லாஹ்வை கண்டார்கள். அதை குறித்து கேட்டதில் சொல்லுராா்கள் கௌதுல் அஃலம் என் மீது நிஃமத்து அருளினார்களே அந்த இரவில் பைளுகளில் நின்றும் ஒரு பைலும் வேண்டுதல் கிருபையில் நின்றும் ஒரு இனாயத்து என்று சொல்லி இன்னம் சொன்னார்கள் அவ்விரவு முதல் முன்னுள்ள ஹாலைவிட என் ஹால் அதிகமாகி வருவதை காணுகிறேன் என்றார்கள். ஷாஹ் நக்ஷபந்தி என்ற நாமம் பரிசித்தமான முகமாவது அவர்கள் கல்பில் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்முல் அஃலமை நக்ஷாக்குனதும் தாலிபீன் உடைய கல்பில் ஷாஹ் அந்த நகைஷ ஹிஜ்பாக்குவதாக இருக்கும். கதமி ஹாதிகி என்ற கௌது நாயகம் அவர்கள் சொல்லிருப்பதை குறித்து மனிதர்கள் இவர்களிடம் கேட்கும் போது சொன்னார்கள், என்னுடைய கண் மீதிலாயிருக்கும் என்றும் அல்லது என் கல்பு மீதிலாயிருக்கும் என்றார்கள். அல்லாஹ் தஆலா உடைய திருவுள பொருத்தம் அவர்கள் எல்லார் மீதிலாகட்டும்.

**பதினொராம் ஹிகாயத்தாவது ஹுவாஜா முஈனுத்தீனுல் ஜிஸ்தி கௌதுல் அஃலமால் பைலு பெற்ற வரிசையை பேசுவதிலாயிருக்கும்.**

'லதாயிபுல் ஜொரா' எனும் கிதாபில் குத்பு அமீர் முஹம்மதுல் ஹுஸைனி ரலியல்லாஹு அன்ஹு என்பவர்கள் ஆலத்திற்கு குத்பான நஸீருத்தீன் மஹ்மூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னதாய் சொல்கிறார்கள்: கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ் தஆலா உடைய ஏவலால் கதமி ஹாதிஹி அலா ரகபதி குல்லி வலிய்யின் லில்லாஹி என்று சொல்லிய போது அவுலியாக்கள் எல்லாம் ரகபத்தை தாழ்த்தினார்கள். அவ்வேளையில் ஹவாஜா முயீனுத்தீனுல் ஜிஸ்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாலிப பிராயமாய் ஹுராஸானூர் மலை பொதும்பில் ஜிஹாத் ரியாலத்து செய்பவராய் இருக்கிறார்கள். நாயகன் இப்படி சொல்லும்படியேவினதின் பேரில் ஹுவாஜா முயினுத்தீனுல் ஜிஸ்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உதயமாகி கஸ்பான உடன் மற்றும் அவுலியாக்களுக்கு முன்னமே தங்கள் தலையை மண்;மேல் வைத்து சொன்னார்கள்: எங்கிலும் அவர்கள் கதம் என் தலை மேலாக இருக்கும் என்று. இந்த நடப்பு கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அல்லாஹ் தஆலா கஸ்புடனாக்கி அப்போது அவுலியாக்கள் கூட்டத்தில் இருந்து சொன்னர்கள் கியாதுத்தீன் உடைய பிள்ளையானவர்

அல்லாஹ் தஆலா உடைய அவுலியா அஹ்பாப் எல்லாரும் ரகபத்தை சாய்க்கும் முன் அவர் முந்திக் கொண்டார். அவருடைய தாட்சனத்தாலும் அவர் அதபின் அழகினாலும் அல்லாஹ் ரஸூலுக்கு மஹ்பூபாகி விட்டார். ஹிந்து ராஜியத்தின் தஸற்றுபை மேலைக்கு அவருக்கு கொடுக்கப்படும் என்றார்கள். அவர்கள் சொல் போல் ஆச்சுது.

மௌலானா ஷெய்கு முஹம்மது ஜமாலுத்தீனுல் ஸுஹ்ரவர்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சியருல் ஆரிபீன் என்ற கிதாபில் சொல்கிறார்கள்: ஓர் மலையில் இரவும் பகலுமாய் 57 நாள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் ஒன்றாகவே ஷெய்கு முயினுத்தீனுல் ஜிஸ்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சேர்ந்து இருந்தார்கள் என்று. இன்னும் அவர்களால் இவர்கள் பைளு பலதும் பெற்றுக் கொண்டார்கள்.

செய்யிது அதமுன் நக்ஷபந்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நுகாதுல் அஸ்ரார் எனும் கிதாபில் சொல்லுகிறார்கள், ஷெய்கு பரீதுத்தீன் முஹம்மத் கன்ஜல் சகர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மஜ்லிசில் ரிகாபில் அவுலியா மீது ஷெய்கவர்கள் கதம் வைத்த சமாசார பேச்சு நடந்தது. அப்போதிவர்கள் சொல்லுகிறார்கள் அக்காலத்தில் யான் இருப்பேனாகில் அவர்கள் பாதத்தை என் ரகபதில் வைப்பேன். இன்னும் பொறு அடைவனால் என் கண்ணில் என்றும் சொல்வேன். ஏன் எனது ஷெய்கு முஈனுல் ஹக்கு வாழ்த்தினானவர்கள் ரகபத்தில் வைத்த கூட்டத்தில் உள்ளவர்கள். ஆதலால் எனக்கு பேரானது அவர்களுடைய பாதம் என் கண் மீதே யான் சொல்வதாயிருக்கும்.

ஷெய்கு ஹஸனுல் குத்பி அவர்கள் பிச்சளமாகிய ஷெய்கு நூருல்லாஹ் லதாயிபில் காதிரிய்யாவில் சொல்கிறார்கள் ஹக்குபால் சேர்ந்திட்டாருக்கு குரவாகிய ஜிஸ்தி கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் நின்றும் ஈராக் ராஜியத்தை தர வேண்டும் என வேண்டினார்கள். அப்போது நாயகம் சொன்னார்கள் ஷிஹாபுத்தீன் உமரஸ் ஸஹ்ரவாதியிக்கு ஈராக்கை கொடுத்து விட்டேன் உமக்கு ஹிந்து தேசத்தை தந்து விட்டேன் என்றார்கள் ரலியல்லாஹு அன்ஹும்.

**பனிரன்டாம் ஹிகாயத்தாவது தட்டப்பட்ட ஓர் ஒலியை ஒப்புக் கொள்ளப்பட்டவர்களாக்கி கொண்ட சங்கதியில் பேசுவதாயிருக்கும்.**

'மல்பூதுல் ஜியாதிய்யா' என்கிற கிதாபில் பேசப்பட்டிருக்கிறது முகற்றபாயினோர்களில் ஓர் வலியின் ஹாலை கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் உரியப்பட்டது. இவர் ஆலத்தார் உடைய நாயன் தட்டிவிட்டவர் என்று பெரியார் சிரியாருடைய நாவுகளிலும் சொல்லப்பட்டவரானார். நிறப்பம் கொண்ட அவுலியாக்களில் 360 வலியிடம் போய் ஒதுங்கி அவர்கள் எல்லாவரும் மன்றாடியும் இவர் ஹக்கில் அவர்களது சபாஅத்து பிரயோஜனிக்கவில்லை. இவர் நாமத்தை லவ்கில் மூதேவி கூட்டத்துடன் சேர்த்திருக்க கண்டார்கள். நீர் சீதேவி சங்கத்தில் உள்ளவர் இல்லை என்று சமாசாரமும் அறிவித்தார்கள். பின்பு இவர் முகம் கருப்பாகி விட்டது. அப்பால் சுல்தானுல் அவுலியா வாயளவில் நோக்கி சென்றார். அப்பால் அவரை கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்ட போது

அவருக்கு சொன்னார்கள். வாரும் நீர் அல்லாஹ் உடைய சமூகம் விட்டு தட்டப்பட்ட மற்தூதாயிருக்கில் நான் உம்மை அல்லாஹ் விடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட மக்பூலெனவே ஆக்கிக்கொள்ள கூறினேன் அல்லாஹ் வினுத்தாரம் கொண்டு என நவின்று ஆண்டவனிடம் அவரை கபூல் செய்யும்படி கேட்டார்கள். அப்போது எதிர் மொழி வந்தது எனது அவுலியாவில் 360 பேர் சிபாரிசு பேசி மன்றாடியம் நான் கையேற்கவில்லை என்பதை அறியவில்லையா என்பதாயும.; ஏன் அவன் பேரானது லவ்குல் மஃபூலில் மூதேவி என தரிபடுத்தப்பட்டதற்காக என்றும் ஹக்கு அருளிய போது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நவின்றார்கள், நாயகா நீயோ மற்தூதை மக்பூலாக்கவும் மக்பூலை மற்தூதாக்கவும் வல்லவன் எதுக்கெனது நாவில் அவனை கபூல் என நடத்தினா என்று, அப்போது மறு மொழி வந்தது அவர் கருமத்தை உம்மளவில் ஒப்புவித்தேன.; நீர் நாடியதை செய்யலாம் என்றும் உம்முடைய மக்பூல் நம்முடைய மக்பூல்தான். உமது மற்தூத் நமது மற்தூத் தான் என்றும், பின்பு அவரை முகத்தை கழுகும்படி ஏவினார்கள். அல்லாஹ் தஆலா அவர் பெயரை துர்கூட்டத்தை விட்டழித்து சர்சங்க தெளிவாளர் பட்டயத்தில் ஆக்கி கொண்டான். நன்கொடை கொடுக்கும் நாயகனில் நின்றும் நவிலுதல்; வந்தது, கௌதே என்னிடத்தாலுமாக்கு அருள்கின்ற வள்ளபமான கொடையானது நான் உமக்கு விலாயத்தில் நிருத்துவதையும் தந்திருப்பதால் நீர் ஒப்புக்கொள்ளப்பட்டவர் நான் ஒப்புக்கொள்ளப்பட்டவன் தான் நீர் தட்டிவிட்ட கதபட்வன் நான் அகப்பட்டவனாக இருக்கும் என்றும் சத்தருளி செய்தான். எங்கள் ஆண்டவா எங்களை மக்பூர் லீங்கலிலாக்கியருள் ஆமீன் யா ரப்பல் ஆலமீன்.

**பதிமூன்ராம் ஹிகாயத்தாவது இமாம் ஹஸனுல் அஸ்கரிய்யி தங்களின் சஜ்ஜாதாவெனும் விரிப்பை கெனதுல் அஃலம் அளவில் எத்திவிக்க வேண்டுவோர் மனிதரிடத்தே பிணயம் வைத்த பிரிவில் பேசுதலாயிருக்கும்.**

மஹ்ஜனில் காதிரிய்யா எனும் கிதாபில் பேசப்பட்டது, செய்யிது ஹுமாம் கௌது இமாம் ஹஸனுல் அஸ்கரி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு எங்களுடைய சஜ்ஜாதாவை அவர்கள் அஸ்ஹாபிகளில் ஒருவரிடம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சேர்த்தும் என அமானத்தாய் வைத்தார்கள். இன்னம் வசிய்யத் செய்தார்கள் உம்முடைய வயது முடிவில் விசுவாசிகளில் ஒருவரிடம் ஒப்புக்கொடுத்து அவரும் அப்படியே கொடுத்து வரும்படியாக திட்டம் செய்தார்கள். ஏது மட்டிலும் ஐந்தாம் கர்னி நடுகில் கீழா நூரில் ஹஸனி வங்கிசத்தில் செய்யிது அப்துல் காதிரென நாமமிடப்பட்ட கௌதுல் அஃலம் வெளிப்பட்டு வருமட்டும் ஒவ்வொரு கைய்யாக பத்திரமாய் வைத்து அது அவருக்கு அமானிதமாக ஒப்புக் கொடுத்து எனது ஸலாமும் அவருக்கு எத்திவையுங்கள் என்று வசிய்யத் செய்தார்கள்.

**பதினாலாம் ஹிகாயத்தாவது எல்லா நாளையிலும் அடிமைகளை உரிமையிட்டு ஆண்டவர் அளவில் அவர்களை சேர்த்துவிக்கும் செய்திகளில் பேசுவதாயிருக்கும்.**

சில கிதாபுகளில் பேசப்பட்டது, கௌதுல் அஃலமாகிறவர்கள் நாள் தோறும் அடிமைகளை விலை கொண்டு உரிமையிட்டு அல்லாஹ் தஆலா அளவில் சேர்ப்பவர்களாக இருந்தார்கள்.

**பதினைந்தாம் ஹிகாயத்தாவது ஒரு கள்ளனை குத்பாக்கிய காரணத்தில் பேசுவதாயிருக்கும்.**

உலமாக்கள் பேசிவந்தார்கள், கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவில் இருந்து பக்தாத் அளவில் முன்னோக்கி வரும் போது கள்ளர்களில் ஒருவர் பாதையில் தனித்து நடப்போர்களில் எவரையும் வழிபார்த்துக் கொள்ளை செய்ய நிற்கிறார். அந்த சமயம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். நீர் யார்? என கேட்டார்கள். நான் நாட்டில் உள்ளவன் என்று சொன்னார். அப்போது அவரை பார்த்து கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள,; உன் பெயர் பாவம் எனும் கருப்பு கொண்டே எழுதப்பட்டிருக்குது என்று வெளியாக்கவுமே அவர் மனதில் ஓர் பயம்; வந்தது இம்மனிதர் இந்த ஹைபத்து அதமத்துடன் இருப்பதால் கௌதுல் அஃலமாக இருப்பார்கள் என ஓர் ஆச்சரியமில்லை என்று அசரீரி சத்தம் உண்டாகினது. அப்போது கௌது நாயகம் அவர்களுக்கு கஸ்பானதால் சொன்னார்கள், நான் தான் அப்துல் காதிர் என்று. உடனே இவர்களின் பரகத்தால் பாதாரவின்தம் மீது வீழ்ந்தார். அவர் நாவில் நடந்துது அயா செய்யிதி அப்துல் காதிர் ஷைய்யன் லில்லாஹி என்னாயகமே அப்துல் காதிரே! அல்லாஹ்வுக்காக ஏதும் கொடுங்கள் என்று. அந்த நேரம் அவர் ஹாலுக்கு கௌது நாயகம் அவர்களிறங்கி அல்லாஹ் தஆலா அளவில் முன்னோக்கி அவர் கருமத்தை திருத்த வேண்டும் என்று நாடி கருத்துரு கேட்டதில் எதிர் மொழி வந்தது கௌதுல் அஃலமே அந்த கள்ளனை நீர் பாதை மீது கோல் காட்டிவிடும் எனது உகப்பாளரின் நேர் வாட்டையில் அவனை போட்டுவிடும். குத்புகளில் நின்றும் ஓர் குத்பெனவே ஆக்கிவிடும் என்று மாத்திரமே இவர்களின் பார்வை கொண்டு அவரை குத்பாக்கி விட்டார்கள்.

**பதினாராம் ஹிகாயத்தாவது ஓர் பாசிக்கானவர் கப்ரில் முன்கர் நகீர் கேள்விக்கு ஜவாப் அப்துல் காதிர் என்று சொல்லி ஈடேற்றம் பெற்றதில் பேசுவது.**

கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் தோசங்களில் தரிபட்ட ஒரு பாசிக் இருந்தார். ஆகிலும் கௌது நாயகம் அவர்ளுடைய மஹப்பத் அவர் கல்பில் குடிகொண்டிருந்தது. அவர் வபாத்தாகி அடக்கின பொழுது முன்கர் நகீர் இருவரும் வந்து நாயன் யாh?; நபி யாh?; தீன் என்ன? என்று கேட்கையில் எல்லா சுவாலுக்கும் அப்துல் காதிர் என்றே மறு மொழி கொடுத்தார். அப்போது ரப்பில் நின்றும் திருவுளம் வந்தது, முன்கர் நகீரே அந்த அடிமை பாசிக்குகளில் உள்ளவனாக இருக்கிலும் மஹ்பூப் செய்யிது அப்துல் காதிரை உகப்பதில் உண்மையாளரில் நின்றுமாயிருக்கும். அவருக்காகவே அவரை முஹப்பத் வைத்ததாலும் அவரிலவன் இஃதிகாதின் அளகினாலும் அவனுக்கு பி;ழை பொறுத்து அவன் கப்ரையும் விஸ்தீரணமாக்கிக் கொண்டேன் என்பதாய் ஹக்கு தஆலா அருளினான்.

**பதினேழாம் ஹிகாயத்தாவது அவர்கள் பொருமைப்பாட்டுகள் உடைய அனைவதிலும் அதை ஹாஜத்துள்ளவர்க்கு கொடுத்திடுவதிலும் பேசுவதாயிருக்கும்.**

உலமாக்கள் பேசிவந்தார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பொர்தமான ஒருமையான உடுப்பை அனைபவர்களாக இருந்தார்கள். அதின் ஒரு முழம் பத்து தங்க காசிற்கு சரியாம். ஒரு போது ஒரு தலைப்பாகை சுற்றினார்கள். அதின் விலை 70000 தங்க காசாம். அப்படி இருக்கும் போது ஒரு முஹ்தாஜ் என்ற மிஸ்கீனை கண்டார்கள். அதை அவருக்கு கொடுத்திட்டார்களாம்.

**பதினெட்டாம் ஹிகாயத்தாவது அவர்களுடைய ஜொட்டில் செருப்பில் ரத்தினமளுதியதை பேசுவதாயிருக்கும்**.

அவர்கள் பாதத்திலணைகின்ற ஜொட அந்து மாணிக்கம், மரகதம், சிகப்புக்கல் கொண்டலுத்தப்பட்டதாக இருந்தது. அதின் கீழ் ஆணிகள் வெள்ளியாக இருந்தது.

**பத்தொன்பதாம் ஹிகாயத்தாவது அவர்களுக்கு வானத்தால் ஓஜிபனம் இறங்கிய செய்தியை பேசுவதாயிருக்கும்.**

உலமாக்கள் பேசிவந்தார்கள் ஒரு தடவை நமது நாயகம் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாற்பது நாள் ரியாளத்தில் இருந்தார்கள். தங்களின் கல்பில் ஊசாட்டம் உண்டாச்சுது. வானத்தில் அல்லாஹ் தஆலா ஏதையும் இறக்கி தின்னமட்டும் இந்த திங்களில் தண்ணீரை தவிர குடிக்கப்படாதென்றார்கள். ஆக நாற்பது நாள் நிறைய இரண்டு நாளைக்கு முற்பட வீட்டின் முகடு பிளந்தது. ஒரு மனிதன் வலது கைய்யில் தங்க சங்கிலி இட்ட தங்க பாத்திரமும் இடது கைய்யில் வெள்ளி சங்கிலி பொருத்திய வெள்ளி பாத்திரமும் கொண்டு ஒரு பாத்திரமும் பழவர்கங்களை கொண்டு நிறப்பப்பட்டதாய் கௌது நாயகத்திற்கு முன்பதாக வைக்கவும் இவ்விரண்டும் என்னவென கேட்க உயர்த்தியான ஆலத்தில் நின்றும் நீங்கள் தின்பதற்காய் கொண்டு வந்தேன் என சொல்லவுமே, அவ்விரண்டையும் என்னிடம் வைக்காமல் தூரப்படுத்தி விடு என் பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொன், வெள்ளி பாத்திரத்தில் தின்னுவதை ஹராம் ஆக்கினார்கள் என்று சொல்லவுமே கொண்டு வந்தவன் எடுபட்டு ஓடி போனான். அப்பாக நோன்பு திறக்கும் நேரம் வானத்தால் ஓர் மலக்கு அவர்கள் கரத்தில் வஜீபனத்தட்டம் கொண்டு வந்து கௌதே உங்கள் சமூகத்திற்கு இது ரஹ்மானுடைய விருந்திடுதல் என்று சொல்லவும் அதை எடுத்து கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் ஜமாஅத்துடன் அஸ்ஹாபியுடன் போசித்து அல்லாஹ் தஆலாவை மிகுந்த சுக்ரு செய்தார்கள்.

**இருபதாம் ஹிகாயத்தாவது கௌது நாயகத்தை ஹித்ர் அலைஹிஸ்ஸலாம் புகழ்ச்சி செய்ததில் பேசுவதாம்.**

கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹக்கில் ஹிழ்ர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மஃசூக்கிய்யா மகாமில் வானத்தின் கீழ் ஒரு வலியும் கௌதுல் அஃலமைப் போலே உண்டாகவில்லை உண்டாவும் மாட்டார் என்பதாய் அருள் செய்தார்கள். ஷெய்கு அபூ மத்யனுல் மஃஜினி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிழ்ர் அலைஹிஸ்ஸலாம் அவர்களை கண்டு சந்தித்து நம்முடைய காலத்தில் ஏழுவான்

திசைபடுவான் திசையில் உண்டாய் இருக்கிற அவுலியாக்களைக் குறித்தும் கௌதுல் அஃலமுடைய செய்தியையும் கேட்டதில் சொன்னார்கள் அவர்களாகிறது சித்தீக்கீன்களுக்கு இமாம், ஆரிபீன்களுக்கு ஹுஜ்ஜத், மஃரிபாவுக்கு ரூஹ். இன்னும் அவர் கருமம் அவுலியாக்களிடத்தில் வழுப்பமாக இருக்கும் என்றார்கள்.

**இருபத்தொராம் ஹிகாயத்தாவது தாலிபீன்களை அல்லாஹ் அளவில் தங்கள் வபாத்திற்குப் பின்னால் பராபத்தியாய் சேர்பித்த செய்தியில் பேசுவதாயிருக்கும்.**

மிஸ்ரில் ஒரு வியாபாரி கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹக்கில் பரிசுத்த கலப்பருதலும் நின்னயம் தரிபாட்டு தயாருமாய் இருந்தார். அவர்களின் சிறப்பான சில்சிலாவில் சுலகாவதை அகத்துல் பிசகறிந்தார். அவர் அளவில் ஆத்திரம் எனும் விளக்களான தமது நாட்டம் நிறைவேற்றிக் கொள்ள 40 வருஷமாய் இலேசாகுதில்லை அப்பால் பிரயாணாக பக்தாத் ஊர் வரவும் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகிரத்திற்கு எத்திரயார்கள் என கேட்கவே தன் நாட்டம் நிறைவேறாத்தால் தன்னை மாய்த்து கொள்ளவே கருத்துக் கொண்டார். பின்னம் கப்ரை ஜியாரத் செய்வோம் என வந்து ஜியாரத்தின் ஆதாபுகளை நடத்தவுமே கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளிப்பட்டு இவர் கையை பிடித்து இவருக்கு இனாபத் எனும் ஹக்களவில் மீட்சையான மோட்சமும் கொடுத்து அவர்களுடைய சில்சிலா உடன் சேர்ந்தார் 300 ஆண் பிள்ளைகளோடு இர்ஷாத் செய்வதெனும் சிறப்பும் பூண்டார். அவர்கள் எல்லாவரும் ஹக்களவிலே சேர்ந்தார்கள். அவர் நுவுரும் சொன்னார்கள் சீதேவிதன்மையை நாங்கள் எடுத்தனைய இந்த சரியான உண்மை நாட்டம் போல் ஒத்தது எமக்கு அறிவிய்யும் என்று அருள் செய்தார்கள்.

**இருபத்திரண்டாம் ஹிகாயத்தாவது நபி நாயகம் அவர்களை ஜியாரத் செய்த நேரம் அவர்கள் அவர்களுடைய திரு கரத்தை பிடித்த திவ்விய்யத்தில் பேசுவதாயிருக்கும்.**

அவர்கள் சொல்கிறார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓர் தடவை மதீனதுல் முனவ்வராவுக்கு வந்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரை நோக்கி நாற்பது நாளாய் நின்றவர்களாக இரு கையையும் நெஞ்சில் வைத்து இவ்விரண்டு பைத்தையும் ஓதி முனாஜாத் செய்பவர்களாய் இருந்தார்கள்.

ذنوبي كموج البحر بل هي اكثر

كمثل الجبال الشم بل هي اكبر

எனது பாவத்தோசமானது கடலின் அலைபோலே அதிலும் அதிகமாகவே இருக்கும், இன்னும் உயர்ந்து மலைகளைப்போலே. அதிலும் மிக பெருப்பமாக இருக்கும்.

ولكنها عند الكريم اذا عفا

جباح من البعوض بل هي اصغر

ஆகிலும் அந்த பாவங்களானது கரீமான நாயகன் பொருத்திடும் நேரம் அவனிடத்தில் கொசுக்கு சமம்தான் என்கிலும் அதைவிட சிறுசாகவும் இருக்கும். இன்னும் ஒரு போது ரவ்லா சரீபாவுக்கு முடுகி நன்று இவ்விரண்டு பைத்தையும் ஓதினார்கள்.

في حالة البعد روحي كنت ارسلها

تقبل الارض عني وهي نائبتي

தூரத்தில் இருக்கும் போது எனக்கு பகரமாய் தரையை முத்தமிடும் படி எனது ரூஹை அனுப்பினவனாக இருந்தேன்.

وهذه نوبة الاشباح قد حضرت

فامدد يمينك كي بها شفتي

இப்போது உடல்கள் வர முறை வன்னமாயிருக்கும். ஆதலால் உங்களின் கையை நீட்டிடுங்கள். அதனால் என் உதடுக்கு பேர் கொடுக்கப்படுவதற்காய். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திரு கையானது வெளிப்பட்டது. உடனே இவர்கள் அதை முத்தமிட்டு தலை மேல் வைத்து கொண்டார்கள்.

**இருபத்திமூன்றாம் ஹிகாயத்தாவது இவர்களுக்கு மீன்கள் ஸலாம் சொன்னதிலும் இவர்களின் ஓர் கையையும் பாதத்தையும் முத்தமிட்டதிலும் தண்ணீரின் மேல் தொழுததிலும், தொழுகையில் ரிஜாலுல் ஙொயிப் அவர்கள் அவர்களுடன் தொடர்ந்த சங்கதியிலும் பேசுவதாயிருக்கும்.**

ஷெய்கு அப்துல்லாஹிஸ் ஸூத்ரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுரார்கள் பங்தாதோர் அவர்கள் ஒரு போது நமது நாயகம் கௌதுல் அ:லமை காணவில்லை. அவர்கள் எங்கே போய்விட்டார்கள் என்று தேடி பார்க்கையில் திஜ்;லா எனும் ஆற்றின் கரையில் கண்டார்கள். மீன்கள் எல்லாம் அவர்கள் அளவில் ஸலாம் சொன்னதாக கூட்டம் கூட்டமாய் வரக் கண்டார்கள். இன்னும் அவர்கள்; கை காலை முத்தமிடவும் கண்டார்கள். நானும் அந்த ஹாலை பார்த்தவனாய் லுஹர் வரையில் தரிபட்டேன். தங்கம் வெள்ளி கொண்டு அளுத்திய ஒரு சஜ்ஜாதா எனும் சிறப்பு தங்கிய விரிப்பையும் கண்டேன். அதில் இரண்டு வரி

எழுதப்பட்டிருக்கிறது. ஓர் வரியில் அலா இன்ன அவுலியா அல்லாஹி லா ஹவ்புன் அலைகிம் வலா யஹ்ஜனூன். - அறிந்து கொள் அல்லாஹ் உடைய வலிமார்கள் அவர்கள் மீது ஒரு பயமுமில்லை அவர்கள் சளிக்கவும் மாட்டார்கள் என்று. இரண்டாம் வரியாகிறது, ஸலாமுன் அலைக்கும் அஹ்லல் பைத்தி இன்னகு ஹமீதுன் மஜீத். - அஹ்லுல் பைத்தே உங்கள் மீது ஈடேற்றம் உண்டாகட்டும். அவன் ஆகிரவன் ஹமீதுன் மஜீதாக இருக்கும். இந்த இரண்டு ஆயத்தும் எழுதப்பட்டிருக்கிறது. அதுக்கு மேல் ஆகாயத்தில் அதை விரிக்கப்பட்டது ஆகாசத்தில் விரித்த சஜ்ஜாதா எனும் விரிப்பில் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இருக்க கண்டேன். இன்னமும் சில ஆண் பிள்ளைகள் புலிகளைப்போல் வருகிறார்கள். அவர்களுக்கு முன்னால் ஹைபத்தாலும் கனதியாலும் கடுப்பமான ஓர் மனிதனாரும் வருகிறார்கள். சஜ்ஜாதாவிற்கு முன்பதாய் வந்து அதபுடன் நின்றார்கள். அவர்கள் நிற்கும் விதத்தை பார்க்க குத்ரத் எனும் கடிவளம் போட்டது போல் இருந்தது. அப்பால் கௌதுல் நாயகம் அவர்கள் தொழுகுவதற்காக எழும்பி நின்று முன் கூறியவர்களுக்கு இமாம் ஆகவும் அந்த கூட்டமும் பக்தாத் ஊர் அவுலியாக்களுமாய் தொழுது முடித்தார்கள்.

கௌது நாயகம் அவர்கள் ருகூஹ் சுஜூது போல் ஒத்ததுகொள்ள இன்திகாலுடைய தக்பீர் சொல்லும் போதெல்லாம் அவர்களொடு அர்சை சுமந்தவர்களும் தக்பீர் சொன்னார்கள். அவர்கள் ஷெய்கு செய்யும் போது வானக மலக்குகளும் தஸ்பீஹ் செய்தார்கள். அவர்கள் தம்ஜீத் செய்தால் தங்கள் வாயில் இருந்து பசுமையான ஒளிவு புறப்பட்டது. தொழுது முடித்த பின் இருகரம் உயர்த்தி துஆ இரந்தார்கள். அது துஆவிற்கு மலக்குகள் ஆமீன் கூறினார்கள். கூடினோரும் ஆமீன் ஆமீன் என்று ஓதினார்கள். மறைவான ஆலத்தால் ஜவாப் வந்தது. நீர் நல்மாராயம் பெறும். நான் உமது துஆவை கையேற்றுக் கொண்டேன் என்பதாய் வந்தது. அந்த துஆவின் பொருளாவது நாயகனே உன் ஹல்கில் ஹல்லாங்கராயும் உனது நபியாகவும் வந்த எனது பாட்டனார் பொருட்டால உன்னிடத்தே கேட்கிறேன். என்னை துடர்ந்த ஆண் பெண் முரீதின் ரூஹை தவ்பாவின் பேரில்லாது கைப்பற்றாதிருப்பாயாக என்று துஆ செய்தார்கள். ரலியல்லாஹு தஆலா அன்ஹு வநபஅனா பிஹி ஆமீன்.

**இருபத்தினாலாம் ஹிகாயத்தாவது கௌதவர்கள் கதமி ஹாதிஹி எனும் சொல்வார்கள் என்று கஸ்பாகின செய்தியில பேசுவதாயிருக்கும்.**

முகாஷபாத்துல் ஜுனைதிய்யா எனும் கிதாபில் மூஸா கதவி சுஹ்ரவர்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேசி இருக்கிறார்கள், ஜும்ஆ நாளில் குத்பா நடுகில் செய்யிது தாயிபா ஜுனைதில் பக்தாதி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மீது அல்லாஹ் தஆலா தஜல்லியாத்தானான். கஸ்பு சுகுதேனும் கடலில் இவர்கள் மூழ்கினார்கள். அப்போது சொன்னார்கள் அவர்கள் கதம் என் ரகபா மேலா இருக்கும் என்று சொல்லி தலையை சாய்த்து கொண்டு மிம்பரின் படிகளில் ஒரு படியில் இறங்கினார்கள். பின்பு தெளிந்து குத்பாவும் தொழுகையின் தீர்ந்த பின் குத்பா நடுசமயம் நடந்த சங்கதிகள் அவர்களிடம் விளம்பினார்கள். அதற்கு ஜுனைத் நாயகம் சொன்னர்கள் ஆலமுல் காயிபில் நின்று எனக்கு கஸ்பானது ஐந்தாம் கர்ன் நடுகில் செய்யிதுல் முர்ஸலீன் பிச்சளத்தில் ஒரு மனிதர் ஆலத்திற்கு

குத்பாகவும் முஹியத்தீன் எனும் பட்டம் தரித்து செய்யிது அப்துல் காதிர் என்ற நாமம் எடுத்து வெளியாவார். அவர் கௌதுல் அஃலமாக இருக்கும். பிறக்கும் தளம் கீலாநூர். ஹாதமுன் நபிய்யீன் பிச்சளத்தில் நின்றும் இமாம்களை சஹாபத்துகளை தவிர மற்ற முன்னோர் பின்னோர் ஆன அவுலியா ஆண் பெண் அனைவரின் தோள் மீதில் எனது பாதமெனவே சொல்லும் என ஏவப்பட்டவராவார் என்று எனக்கு கஸ்பாக்கப்பட்டது. என் மனதில் ஊசாடிச்சுது. நான் அவர் காலத்தில் உள்ளவன் அல்லவே என் புயத்தை எப்படி தாழ்த்தி கொடுப்பது என்று, அப்போது அல்லாஹ் தஆலாவில் நின்றும் பளிக்குதலுடன் ஓர் சத்தம் வந்தது. இக்கருமம் உமக்கு ஏதுக்கு குணமானது. அவரோ எனது மஹ்பூபானவர் என் ஹபீபுடைய பிச்சிளத்தில் உள்ளவர் அவுலியா குத்புக்கிடையில் அவர் கருமமானது அன்பியாக்களுக்கிடையில் எனது ரஸூல் முஹம்மதுடைய கருமம் போலவே இருக்கும். அவுலியா அடங்களும் உயிர்களுடனும் உடல்களுடனும் அச்சொல்லை அவர் சொல்லும் நேரம் வழிப்படவும் தோள் தாழ்த்தவும் வேண்டி ஹாலிராவார் என்பதாய் அதர்காய் அவர் பாதம் என் தோள் மீதெனவும் நான் சொன்னேன். ஆதலால் அவர் தகுதி அவுலியாக்களின் தகுதிகளுக்கு மேலாம்பரமானதாயிருக்கும்.

**இருபத்தைந்தாம் ஹிகாயத்தாவது சுல்தானுல் மஸாயிஹ் நிஜாமுத்தீனுல் அவுலியா காதிரிய்யா ஹிலாபத்தை கௌதுடைய பிச்சளத்தில் உள்ள செய்யிது உமரில் நின்றும் எடுத்ததையும் காதிரிய்யா சில்சிலா மற்றும் சில்சிலாவிலும் அல்லாஹ்விடத்தில் அஃப்லலாயிருக்கிறதென்பதிலும் பேசுதலாம்.**

அஸ்ராருஸ் ஸாலிகீன் என்ற கிதாபில் கன்ஜு சகர் என்று பிரபத்தியான ஷெய்கு பரீதுத்தீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரரான ஷெய்கு ஜுனைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதில் உள்ளதாய் பதினாலாம் மஜ்லிசெனும் பாடத்தில் பேசப்படுகின்றான். சுல்தானுல் மஸாயிஹ் நிஜாமுத்தீனுல் அவுலியா அவர்கள் மக்கத்துல் முகர்ரமா அளவில் முகம் நோக்கி வரும் வேளை பக்தாத் வந்து சேர்ந்தார்கள். அந்நேரம் செய்யிது உமர் என்பவர்கள் தங்கள் பாட்டனாராகிய கௌது நாயகத்துடைய சஜ்ஜாதாவில் இருக்கிறார்கள். இந்த ஷெய்கு நிஜாம் அவர்களை அழைத்து வர ஓர் ஹாதிமை அவர்கள் அனுப்பினார்கள். ஹாதிம் வந்து ஸலாம் சொல்லிக் கொண்டு எனது ஷெய்கு உமர் உங்களை அழைக்கிறார்கள் என்று சொன்னார். ஹாதிமிடம் கேட்டார்கள் உமது ஷெய்கு என்னை ஏதினால் அறிந்தார்கள் என்று. நீங்கள் ஹிந்தை விட்டு யாத்திரை வாகனம் ஏறும் போதே அறிந்தார்கள் என ஹாதிம் சொல்லவும் ஷெய்கு நிஜாம் அவர்கள் அழைப்பிற்கு எழுந்து செய்யிது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமூகம் வந்து கிலாபத்தும் பெற்று ஹிற்கத்து மனைந்தார்கள். இதுவும் அந்த கிதாபில் நாலாம் மஜ்லிசில் ஷெய்குல் இஸ்லாமை தொட்டும் பேசப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள் ஷெய்கு அலாமுத்தீன் அவர்களை தொட்டும் நான் தரீக்கெடுத்த பொழுது கேட்டார்கள் எந்த தரீக்கில் உனக்கு அகது தர வேண்டு அதற்கு தரீக்குகளில் எல்லாத்தமானதில் நின்றுண்டு நான் சொன்னேன் அவர்கள் சொன்னார்கள் ஹிலிர்யுகத்தில் எல்லாம் ஏற்றமுற்றது காதிரிய்யா தரீக் என்று சொல்லி

கௌது நாயகம் அவர்களின் தரீக்கில் அக்தும் தந்து ஒரு தொப்பியும் என் தலையில் இட்டார்கள். ரலியல்லாஹு அன்ஹும்.

**இருபத்தாராம் ஹிகாயத்தாவது இந்த உம்மத்தில் பாதி அவர்களின் மன்றாட்டத்தால் ஏற்றம் பெறும் பேச்சிலே பேசுவதாயிருக்கும்.**

'மனாஜிலுல் அவுலியா' எனும் கிதாபில் சொல்லுகிறார்கள், ஹாதிமுல் அன்பியா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ரத் உமா,; ஹஜ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹுமா இரண்டு பேரையும் உவைஸுல் கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அளவில் போகும்படிக்கும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சட்டையை கொண்டு போய்; கொடுத்து ஸலாமும் சொல்லி உம்மதுக்காக துஆ கேட்கும்படியாகவும்; ஏவி இருந்தார்கள். அப்பால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத்தாகிய பின் முன் கூறிய இரண்டு இமாமும் அந்த படியே நபி நாயகம் அவர்களின் கமீஸை எடுத்து கொண்டு போனார்கள். வாதில் அராகெனும் ஓடையில் இருந்தது சுஜுது செய்யவும் சாலயப்படுவதாய் இருக்க கண்டார்கள். பின்பு சுஜுதை விட்டும் தலை உயர்த்தவும் இவ்விருவர்களும் ஸலாமுறைரக்க, அவர்கள் மறுமொழி அறைந்து தமது இருக்கையால் இருவர் கையையும் பிடித்து நபி நாயகத்தின் கமீஸையும் அதபுடன் எடுத்து தலை மேல் வைத்து ஏவலுக்கு வழிப்பட்டு அணைத்து கொண்டார்கள.; அவ்விருவர்களும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஸலாமையும் எத்தி வைத்தார்கள். உமத்துக்கு துஆ செய்யும் படியாயும் சொன்னார்கள். உடனே சுஜுது செய்து பின் தலையை உயர்த்தி சொல்லுகிறார்கள்: அல்லாஹ் தஆலா இடத்தில் உம்மத்தனைவருக்கும் பிழை பொறுக்க துஆ செய்தேன். அல்லாஹ் தஆலா புறத்தால் ஜவாப் வந்தது. உமது தலையை உயர்த்தி உமது சபாஅத்தினால் உம்மத்தில் பாதிக்கு பொறுத்துக் கொண்டேன். மற்றும் அரை வாசிக்கு என் மஹ்பூப் கௌதுல் அ..லம் உடைய சபாஅத்துக்காய் பொறுப்பு என்றும், உமக்குப் பின் மேலைக்கு வருவார் என்றும். அப்போது நான் கேட்டேன் நாயகனே உனது மஹ்பூப் கௌதுல் அ..லம் எங்குருவர் யார் ஒருவர் எங்கே இருக்கிறார் நான் காணவேண்டும் என்றேன். அப்போது எதிர் மொழி வந்தது அவர் வல்லவனான அரசன் சமூகம் மக்அது சித்கெனும் தலத்தில் பனா பதல்லா பகான காபகவ்சைனி அவ்அத்னா எனும் தலத்தில் ராஹத்து பெற்றிருக்கிறார். அவர் எனக்கும் என் ஹபிபுக்கும் மஹ்பூபாயிருக்கும். கியாம நாள் வரைக்கும் பூலோகம் மீது நமது ஹுஜ்ஜத்தாயிருக்கும். அவர் இரு பாதம் அஸ்ஹாபிகளையும் ம..ஸும்களான இமாம்களையும் தவிர முன்னோர் பின்னோரான அக்தாப் அவுலியாக்களின் தோள் மீதிலாயிருக்கும். அவரை ஒப்புக்கொள்பவர் என அஹ்பாபுகளில் ஆவார் என்பதாய் வந்தது. அப்போது உவைஸுல் கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் நான் கபூல் செய்தேன் என் தலையும் அவருக்கு சாய்த்தேன். அவர் விலாயத்தை கொண்டு உண்மை கொண்டேன். அல்லாஹ் தஆலாவை சுக்ரு செய்தேன் என்பதாய் அருள் செய்தார்கள்.

**இருபத்தேழாம் ஹிகாயத்தாவது ஷெய்கு அஹ்மதுல் பாரூக்கிய்யித் திர்மிதிய்யிஸ் ஸர்ஹன்தி என்பவர்கள் கௌதுல் அஃலமுடைய ருத்பா நிறப்பத்தை வெளிப்படுத்திய விஷகலத்தில் பேசுவதும்.**

ஷெய்கு அஹ்மது ஸர்ஹன்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கிதாபுகளில் சொல்லுகிறார்கள் அல்லாஹ் தஆலா அளவில் சேர்த்திடும் பாதை இரண்டாயிருக்கும். அதில் ஒன்றாவது நபி பட்டம் எனும் பாதை. இப்பாதையால் அசலால் சேர்ந்தோர் அன்பியாக்களாக இருக்கும். அது ஹாதிமுல் அன்பியா வைக்கொண்டு முத்திரையிடப்பட்டது.

இரண்டாவது விலாயத் எனும் பாதை. இந்த பாதையால் சேர்ப்பவர் வாசிதா எனும் ஓர் நடுசபாரியினால் சேர்ப்பவர்களாம். அவர்களோ அக்தாப் அவ்தாத் அப்தால் நுஜபா மற்றும் அவுலியாக்களாக இருக்கும். இது பாதையில் நடுசபாரிசாகிறவர்கள் அலி கற்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்களாயிருக்கும். இந்த உயர்த்தியான பேர் அவர்கள் ஹுத்ரத்தைக் கொண்டு கொழுகி நின்றுது, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரு பாதமும் அந்த மகாமில் அலி கற்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுடைய பரக்கத்தாகப்பட்ட சிரசு மீதில் தரிபட்டதாக இருந்தது. பாத்திமா நாயகம் ரலியல்லாஹு அன்ஹா அவர்களும் ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா இவ்விருவர்களும் அந்த மகாமில் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் கூட்டாக இருந்தோர்களாயிருக்கும். திட்டமாக செய்யிதுனா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறவர்கள் அவர்கள் ஆலமுல் அஜ்ஸாமில் உண்டானபின் இந்த மகாமை பற்றிப் பிடித்தவர்களானது போல் உண்டாக முன்னும் இந்த மகாமை பற்றிப்பிடித்தவர்கள் என்று தான் நான் சென்றேன். ஆகையால் யார் ஒருவர் அவர்கள் அளவில் பைழு சேர்ந்திடில் அவர்களுடைய வாசிதா கொண்டு தான் சேர்வது. ஏன் என்றால் இந்த மகாமுடைய தாயிராவுக்கு மற்கரும் இந்த தரீக்கெனும் நுக்தாவுக்கு துவர்க்கமும் தீர்ச்சையும் அவர்களை கொண்டு கொளுகி இருப்பதால். நமது நாயகம் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தவ்ரு நிறப்பமான பொழுது இந்த போர் பலனை ஹஸன் ஹுஸைன் அளவில் ஒப்பிவித்தார்கள். அவ்விருவருக்கு பின்னர் 12 இமாமளவிலாச்சிது. தர்தீபும் படியே அவர்களில் ஒவ்வொர் காலத்தில் அவர் வாசிதாவினால் அவர் காலத்துடைய அவுலியாகளுக்கு பைழு சேர்ந்து வந்தது, அவ்வகையர்களுக்கு அவர்களே ஒதுங்கும் தளமானார்கள். சுல்தானுல் அவுலியா முஹியத்தீன் அப்துல் காதிருல் கைலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நவ்பத்து முறை வந்த பொழுது இந்த பேரை அவர்கள் ஹழ்ரத்தில் சாட்டப்பட்டுது. மேலே சொல்லப்பட்டவர்கள் ஹத்ரத்களுக்குப்பின் அவர்களை தவிர ஒருவருக்கும் அது இலேசாச்சுதில்லை. ஆனதால் இலாகிய்யான பைழானது அக்தாப் நுஜபா அவுலியாக்களுக்கு சேர்வது அவர்கள் வாசிதா கொண்டு தான். இவர்கள் காலத்திலும் அதல்லாத்ததிலும் கலாகாலமும் இதளவில் முஹியத்தீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பைத்தில் இஷாரா செய்தார்கள்.

افلت شموس

இதின் பொருள் முன்னோர்களுடைய சூரியன்;கள் அடைந்து போச்சுது. நமது சூரியன் மேலாம்பரமெனும் வானத்தில் காலாகாலமும் அடயாவன்னா இருக்கிறது. சம்சு கொண்டு முறாதாவது நேர்வழியும் நேர் காட்டுதலுமாயிருக்கும். அடையுதல் கொண்டு முறாதாவது முன் சொல்லப்பட்ட பைழு இழந்திட்டதாகும். முன்னோர்களை கொண்டு கொளுகி நின்றது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை கொண்டு கொளுகி விட்டது. இவர்களாகிறவர்கள் அவர் களனைவோர்கள் அளவில் பைழை சேர்க்க வாசிதாவாக்கி இருக்கும். நமது மீது பைழை சேர்ப்பது தாயிமாகும.; காலமெல்லாம் இவர்கள் சேர்ப்பதால் தான் நமதளவில் சேர்வதாயிருக்கும்.

**இருபத்தெட்டாம் ஹிகாயத்தாவது உயிரையும் உடலையும் இலஞ்சிக்கும் கௌது நாயகம் அவர்களை செய்யிது அப்துல் காதிருல் அய்துரூஸ் என்பவர்கள் புகழ்ச்சி செய்ததில் பேசுவது.**

அவர்கள் சொன்னார்கள் கௌது நாயகம் அவர்களை உஸ்தாது ஹாதம் இப்னு அஹ்மதுல் அஹ்தல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் திட்டமாக வலுப்பப்படுத்துவதுமாகவும் அவர்கள் கருமத்தை பெருப்பமாய் பேசுவதுமாக இருந்தார்கள். இன்னமும் அந்த மத்கை பேசுவதை அழகாக்குரதும் வழுப்பமுற்றவன்னிலுக்களால் வன்னிப்போ ஒழுங்காய் பேசுரதுமாக இருந்தார்கள். அந்த இஸ்முகளை வன்னிப்பதில் ஒருவரும் அப்படி முந்தினதாக காணவில்லை. அந்த உஸ்தாத் அவர்கள் தங்களுடைய கோர்வைகளானதில் சிலதில் வற்னிக்கிறார்கள். அது எப்படி எனில் ஹழ்;ரத் கௌதுல் அஃலம் குப்புல் அக்தாபாகிறவர்கள் அஹ்பாபுகளுக்கு கரீமானவர்கள். மன் ஜின் இருகூட்டத்திற்கும் குரவானவர்கள். முறாகபா சொனவர்கள். ஒதுங்கும் பொதும்பானவர்கள். வழுப்பம் நிறப்பமான் சிற்றை உடையவர்கள். காலங்களில் அவர்களுடைய சித்தீகிய்யா துரை வெளியானவர்கள். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தண்ணீருக்கும் மன்னுக்கும் இடையில் இருக்கும் போதே நான் நபியாக இருந்தேன் என்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன சொல்லின் நுனுக்கங்களினால், இன்னம் எப்படி யானவர்கள் பூரிப்பமாகிய முந்தின நிகாஹின் சிற்றை சுமந்தவர்கள் ஜம்யிய்யா இஜ்திமா என்ற சேர்தலின் சிற்று கொண்டு வெளியானவர்கள். மேலாம்பரமான சொவ்வருதல் சிவக்கும் என செப்பானவர்கள். ஆகதல் அழிக்குதலில் ஹும்மத்தான உத்தரவினால் அதிகாரம் செய்பவர்கள். இவர்கள் ஆலம்களில் ஹக்குக்கும் ஹல்குக்கும் உள்ளவைகளை கொண்டு வின்னப்பம் செய்பவர்கள். நமது நாயகம் மௌலானா வானவர்கள் மொத்தத்தில் ஷெய்குகளுக்கு ஷெய்கானவர்கள் செய்யிது அப்துல் காதிரென நாமமலடங்கியவர்கள். நப்ஸுகளுக்கு அழகு தெளிஉள்ள அபூ ஸாலிஹ் அவர்களின் மகனாரெனவே புகழ்ந்தார்கள் என்று அறிக.

**இருபத்தொன்பதாம் ஹிகாயத்தாவது ஹழ்ரத் கௌதுல் அஃலமை ஷெய்கு அஹ்மது கன்ஜ பஹ்சும் ஷெய்கு அஹ்மது கன்ஜ கீரூல் கஹ்தவிய்யும் தமது ரிஸாலாவில் புகழ்ச்சி செய்த பூரணத்தில் பேசுவதாம்.**

அவ்விருபேர்களும் சொல்லுகிறார்கள் இவர்களுடைய வழுப்பமான மனாகிபாகிறது ரைஹான் பூடுகளின் குலைகள் விஸ்தீனம் கொராது தோப்புகளின் மரத்தின் தோப்புகளும் சுமந்திடாது அவர்களின் மேலாம்பர தகுதிகளானது அதை ஆரிபீன்கள் என்ற நாதாக்களும் இவ்வளவு என மட்டிட முடுகமாட்டார்கள். அல்லது வண்ணிப்போர்களுடைய நாவுகளும் அதை மட்டிட வல்லமை பெறாது. கரனிக்கும் கலம்கள் கடிதப்பட்டினும் கட்டைபடும் அல்லாது மட்டிடாது. மனுக்களின் இரைகள் எழுத தொடுத்திடினும் மாட்டாங்கியாகவே ஆகிவிடும். ஆகிலும் அப்பனிவுகள் மிகுதத்தில் கொஞ்சத்தில் கொஞ்சத்தையும் அந்த சமுத்திரத்தில் உள்ளோர் துளியெடுத்து தெரிப்பது போலயும் அவர்களின் புகழை பேசுவதினால் நாம் சிறப்பு பெறுவதற்கே அல்லாது வேரில்லை. பாரதூரமாகிய நமது ஷெய்கு அபி மத்யனி ஷுஐபுத் தகாளி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தொட்டும் ரிவாயத்து வந்திருக்கின்றது. அவர்கள் சொல்லுகிறார்கள் ஹிழ்ர் அலைஹிஸ்ஸலாமை நான் சந்தித்து நம்முடைய காலத்தில் இருக்கின்ற மஸ்ரிக் மஃரிபிலுள்ள அவுலியாக்களை குறித்து கேட்டேன். இன்னும் ஷெய்கு அப்துல் காதிரு அவர்களையும் குறித்து கேட்டேன். அப்போது சொன்னார்கள் அவராகிறது சித்தீக்கீன்களுக்கு முன்னிலையானவர். ஆரிபீன்கள் மீது ஹுஜ்ஜத்தானவர். இன்னம் அவர் மஃரிபாவுக்கு உயிரானவா. அவருடைய கருமம் அவுலியாக்களுக்கிடையில் வழுப்பமாக இருக்கின்றவர் என்றார்கள்.

**முப்பதாம் ஹிகாயத்தாவது கதமி ஹாதிஹி அலா ரகபதி குல்லி வலிய்யி வவலியத்தின் லில்லாஹி என்று கௌதவர்கள் சொன்னதால் இஸ்பஹான் தேசத்திலுள்ள ஷெய்கு ஷன்ஆயி என்று சொல்லப்பட்ட ஓர் மனிதனை தவிர அவுலியாக்கள் அனைவரும் தோள் தாழ்த்திய சங்கதியை பேசுவதாயிருக்கும்.**

உலமாக்கள் பேசி வந்தார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா உடைய உத்தரவினால் கதமி ஹாதிஹி என்னும் சொல்லை சொன்ன போது அவர்கள்; சமூகம் இருந்தவர்களும் மறைவாக இருந்தவர்களுமான அவுலியாக்கள் எல்லாம் இவர்கள் தகுதியை கண்டதற்காகவும் இவர்களின் நிரப்பத்திற்கு வழிப்பாடாகவும் புயம்களை தாழ்த்தினார்கள். இஸ்பஹான் ஊரில் இருந்த ஓர் ஷெய்கை தவிர. அவர் வழிபாடிழந்தது கௌது நாயனம் அவர்களுக்கு கஸ்பாக்கப்பட்டது. அப்போது நாயகம் அவர்கள் சொன்னார்கள் அவருடைய தோளில் ஹின்ஜீருடைய கலாயிருக்கும் என்று, பின்பு சில நாள் சென்ற பின் அந்த ஷெய்கு பைதுல்லாஹ்வெனும் கஃபாவை ஜியாரத் செய்ய நினைத்து நிறப்பவாளராகிய முரீதுகளான ஷெய்கு மஹ்மூதுல் மஞ்ரபி ரலியல்லாஹு அன்ஹு ஷெய்கு முஹம்மத் பரீதுத்தீனுல் அத்தார் ரலியல்லாஹு அன்ஹு இப்பேர்பட்டவர்களோடு பிரயாணமாக வரும் வழியில் காபிரீன்கள் பட்டணங்களில் ஓர் ஊர் வந்து சேரும் போது ஒரு பெண் பிறந்தவள் அவளுக்கு நிகரில்லாத அழகு தெளிவு உள்ளவள் அவளுடைய மாளிகையில் நிக்கிறாள். இவர் அவளைக் கண்ட மாத்திரமே போதம் கெட்டு மயங்கி விழுந்தார். அத்தளம் விட்டு நீங்கி வர சக்தி பெற கூடாமலே நின்று விட்டார். அப்பெண்ணானவள் இவர் உகப்பை கண்;ட போது இவள் மனதிலும் இவரை உகப்பது போன்று அவளும் அப்படியே நின்ற தளம் விட்டு நீங்காமல் இருந்து ஊன் தீன் உரக்கமற்றார் போல அவளுடைய தகப்பன் அதை அறிந்து

ஆலோசனையிட்டு மனம் துளும்பினான். அப்பால் இந்த ஷெய்காகப்பட்டவர் இவளை விவாகம் செய்து சேர்வது அல்லால் வேறோரு நேரான யோசனையும் காணவில்லை. அவர் கருத்தில் உள்ளதை கூற போன இரு ஷெய்குக்கும் அறிவித்தார். அவ்விருவரும் ஷெய்கிடம் சொல்ல வழிகேடெனும் வாற்றயை தெரிந்து கொண்டார். இனி அவருக்கு அவள் தகப்பனானவன் அவ்வூர் வழமை அறிவிக்குறான்: அது எப்படி என்றால் ஒருவனுக்கு ஒரு மகளை கொடுக்கும் நேரம் விவாக கட்டளை என்னவானால் பன்றிக்கிடை மேய்த்து நாள் தோறும் அவர்கள் தின்பதற்காய் பன்றிக்குட்டியும் கொன்று வந்து கொடுக்க வேண்டும.; கல்யாண நாள் வரும் அளவும் அந்நாள் அவர்கள் விளக்கேற்றி வைப்பார்கள். மாப்பிள்ளை உடைய ஒரு கையில் பன்றிக்கறியையும் கல்லையும் மற்றொரு கையில் திரையன்றி பெண் உடுப்பின் முந்தியும் பிடிக்க செய்வார்கள் என்று இவ்விதமாய் சொல்லவும் அவ்வசனம் கேட்டு அவர் சந்தோசமாகி அதுபணிவிடையில் அச்சமில்லாதே நிறைவேற்றி அது போல் நடத்தினார். பன்றியின் குட்டியை பிரடியில் சுமந்து சில நாளை கொன்று வந்திருந்து பின்னர் அவர்கள் கூடி கல்லுகடிப்பு கரகத்தையும் பன்றி இறைச்சியையும் ஒரு கையில் கொடுத்து மறு கையில் பெண்ணின் உடையின் முந்தியை கொடுத்து வந்தார்கள். அப்போது அந்த ஷெய்கு அந்த குடிப்பை குடிக்கவும் அந்த கறியை தின்னவும் நாட்டம் வைத்த போது துனைக்காக கூட போய் இருந்த ஷெய்கு பரீதுத்தீன் எங்கப்பட்டவர்கள் ஒரு சத்தம் வைத்தார்கள். யா சுல்தான் யா செய்யிது அப்துல் காதிரு ஷெய்கு நமது கையைவிட்டும் தப்புரார் முஹியத்தீனே உதவி செய்திடுங்கள் என்று. அந்த சத்தம் கேட்ட மாத்திரமே அவர் உடலில் துளும்புதல் உண்டாகி கல்கரகமும் கறியும் கையை விட்டும் விழுந்து மருள் மையக்கி தூக்கம் விட்டு மனதுணர்ச்சியை பெற்று தாமஸமில்லாமல் காடேகி போகும் போது ஷெய்கு பரீதுத்தீன் அவர்கள் எங்கே விரைந்தோட்டம் என கேட்கும் போது அந்த ஷெய்கு ஜவாப் கொடுக்குறார். அவர் எய்த அம்பு தைத்ததுதே அந்த மனிதர் அளவில் என் கெடுதி கீடோழுக்கம் விட்டு கௌதிடம் சென்று தேடவும். பிழை பொறுக்க தேடவும் போறேன் என்றார்கள். அப்படியே பக்தாத் ஊர் வந்து சேர்ந்து முகம் கருப்படைந்து கௌது நாயகத்துடைய பணிவிடையாளருடன் வாசப்படியில் பணிந்து நின்று கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முன்பதாக சாளயப்பாட்டுடன் தரிபட்டார். அதனால் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர் மீதில் இரங்கி முன் நடந்த குற்றத்தை பொருத்து முகத்தை கழுகும்படி ஏவினார்கள். இருகரத்தின் கற்றை விடுத்தார்கள் அல்லாஹ் தஆலா அளவில் குற்றம் பொறுக்க வேண்டும் என தேடி முகம் வைத்தார்கள். அப்போது அஜீர் வஹ்ஹாபான அல்லாஹ்வில் நின்றும் எதிர் மொழி வந்தது. உமது ஹக்கில் அதபு கேடு செய்ததினால் அவன் தட்டப்பட்டவனானான் என்று. பின்பு கௌது நாயகம் அவர்கள் அவர் ஹக்கில் பல விதமாய் சாளயப்பட்டு இறங்கி துஆ செய்தார்கள். பர்து சமதானவனின்றும் சத்தம் அவன் ஹக்கில் ஒருவர் சபாஅத்தையும் கபூல் செய்ய மாட்டேன் என்று வரும் அளவும் அந்நேரம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆலத்தில் சர்ப் செய்வதையும் கௌதியத்தடயாளத்தையும் விட்டு விலகி கொண்டு சொல்லுரார்கள். என் நாயகனே அவர் ஹக்கில் என் சபாஅத்தையும் அவுலியாக்கள் சபாஅத்தையும் கபூல் செய்யாதிடில் கியாமத்து நாளையில் முரீதீன்களுடைய ஹால் எப்படியாகுமோ இந்த சங்கதிப்புக்காகவின்றி என் நப்ஷை இது போல் ஒத்த பாரமான

கருமத்தை விட்டும் விலகி கொண்டேன். உன்னடியார் கருமங்களை உன்னளவிலே ஒப்பிவித்தேன். நீயே அறிவாளன் தத்துவமுள்ளவன் கருமம் எல்லாம் உன் கை வசம் தான் என்று இவ்வளவும் கௌது நாயகம் அவர்கள் சொல்லவும் மலிகுன் மாலிகான அல்லாஹ்வில் நின்றும் கூப்பிடுதல் உண்டாச்சுது. அவன் தவ்பாவை உமக்காக கபூல் செய்து அவனை தொட்டும் பொருத்து கொண்டேன். இன்னம் உமது முரீதுகள் எல்லோரையும் பாவங்களைவிட்டும் தவ்பாயில்லாமல் துன்யாவை விட்டும் பிரப்படுத்த மாட்டேன். அவர்கள் ரூஹுகளை ஈமான் இல்லாது கைப்பற்ற மாட்டேன் எனவும் வாக்கு தருகிறேன் என்று. இப்படி ஹக்கன் அருளவும் மலகூத்து ஆலத்தில் நின்றும் மவ்தாகாத நாயகனை புகழ்ச்சி செய்யும் சத்தம் கேட்கப்பட்டது. அல்லாஹ்வுக்கே பரிபூரண புகழ்ச்சி. அவனுக்கே மிகுந்த சுக்ர். ரிசாலாக்கள் ஒன்றில் சொல்லப்பட்டிருக்கிறது: கதமி ஹாதிஹி எனும் சொல்வதற்கு ஏவப்பட்டவர்களுக்காக சொன்னபோது எல்லா வலிமார்களும் தங்கள் பிரடிகளை தாழ்த்தினார்கள். ஷெய்கு சன்ஆயிய்யை தவிர அவர் சொன்னார் நாமும் முஹிப்பின்களில் உள்ளவர்தான். ஆனால் அவர் சொல்லுக்கு என் ரகபத்தை தாழ்த்துவது எனக்கு தேவையில்லை என்று. இவர் வழிப்படாது கௌது நாயகம் அவர்களுக்கு கஸ்பாகி அப்போது சொன்னார்கள் அந்த ரகபத்தில் பன்றியுடைய கால் என்று, அப்பால் அந்த ஷெய்காயவர் 400 முரீதுடன் முகத்தை ஜியாரத் செய்ய நாடி புறப்பட்டார். அப்படி போகும் வழியில் காதிரான நாயகன் கட்டளையினால் அந்த ஷெய்குடைய கண் பார்வை நஸ்ரானிய்யத்தான ஒரு பெண் பிள்ளை மேல் நோட்டமாகி ஆசை பூண்டார். தரிபாடில்லாமல் மனக்கிட்டு மீன் பேரில் துளும்புதளிளானார். அவள் கள் விற்கிறவளாயிருந்தாள். அவளாகிறது இந்த ஷெய்கை பார்த்து பன்றிகள் மேய்த்து வரும்படி ஏவுர மட்டுக்கும் அவளுக்கு சந்தோசத்துடன் வழிப்பட்டார். இன்னம் சொன்னாள் ஓய் பெரிய ஷெய்கே உமது தோலில் பன்றி குட்டியை சுமந்து கொள்ளும் அது காலில் மிதி பட்டிடாமல் என்றும் சொன்னாள். அவரும் அவள் சொல் போல் பணிவிடை நிறைவேற்றி வந்தார். இந்த ஷெய்கு இப்படி நடக்கும் ஆச்சரியமான ஹாலை முரீதீன்கள் கண்ட நேரம் சாதிகான நிறப்பமான முஹம்மது பரீதுத்தீன் மஹ்மூதுல் மஞ்ரபி ரலியல்லாஹு அன்ஹுமா இரண்டு ஷெய்கை தவிர மற்றவர் எல்லாவரும் இவரைவிட்டு பிரிந்து விட்டார்கள். இவ்விருவரும் கூடி இந்த பலாயெனும் நெருப்பை அது பத்தின தலத்தில் நின்றும் நூத்து கொள்வதே கடுமை என்று பேசி கொண்டார்கள். ஏன் என்றால் இந்த முசீபத்து கௌது நாயகத்தின் திருநாவினால் அருளியதுக்கு அவர் வழிப்படாத்ததால் தான் இந்த பலாய் பிடித்ததென்று அவ்விருவரும் அறிந்தவரானதால் அப்பால் ஷெய்கு மஹ்மூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த ஷெய்கிடம் இருந்து கொண்டு ஷெய்கு பரீதுத்தீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மாத்திரம் பக்தாத்துக்கு அனுப்பினார்கள். மேலாம்பரமான தைக்கா அளவில் சென்று பனிவிடையின் தலங்களை ஆறாந்து பார்த்ததில் ஏவலான தானம்களை விட்டொளிந்தது ஒன்றும் காணவில்லை. பின்பு குப்பை கூளம் அள்ளி சுமந்து வெளிகளில் கொண்டு போய் போடுவதை தெரிந்து நாடி பார்க்க அதர்க்கும் ஏவல் பணிவிடைகாரர் இருப்பதால் அதற்கு இடமில்லாதிருந்து அப்பணிவிடை தமது கை வசமாகுமட்டும் வழிபார்த்திருந்தார்கள். சில நாட்களுக்குப்பின் அந்த தூத்து வைக்கும் பணிவிடையார்கள் கௌது நாயகத்தளவில் முறையிட்டு எங்கள் பணிவிடையை விட்டும் நாங்கள் பேர்

கேட்டோமே என்று சொன்னார்கள். அப்போது நாயகம் அவர்கள் உங்களின் புதிதாய் வந்த பரதேசி தர்வேஸ் உண்டுமோ என்று கேட்டார்கள.; உண்மைதான் அப்படி ஒருவர் வந்து எங்கள் பணிவிடையும் எடுத்து கொண்டார் என்பதாய் சொன்னார். அப்போது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் அவர் அந்த ஹித்மத்தில் இருக்கட்டும் என்று. அப்பால் கௌது நாயகம் அவர்கள் துப்புரவு செய்ய நாடி எழும்பி போகும் போது கண்டார்கள். ஒரு வாலிபனார் தலை மேல் குப்பை கூடையை சுமந்து கொட்டுவதற்கு கொண்டு போறார் மலையும் பெய்யிது நஜீஸ் அவர் மேல் துள்ளி விழுகுது, இப்படியாய் கண்டு கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டார்கள், நீர் யார் என்று. அதற்கு சொன்னார் ஷெய்கு சன்ஆயினுடைய ஹாதிம் என்று. அப்போது நாயகம் அவர் மீதிரங்கி நீர் நாடியதை தேடிக்கொள்ளும் என்றும் சொன்னார்கள். நீங்கள் தான் மிகவும் அறிவாளர் என்று இவர் சொன்னார் மேலாம்பர மகாமை என்று என்று கௌது நாயகம் அவர்கள் சொன்னார்கள். அதற்கு இவர் என் ஷெய்கை தொட்டும் தாங்கள் பொருத்துகொள்வதை விட மேலான மகாம் என்னிட மேல் என்றார். உனக்காக உன் ஷெய்கை தொட்டும் பொருத்துக் கொண்டேன் என்றார்கள். அப்போது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த வாக்கு மொழியவும் ஷெய்கு சன்யாயிய்யானவர் மறதி மயக்கத்தை விட்டு உணர்ச்சியை பெற்று நஸ்ரானி பெண்ணை உகப்பதை விட்டொழிந்து தமது முந்தின ஹால்களையும் பெற்று அவர் ஆசை கொண்டு ஈசவிய்யத்தான பெண்ணை விட்டும் பிறிந்தார்கள். அந்த பெண்ணானவள் ஷெய்கை கொண்டு ஆசைபூண்டு அவள் கல்புகொளுகி அவரோடு ஒத்து நிற்பதை தெரிந்து கொண்டாள். நீ காபிர் நான் முஸ்லிம். நமக்கிடையில் நேர் பாட்டில்லையே என்று ஷெய்கு சொல்லவும் அவளும் அவளை துயர்ந்தோர் எல்லாம் இஸ்லாமாக்கி ஷெய்குடைய பணிவிடையை தெரிந்து கொண்டாள்.

**முப்பத்தோராம் ஹிகாயத்தாவது அப்தால்களில் நின்றும் ஒரு மனிதர் தன்பேரை விட்டும் நீங்கப்பட்டு தமது நெற்றியை கௌது அவர்கள் வாசல்படி மண்ணில் புரட்டினதால் அவரை தொட்டும் பொருத்து அவர் பேர் பெற்ற சேதியில் பேசுவதாயிருக்கும்.**

அப்தால்களில் நின்றும் ஒரு மனிதர் ஒரு பணிவிடை கொண்டு ஏவப்பட்டவராயிருந்து அப்பால் அவரில் நின்றும் ஒரு ஹதா உண்டாகி அதனால் அவ்வேலையை பறிக்கப்பட்டு எல்லோரும் அவர் மகாமை விட்டு வெறுத்தார்கள். அவர் கௌது நாயகம் அவர்களுடைய வாயலில் ஒதுங்கி கார்மானம் தேடி நெற்றியை மத்ரஸா மண்ணில் போட்டு பிரட்டினார் தவ்பா உடைய மொழித்தலில்லாமல் அப்போது மறைவான ஆலத்தில் நின்றும் ஒரு தோத்தரவில்லா ஒரு சல்லம் வந்தது, யா புலான் எனது மஹ்பூப் செய்யிது அப்துல் காதிருடைய வாசல் மன்னில் நெற்றியை பிரட்டினாய் உன் தோசத்தை விட்டு பொருத்து உன் முன்தின் மகாமை விட உயர்த்தியான மகாமும் உனக்கு தந்திட்டேன். அவர் பணிவிடையளவில் போ. இந்த வலுப்பவான நன்குரை மீது அல்லாஹ்வை சுக்ர் செய்வேன் என்பதாய் வந்தது. அந்த படி மத்ரஸா அளவில் அவர் வந்து பார்க்க கௌதுநாயகம் அவர்களுடைய வருசை பெற்ற மஷாயிகுமார்களோடு இருக்க கண்டார் அவருக்கு உயர்த்தியான மகாம் வாய்த்ததின் பேரில் அல்லாஹ் தஆலாவை சுக்ர் செய்து கொண்டார்.

**முப்பத்திரண்டாம் ஹிகாயத்தாவது ஜின்னுடைய சுல்தான் தன் மகனை ஒரு மனிதர் கொள்ளிப் போட்டதை பற்றி இவரை அது கொள்ள வேண்டும் என நிச்சயித்திற்கும் போது இவர் செய்யிது அப்துல் காதிர் ஆண்டவர்களுடைய முரீதில் உள்ளவர் என்று கேட்ட மாத்திரம் பொறுப்பு செய்து விட்ட சேதியை பேசுவதாயிருக்கும்.**

பக்தாத்தில் வருசையுள்ளோரில் நின்றும் ஓர் ஆலம் ஜும்ஆ தொழுததின் தமது தில்மீதுகளோடு கப்ருஸ்தான் அளவில் ஜியாரத் செய்து பாத்தியா ஓதிவிட்டு அவர் போனார்கள.; போர் அளவில் ஒரு கருநாகத்தை கண்டு தமது கய்யில் இருக்கும் அசாவினால் அதை கொள்ளிப் போட்டார்கள.; அப்போது நீன்ற புளுதி அந்த ஆலமி பொதிந்து அவரை காணவில்லை தில்மீதுகளில் எல்லாம் தஹய்யுரானார்கள் ஒரு சாஅத்துக்கு பின் வர கண்டு ஏதிர் கண்டழைத்து பார்க்க பெருமை பாட்டுடாய ஆதை அனைந்தவரை கண்டு அவருடைய ஹாலையும் உடுப்பையும் குறித்து கேட்டார்கள். அவர் சொன்னார் என்னை இந்த உஜாஜ் வந்து பொதிந்த நேரம் ஜின்கள் என்னை ஆராய்ந்தெடுத்து ஒருதி அளவில் கொண்டு போய் ஜின்னுடைய சுல்தானிடம் என்னை ஹாலிராக்கி நிப்பாட்டவும் பார்த்தேன். அந்த ஜின் அரசின் ஒரு புருவத்தில் உரை உருவப்பட்ட வாளையும் கையில் பிடித்து நிக்குறான். அவன் முன்பதாய் கொள்ளப்பட்ட ஒரு மய்யிதும் தலை உடைந்து உடலில் இரத்தின் துள்ளியும் விழுந்ததாய் கிடக்குது என்னை பார்த்து இது யார் என்று கேட்டான.; அதுகள் சொல்லியது இந்த வாலிபத்தை கொள்ளினவன் இவன்தான் என்று. என்னளவில் அந்த ஜின் அரசன் கோபமாகி பார்த்து கேட்டான் பட்டனத்திற்கு உஸ்தாதானவர் இந்த வாலிபத்தை யாதொரு சபபில்லாதிருக்க ஏன் கொள்ளினீர் என்று. அதற்கு அல்லாஹு தஆலாவை துய்தாக்கிறேன் நான் இவனை கொள்ள வில்லை அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று சொன்னேன். அப்போது அதுகள் சொன்னது அவன் தான் கொள்ளிப் போட்டதற்காரயாளம் அவன் கைய்யில் இருக்கும் அசா அது இரத்தம் அதில் இருக்குது என்று கம்பை பார்த்து இரத்தமிருக்க கண்டு யனதிடம் கொள்ள நான் சொன்னேன் இந்த கம்பினால் பாம்பை கொன்றான். இந்த அதின் இரத்தம் என்று நான் சொல்லவும் அந்த அரசன் சொன்னான் ஓவே மனிதரில் மறயா அந்த பாம்பானது என்னுடைய இந்த பிள்ளையள்ளவா என்று சொல்லவும் நான் வாய் மூடி தஹயற்றளானேன். பின்பு காழி என்னளவில் திரும்பி பார்த்து சொல்லுரார் இந்த மனிதன் கொலை செய்ததை கொண்டு இக்ராரு செய்திட்டான். அவனை கொள்ளிப் போட்ட நீர் தீர்ப்பு சொல்லும் என்று சொல்லவும் காழி தீர்ப்பு சொன்னார் முப்தி அத்தீர்ப்பை சயின் செய்து அந்தபடி வாளை எடுத்து என்னை வதை செய்யனாடவுமே என் மனதில் என் ஷெய்கு உஸ்தாத்தாகிய கௌதவர்கள் சமூகம் ஒதுங்கி உதவி தேடினேன். அது சமயம் உடனே நூரானிய்யான ஒரு மனிதர் வெளிப்பட்டு வந்து இம்மனிதனை கொல்லாதே அவர் அவுலியாக்களுக்கரசர் அதிபதி செய்யிது அப்துல் காதிருடைய முரீதில் உள்ளவா.; அவர்கள் உன்னை அவர் சபபினால் வம்பினும் நேரம் அவர்கள் சமூகத்துக்கு என்ன ஜவாப் கொடுப்பான் என்றிது சொன்ன உடன் சிறப்பான நாமம் கேட்ட மாத்திரமே வாளை கையை விட்டெறிந்து விட்டு சொல்லரார்வே பட்டனத்திற்கு உஸ்தாதானவரே நான் கௌதவர்கள் ஹழ்ரத்துக்கு அடி பணிந்ததற்காக நீர் என் மகனை கொலை செய்தததை பொறுத்து கொண்டான.; ஆதலால் அப்போது நீர் இமாமாக நின்று மகன் மீது ஜியாரத் தொழுகை தொழுவித்தவனுக்கு பிள்ளை

பேர் என்ற துஆயிரவும் என்று சொல்லி, பின்பு பெருமை பிரவட்டமும் என் மீது போற்றி முன்னை ஆராய்ந்து எடுத்து போனவர்தன் என்னையும் அனுப்பி அதிலும் சேர்க்க உத்தரவு செய்தார். அவர்கள் இவ்விடம் என்னை சேர்த்து விட்டு என் கண்ணை விட்டு மறைந்திட்டார்கள். ரலியல்லாஹு அன்ஹு செய்யிது அப்துல் காதிர் அவர்கள்.

**முப்பத்திமூன்றாம் ஹிகாயத்தாவது அவர்களுடைய மத்ரஸா கட்டிடத்தில் முளைத்து நிற்கும் புல் பூண்டை தின்று அவ்விடத்து நீரையும் அருந்துவதால் மானிடர்கள் பேசியை விட்டு சுவாத்தியும் பெற்ற சங்கதியை பேசுவதாயிருக்கும்.**

உலமாக்கள் பேசிவந்தார்கள் கௌது நாயகம் அவர்கள் காலத்தில் பக்தாத் நகரத்தில் வபாகுழப்பம் உண்டாகி நாள் தோறும் ஆண் பெண்ணில் பத்து லட்சம் ஜனத்தை விடவும் அதிகமாய் மவ்தாக இருந்தது. அவ்வேளை ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் முறையிட்டார்கள். அதற்கு அவர்கள் சொன்னார்கள் தங்களின் மத்ரஸாவின் சூலால் முளைத்திருக்கின்றது போன்றதை எடுத்து அரைத்து தின்றால் அல்லாஹு தஆலா அதின் பொருட்டு பேதி வாந்தியையும் மற்றும் வியாதியையும் சுகமாக்குவான் என்று திருவாய் மலர்ந்தருளியதை பற்றி மனுக்கள் தின்று வந்ததில் சுகம் சலாமத்திலானார்கள். அப்பால் மருந்துக்கு வரும் மானிடர் அதிக நெருக்கமாகினதால் மொழிந்தார்கள் நமது மத்ரஸா தண்ணீரில் நித்தம் ஓர் துளியை குடித்தாலும் அல்லாஹு தஆலா சுகம் கொடுப்பான் என்று. அப்படி பரக்கத்தர மத்ரஸா தண்ணீரையும் குடித்தார்கள். அப்படியே நிறப்பமான சுகமடைந்தார்கள். அதன் பின் அது காலத்தில் பக்தாத் பட்டனத்தில் தாவூன்வரையே இல்லை.

**முப்பத்தினாலாம் ஹிகாயத்தாவது அவர்கள் சொல் இந்த உஜூத் என் பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்களுடைய உஜூத். அப்துல் காதிருடைய உஜுதில்லை என்று அவர்கள் சொன்னதில் பேசுவதாயிருக்கும்.**

சொல்கிறார்கள் ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு நாள் வீட்டுக்கு போனார்கள். தங்கள் சந்ததி அப்துல் ஜப்பார் அவர்களும்; பின்துயர்ந்து வந்தார்கள்; வீட்டளவில் புகும் முன் கௌது நாயகத்தை காணவில்லை. மகனார் வீட்டில் புகுந்து தாயாரிடம் பேசினார்கள். நான் கௌது அவர்களுடனே வாசல் வரும் அளவும் வந்தேன். அவர்கள் வீட்டில் புகுத காணவில்லை என்றார்கள். தாயார் சொன்னார்கள் பதினைந்து நாளாக அவர்கள் வீட்டிலே புகுவதில்லை என்றார்கள். இந்த மொழி கேட்ட பின் கௌது நாயகம் அவர்கள் இரவில் வணக்கம் செய்திருக்கும் தளமாகிய காண்பரயளவில் போய் பார்க்க அது வாசல் உள்ளால் பூட்டிருக்க கண்டு கௌது நாயகம் அவர்கள் உள்ளேதான் இருக்கிறார்கள் என்று அறிந்து, அவ்வாசலிடத்தே பாதி இராவாகும் வரைக்கும் கை மேல் கை வைத்து அதபுடன் நின்றவர்களாய் தரிபட்டார்கள். நடு இராவாகிய நேரம் கௌது நாயகம் அவர்கள் வாயிலை திறந்து தங்கள் குமாரர் அப்துல் ஜப்பார் அவர்களுக்கு சொன்னார்கள் நீ எல்லா வக்திலும் உன் நப்ஸில் நோட்டமிடுகிறாய் நான் வீட்டளவில் போகாதது அழகனவே அப்படி நீ எண்ணுவது போல் கருமம் ஆயிருக்கில் பிள்ளை பெறுவது பிச்சளம் பழகுவது பழுதாகுவது இன்னம் ஹகீகத்தில் காம்பரயளவில் நான் வருவேன். நீ கண்டது போல் ஹல்குகள்

பார்வையில் நான் வீட்டுக்குவருவது போல் தோணும் என்று நாயகம் அருள் செய்த மாத்திரம் இது கேட்டு அப்துல் ஜப்பார் அவர்கள் மனமகிழ்ச்சியாகி அதன் பின் கேட்கிறார்கள் முஹ்தாரான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கலா ஹாஜத்துக்கிருந்தார்களாகில் வெளிப்படுவதை பூமி விழுங்கி விடுவதும் அவர்களின் வியர்வை அத்தர் வாசம் வீசுவதும் மேனியில் ஈ அணுகாமல் இருப்பதுமாய் இருந்ததே. இதுகள் அவர்களுக்கு சொந்தமான கருமத்தில் உள்ளதே. தங்கள் சமூகத்தால் மற்றியே காணுரோயே என்று கேட்டதற்கு சொன்னார்கள் அப்துல் காதிர் திட்டமாக பனாவாகி தன் ஜத்து ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தாத்தில் பகாவாகி விட்டதனால் என்று. இன்னும் சொன்னார்கள் அல்லாஹ்வின் ஆணை இது எனது ஜத்துடைய உஜுது அப்துல் காதிருடைய உஜீத் இல்லை என்பதினால் அப்பாலும் அப்துல் ஜப்பார் அவர்கள் கேட்கிறார்கள். நபி நாயகம் அவர்களுக்கு மேகம் கொடையிடுவதாக இருந்ததே தங்கள் சமூகத்திற்கும் அப்படியில்லாதே என கேட்கும் போது நாயகம் அவர்கள் அது வேண்டாம். எனவே தான் விட்டு விட்டேன் விடாத வரையில் ஹல்குகள் என்னையும் நபி என்று எண்ணி விடுவார்கள் என்றார்கள்.

**முப்பத்தைந்தாம் ஹிகாயத்தாவது கௌதவர்களின் கல்வி வந்தனம் விர்துகள் இவைகளில் பேசுவதாயிருக்கும்.**

பேசிவருகிறார்கள் திட்டமாக மஹ்பூபீன்களுக்கு அரசரான கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பூரஅய்துடையோரான 650 சீடர்கள் இருந்தார்கள். எல்லா நாளையிலும் அவர்களுக்கு ஓதிக் கொடுப்பார்கள். யாருக்கும் கலம் இல்லாதிருக்கில் தங்கள் கலத்தில் நின்றும் கொடுத்துக் கொள்வார்கள். யாரும் முரீது பெற்றால் தங்கள் கையினாலே சில்சிலா எழுதி கொடுப்பார்கள். தங்களுடைய வுளு முறிந்திடில் உடனே உளுவுக்கு பகரமாய் குளித்து வுளு எடுத்து கொள்வார்கள். கௌது நாயகம் அவர்களுக்கு ஒரு தினம் வயிற்றுப் போக்கு உண்டாச்சிது. அவ்விரவில் கலாவிற்கு 52 தடவை போனார்கள். ஒவ்வொரு தடவையும் குளித்து கொள்வார்களாம். இன்னம் ஹாதிம்கள் கடைக்குப் போய் தர்வேஷ் பக்கீர்களுக்கு வேண்டி ஏதும் வாங்கி வருவதற்கு வருத்தப்படுவாராகில் கடை வீதிக்கு தாங்களே போய் வேண்டுமான சாமான்களை வாங்கி வருவார்கள். தங்கள் பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை துயர்ந்து நடப்பதற்காய் இனி ஜமாத்துடனே சபரில் ஆகி ஒரு தளம் மீது இரங்கிடுவார்கள். தங்கள் கையினாலே கோதுமை திரித்து மாவை குலைத்து ரொட்டியும் செய்து ஜமாஆ மீது பங்கிடுவார்கள். தங்கள் தரிசனம் காண வந்தோரை கனதியாக்கி அவருக்கு தரிசனம் செய்து சங்கையாக்குவார்கள். இன்னம் மிகுந்த இறைச்சி கொளுத்ததையும் விட்டு விடுவார்கள். ஒரு நாள் ஏழு சிறு பிள்ளைகள் ஒன்று கையில் அரை திர்ஹம் கொண்டு வந்து இவர்கள் கையில் கொடுக்க தன் இஷ்டமான வஸ்தை கடையில் வேண்டிக் கேட்டுது. அந்த படியே தாங்கள் கடை வழி ஏகி அது சாமானை வேண்டி வந்து அது அதுக்கு கொடுத்தார்கள். நாள் தோறும் தங்கள் சிறப்பான உஜுதினால் கராமாத்துகள் என்னங்களாக வெளிப்படுவதாக இருப்பதும் அவைகளை மறைப்பதுவாகவும் இருந்தார்கள்.

அவர்கள் சொல்கிறார்கள் அல்லாஹ் தஆலாவில் நின்று ஒரு ஏவலுக்காய் அல்லது ஒரு ஹிக்மத்திற்காகவே அல்லாது யாராவது ஒருவன் கராமத்தை மறைக்காது வெளிப்படுத்துவானாகில் அவன் துன்யாவை தேடுகிறவனாக இருக்கும் என்றார்கள். இன்னம் அவர்கள் சொன்னார்கள் என் முரீதாக ஒருவன் வெளிப்பட்டு என் பிச்சளம் அல்லது என் கலிபாக்களால் கிலாபத்தும் பெற்று கராமத் மர்தபாவையும் சேர்ந்து தன் நாட்ட தேட்டத்தை வெளிப்படுத்துவானாகில் இருபதியிலும் முகம் கருப்படைந்தவனாவான். தங்கள் பிள்ளை செய்யிது யஹ்யாவை ஈன்ற மாதா சுகமில்லாத்திருக்கும் போது தங்கள் திருகரத்தினால் கோதம்பை திருகையிட்டு திரித்து மாவாக்கி ரொட்டி சுட்டு கூஜாவில் தண்ணீர் எடுத்து தோலில் வைத்து வந்தார்களாம். எல்லா நாளையிலும் 1000 ரக்அத் தொழுவார்கள். சூரத்துல் முஜம்மில் அல்லது சூரத்துற் ரஹ்மானை ஓதுவார்கள். ஒவ்வொரு பர்ளான தொழுகையின் பின் ஒவ்வொரு கத்தம் ஓதுவார்கள். எல்லா இரவிலும் அர்பயீனிய்யா அஸ்மாவை 660 தரம் ஓதுவார்கள். பகல் எல்லாம் அப்படியே ஓதுவார்கள். லுஹா தொழுகையின் பின் துஆ சைபியை ஓதுவார்கள். அசருக்குப் பின்னும் தஹஜ்ஜத்திற்கு பின்னும் அதை ஓதுவார்கள். ஸலாத்துல் குப்ரா எனும் அஸ்மாவுல் ஹுஸ்னாவையும் அஸ்மாவுன் நபியையும் 1000 விடுத்தம் ஓதுவார்கள். மனிதர்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் தவ்ஹீத் எனும் ஓர்மை படுத்துதல் என்பது என்னவென்று கேட்டார்கள். அதற்கு நாயகம் சொன்;னார்கள் தவ்ஹீதில் தவ்ஹீதை விடுவது தான் தவ்ஹீத் இந்த நாவு கொண்டும் மொழியக்கூடாது இந்த கல்பிலும் ஊசாடப்படாது இந்த கண் கொண்டும் காணப்படாது இந்த காது கொண்டும் கேட்கப்படாது இதுதான் தவ்ஹீத் எனும் எடுப்பு மற்றெல்லாம் ஹவுஸ் என்றார்கள்.

**முப்பத்தாறாம் ஹிகாயத்தாவது அவர்கள் முரீதுகளில் நின்றும் ஒரு பெண் பிள்ளையை கொண்டு ஒரு பாசிக் கேடான ஜினா செயல் செய்ய நாடி வரும் போது ஹலாசாகின விவரத்தை பேசுவதாயிருக்கும்.**

ஒரு அழகிய பெண்ணவள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடைய முரீதாக இருந்தாள். அவள் கௌது நாயகம் அவர்களுடைய ஹழ்ரத்திற்கு சேர முன்னமே அவளை ஒரு கொடும்பன் இச்சித்திருந்தான.; அப்படி இருக்கும் நாளில் அவள் மலை பொதும்பளவில் தன் ஹலதுக்காய் போனாள். அதை அவன் அறிந்து பின் துடர்ந்து போனான். அவள் காருமான பத்தினி தனம் எனும் முந்தானியை லவ்து செய்ய நாடினான் அது நஜீசாகி விட ஜினா செய்ய நாடினான். அதை விட்டகல அவளுக்கு ஒரு தெம்பும் காணவில்லை. அந்நேரம் கௌது நாயகம் அவர்கள் உடைய நாமத்தை கூப்பிட்டு அரபு வாக்கில் முன் கூறப்பட்டதை சொன்னாள் அதின் பொருள் கௌதுல் அஃலமே இரட்;சித்து காப்பாற்றும் என்றும், மனு ஜின் இவர் கூட்டதிற்கும் கௌதே இரட்சியுங்கள். ஷெய்கு முஹியத்தீன் இரட்சியுங்கள் என் செய்யிது அப்துல் காதிரே இரட்சியுங்கள.; அப்படி ஹழ்ரத் அவர்களை முன்னிறுத்தி கூப்பிடும் வேளையில் ஹழ்ரத் கௌது நாயகம் அவர்கள் மத்ரஸாவில் வுளு செய்கிறார்கள.; தங்கள் இரு நாதாரத்தில் இருந்து பாதகுரடு இரண்டையும் எடுத்து எறிந்தார்கள். அந்த பாசிக்கு அவனது நாட்டம் அளவில் சேர முன்னே மிரிதடி இரண்டும் அவன் தலை

அளவில் சேர்ந்து அடித்து உதைக்கவாச்சுது அவன் சாகும் அளவும். அப்பால் இரண்டையும் எடுத்து ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அளவில் கொண்டு வந்து அவர்கள் சமூகத்தே கூடிய சபையில் நடந்த சங்கதி அறிவித்தார்கள்.

**முப்பத்தி ஏலாம் ஹிகாயத்தாவது ஒரு ஒட்டகை வியாபாரி அவர்கள் ஹழ்ரத்தை இரட்சிக்க தேடினதால் ஒட்டகம் மீது ஏற்றும் மதி சாமான் சுமைகளை பெற்றுக் கொண்ட அகத்தில் பேசுவதாயிருக்கும்**.

ஒரு வர்த்தக வியாபாரத்திற்கு போக காபிலா பிரயாணத்தை வழிபார்த்து இருந்த சமயம் வந்த போது ஒரு ஒட்டகம் சீனி பாரம் ஏற்றி காபிலா உடனே புறப்பட்டாh.; நடு வழி போகும் போது அப்பாரத்துடனே அதுகள் இவரை விட்டும் மறைந்து நடந்திடுத்து. தேடி பார்க்க கண்டு பிடிக்காதிருந்து தஹறில் ஆகி ஆலோசித்து நின்றார். அவருமோ கௌது நாயகம் அவர்களுடைய முரீதானவர். ஹழ்ரத் அவர்களை நின்னயம் கொண்டவர். அப்போது சத்தம் உயர்த்தி செய்யிது அப்துல் காதிரே எனது ஒட்டகங்கள் அதின் சுமைகள் உடனே மறைந்திட்டதே என்று கூவிட்டார். அப்போது மலை மேல் இருந்து வெள்ளைப்பிடவை அணிந்த ஒரு மனிதர் சட்டைக் கையால் ஷைக்கினை செய்து இவரை கூப்பிடுவது போல் கண்டார். அவ்விடத்தே போய் பார்க்க அந்த மனிதர் காணவில்லை தமது பாரம் ஏற்றிய ஒட்டகங்களை கண்டு பிடித்துக் கொண்டார்.

**முப்பத்தெட்டாம் ஹிகாயத்தாவது ஒரு வலி தமது விலாயத்தை பறிக்கப்பட்டு கௌதுல் அஃலம் அவர்களின் சபாஅத்தினால் பெற்றுக் கொண்டதை பேசுவதாயிருக்கும்.**

கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் அவுலியாக்களில் ஒருவருடைய விலாயத் உரியப்பட்டது. அவர் மிகுந்த அவுலியாக்களிடம் போய் பார்த்ததிலும் ஒருவர் சிபாரிசும் பிரயோஜனித்துதில்லை. அவர் எல்லாவர்களும் சொன்னார்கள், எங்கள் மன்றாட்டம்மென்றும் உம்மில் ஒப்புக்கொள்ளப்படாததால் ஹழ்ரத் கௌதளவில் போகும். அவர்பால் ஒதுங்கும். உமது பதவியை பெற்றுக் கொள்வீர் என்பதாய் சொன்னார்கள். அவர் அதுபோல் அந்த சமூகம் சென்று ஒதுங்கி நின்றார். அவர் ஹக்கில் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹு தஆலா அளவில் துஆ கேட்டார்கள். அப்போது மறைவான ஆலத்தில் நின்றும் ஒரு சத்தம் வந்தது. அவுலியாக்களில் மிகுந்தவரும் அவனுக்காய் துஆ இரைந்தார். அவர்களினது துஆவை யான் கையேர்க்கவில்லை. ஆதலால் அவனுக்கு நின்றும் துஆ செய்ய வேண்டாம் என்று. அந்த சத்தம் கேட்ட போது தங்களின் சஜ்ஜாதாவை எடுத்துக் கொண்டு காடோளி முகம் நோக்கி போகவேன முதலாம் அடி எடுத்து வைக்கும் போமு ஒரு சத்தம் ஹக்கு புறத்தில் நின்றும் வந்தது. கௌதுல் அஃலமே அவனும் அவன் போல் ஒத்த 1000 மனிதனை தொட்டும் உமக்காக பொறுத்துக் கொண்டேன் என்றும். இரண்டாம் அடி எடுத்து வைக்கும் போது அவன் அவன் போல் ஒத்த 2000 மனிதர்களை அவர்கள் பதவியளவில் சேர்த்துக் கொண்டேன் என்றும். மூன்றாம் அடி எடுத்து வைக்கும் போது அவன் அவன் போல் 3000 பேர் அவரினது ருத்பா அளவில் சேர்த்து குற்றம் பொறுத்து அளித்தேன் என்றும். இப்படியான சத்தம் கேட்டு மனமகிழ்ந்து அல்லாஹ் தஆலாவை சுக்ர்

செய்தார்கள். அந்த வலியானவர் அவர் தகுதியையும் பதவியையும் இவர்கள் பரக்கத்தினால் பெற்றுக் கொண்டார்.

**முப்பத்தொன்பதாம் ஹிகாயத்தாவது கௌதவர்கள் ரமலான் மாசத்தில் ஒரு நேரத்தில் 70 மனிதர் வீட்டில் நோன்பு திறந்த சேதியில் பேசுவதாயிருக்கும்.**

ரமலான் மாதத்தில் ஒரு நாள் 70 மனிதர் ஒவ்வொருவரை கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தமது வீட்டில் வந்து நோன்பு திறக்க வேண்டும் என அழைத்திருந்தார்கள். அவர் வீட்டில் அவர் ஹாலிராகுவதால் பரகத்து உண்டாக வேண்டி ஒருவர் அழைத்து ஒருவருக்கு தெரியாது. அவர்கள் எல்லாவருக்கும் நல்லதென ஜவாப் சொன்னார்கள். அப்படியே ஒரே நேரம் அவர் எல்லாவர் வீட்டிலும் ஹாலிராகி நோன்பும் திறந்து அது போல் தங்கள் மேலமுயர்ங்கியாவிலும் பசியாரினார்களாம். இந்த சமாசாரம் பக்தாத் ஊரில் பிரபலமாகியது. அப்போது ஒரு ஹாதிமுடைய மனதில் ஊசாட்ச்சிது ஹழ்ரத் கௌது நாயகம் அவர்கள் தைக்காவை விட்டு புறப்படவேயில்லை. எவ்விதம் அவர் அவர் வீடுகளுக்குப் போய் ஒரே நேரத்திலே உஜீபனம் தின்னுவதும் சூரத்தாகும் என்று இப்படி எண்ணியிருக்கும் சமயம் கௌது நாயகம் அவர்கள் அந்த ஹாதிம் அளவில் முன்னோக்கி சொன்னார்கள்: ஓய் ஹாதிமே! அவர் எல்லாவரும் சொல்வதில் உண்மையானதுதான.; எல்லார் அழைப்பிற்கும் நான் ஜவாப் சொல்லி அவர் அவர் வீட்டுக்கு ஹாலிராகி அவர்களுடைய உஜீபனமும் தின்று தான் வந்தேன் என்றார்கள்.

**நாற்பதாம் ஹிகாயத்தாவது எல்லா ஒலிமாரும் விலாயத்து ருக்பா இவர்கள் ஆம் ஆக்குவதால் பெற்று கொள்கிறதை பேசுவதாயிருக்கும்.**

ஷாஹ் ஹாசிம் ரஹிமஹுமல்லாஹ் அவர்கள் தங்கள் ரிஸாலாவில் எழுதுகிறார்கள் அல்லாஹ் தஆலா அவன் அடியாரில் ஒருவரை வலியாக்க நாடினால் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சமூகத்திற்கு அவரை பிடித்து வர ஏவுவான். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைய சமூகம் வந்த நேரம் நாயகம் உத்தரவு செய்வார்கள:; இவரை எனது பிள்ளை செய்யிது அப்துல் காதிர் இடம் கூட்டிப் போகுங்கள். இவர் விலாயத்திற்கு தகும் பாத்திரர் தான் என்பதை அவர் பார்க்க வேண்டி. எந்தபடி கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹல்ரத்திற்கு வந்து விலாயத்திற்கு லாயிக்காக கண்டார்களாகில் அவர் பெயரை முஹம்மதிய்யத்தான கடிதத்தில் எழுதி தங்களின் பரக்கத்தான முத்திரையால் முகரும் வைத்து அதை நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் காட்டப்படும். அப்பால் கௌது நாயகம் அவர்கள் உடைய ரிஸாலாவில் கண்டபடி நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உத்திரவும் எழுதியபின் அவருக்கு விலாயத்து பரிவட்டம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையினால் கொடுக்கப்படும். மறைவான ஆலம் வெளியான ஆலம் இரண்டிலும் அந்த ஒலி ஒப்புக் கொள்ளப்பட்டவராவார். இந்த அறுதிமானத்தை கௌது நாயகம் அவர்கள் உடைய ஹழ்ரத்தைக் கொண்டு கியாம நாள் வரையும் கொளுக நிற்கும் அவுலியாக்கள் எல்லாவரும் இது மகாமில் கௌது நாயகம்

அவர்களுடன் கூட்ட நிகருமில்லை. அவர்கள் யானி கௌதுடைய சமூகத்தால் குத்புகள் கௌது மற்றும் அவுலியாக்கள் எல்லாம் பைழு தேடுவார்கள்.

**நாற்பத்தொன்றாம் ஹிகாயத்தாவது அஹ்மது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடைய மத்கபை கௌது நாயகம் அவர்கள் தெரிந்து கொண்ட சேதியாயிருக்கும்.**

கௌது நாயகம் அவர்களுடைய கல்பில் ஒரு நாளைத்தினம் ஊசாட்டிச்சுது. அவர்களுடைய மத்கபை விட்டு ஹன்பலி மத்ஹபளவில திரும்பி கொள்ள. அப்போதிரவில் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்;களையும் ஸஹாபாக்களையும் கண்டார்கள். இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் கையால் தங்கள் உடைய தாடியை பிடித்துக் கொண்டு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் சொல்லுகிறார்கள் தங்கள் பிள்ளை முஹியத்தீன் செய்யிது அப்துல் காதிரை இந்த லயிபான ஷெய்கை காத்துக் கொள்ளும்படி ஏவிடுங்கள் என்று தேடுகிறார்கள். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறும் சிரிப்பு சிரித்தவர்களாய் செய்யிது அப்துல் காதிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை கூப்பிட்டு இந்த ஷெய்குடைய தேட்டத்தை கபூல் செய்யும் என்று சொன்னார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸல்லாவில் சுப்ஹு தொழ வந்து தொழுதார்கள். அன்னையில் முஸல்லாவில் இமாமே அல்லாது மற்றும் பேர்கள் ஜமாஅத்தை தொழ இல்லாதிருந்து கௌது நாயகம் அவர்கள் தொழுக வரவும் ஜமாஅத் வந்து நெருங்க ஒளிந்த தளம் என்று இல்லை என்றாச்சுது. இதை பேசிவந்தவர்கள் சொல்லுகிறார்கள் அன்றைய தினம் ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த முஸல்லாவில் ஹாலிராக இல்லை என்றாகினால் ஹன்பலி மத்ஹப் அற்று போகியிருக்கும்.

பஹ்ஜதுல் அஸ்ரார் என்ற கிதாபில் சொல்லுகிறார்கள் இமாம் அஹ்மது இப்னு ஹம்பலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜியாரத் செய்தார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் அவுலியாக்களும் இருந்தார்கள.; அப்போது அவர்கள் காணுகிறார்கள் இமாம் அஹ்மது கப்ரை விட்டு உதயமாகி அவர்கள் கையில் ஒரு சட்டை இருந்ததை. கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கொடுத்து இருவர்களும் கழுத்தை கட்டி அணைத்துக் கொள்வதாக. இமாம் சொல்லுகிறார்கள் செய்யிது அப்துல் காதிரை சரீஅத்து தரீகத்துடைய இல்மும் ஹலாலுடைய இல்மும் ஹலாலின் செய்கையும் உள்ளளவில் ஹாஜத்தாக நிற்க என்றார்கள்.

**நாற்பத்திரண்டாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்கள் உடன் அபூ ஹனிபா இமாம் பேசிக்கொண்ட விவரமாயிருக்கும்.**

அபூ ஹனிபா ரலியல்லாஹு அன்ஹு கௌது நாயகம் அவர்களுடனே ரூஹானிய்யா சந்திப்பு சந்தித்தார்கள். இமாம் கேட்டார்கள்: சுல்தானே செய்யிது அப்துல் காதிரே! நீர் ஷரீஅத்தில் அஹ்மது இப்னு ஹம்பலி மத்ஹபை தெரிந்தீர் எனது மத்ஹபை தெரிந்தீர் இல்லையே. அதில் இருக்கிற சபப் என்ன? நானும் உமது பாட்டனாரான இமாம் ஜஃபருஸ் ஸாதிகில் நின்றும்

பைழு பெற்றவரில் உள்ளவர் தானே. அவர்கள் சமூகத்தால் இருந்து வருஷமாய் பிரயோஜனம் பெற்றேன.; நான் மனதில் நினைத்தேன் அது இரண்டு வருஷமும் இல்லாதிருக்கில் நுஃமான் ஹலாக்கென்று ஆக இப்படியாய் சொல்ல கேட்டதற்கு, கௌது நாயகம் அவர்கள் சென்னது இரண்டு சபபுக்காய். இரண்டில் ஒன்று அவர்கள் மத்ஹபானது ஜனம் குறைத்தலால் பலகீனமாகி விட்டது. இரண்டாவது அவர்கள் மிஸ்கீன். நானும் மிஸ்கீன். எனது ஜத்து ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ் தஆலா இடத்தில் மிஸ்கீன் தனத்தை தேடி கேட்டார்கள். எங்கள் ஆண்டவா என்னை மிஸ்கீனாய் ஹயாத்தாக்கி மிஸ்கீனாய் மவ்த்தாக்குவாயாக. இன்னும் மிஸ்கீன் கூட்டத்தில் என்னை எழுப்பிடு என்று, இதற்காகத்தான் என்று சொன்னார்கள்.

**நாற்பத்தி மூன்றாம் ஹிகாயத்தாவது ஷெய்கு அஹ்மது கன்ஜ் பக்ஸ் என்பவர் கௌதுடைய தில்மீதில் நியமாகி அது மீது தமது ஷெய்கால் தரிபடுத்தும் சமாசாரத்திலாயிருக்கும்.**

கன்ஜ் பக்ஸ் என்று பிரசங்கமான ஷெய்கு அஹ்மது ரலியல்லாஹு அன்ஹு எனப்பட்டவர்கள் தங்களுடைய ஷெய்காகிய ஷெய்கு அபி இஸ்ஹாகில் மஞ்ரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பணிவிடையில் இருந்தார்கள். ஒரு நாள் தங்களுடைய கல்பில் ஊசாடிச்சுது வுளு செய்கிற ஹாலில் காதிரிய்யா தரீகாவது மற்ற தரீகைவிட சிறப்பு மிகுந்ததா இருக்கும். அதல்லாது தரீகுக்கு இதைப் போல் பிரசித்தமில்லை. அதன் அளவில் ஹாசு ஆலிம் எல்லாம் சாயிரார்கள் என்பதாய் எண்ணினார். அப்போது தங்களுடைய ஷெய்கு ஷெய்கு அபி இஷ்ஹாக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வெளியாகி அஹ்மதே கௌதுடைய மர்தபாவை நீர் அறிவீரா என்று கேட்டார்கள். அவர்கள் அறியேன் ஆகிலும் ஷெய்கு சொன்னார்கள் திட்டமாக கௌது நாயகத்திற்கு 12 சிபத்து உண்டும.; சமுத்திரங்கள் மையாகவும், மரம் மட்டைகள் கலமாகவும், மனு ஜின் மலக்குகள் எழுதிரவர்களாகவும் இருந்தாலும் அது வன்னிப்புகளில் நின்றும் தாழ்ந்த வன்னிப்பையாவது பயான் செய்ய சக்தி பெற மாட்டார்கள். ஆக இது மொழிகளை தங்களுடைய ஷெய்கில் நின்று கேட்ட பொழுது தங்களுக்கு ஆசையும் அவள் கையையும் தொட்டு தரிபாட்டில்லாதே துளும்பி சென்னார்கள்: திடனாக கௌது நாயகம் ஆகிறவர்கள் அஹ்லுல்லாக்களை கோல் காட்டி விடுமானவர்கள். அவர்களது தரீகு மீதே அல்லாது நான் மவ்த்தாகிரதில்லை என்று ஒரே நிர்ணயம் கொண்டவர்களாக சொல்லிக் கொண்டு பக்தாத் புறம் முகம் வைத்து இஜ்மீர் கொனத்தில் நின்றும் ஓர் மலையளவில் சேர்ந்தார்கள். அந்த மலையின் கீழால் ஓடு தண்ணீர் அருவி உண்டாயிருந்தது. அதில் வுளு எடுத்து அந்த தளத்தில் தொழுதார்கள். ஒரு தூக்கம் போல் வந்தது. நித்திரைக்கும் விழிப்பிற்கும் இடையில் கௌது நாயகம் அவர்களை கண்டார்கள். அவர்கள் இரு கரத்தில் சிகந்த கிரீடம் ஒன்றும் பச்சை தலைப்பாகையும் உடன் வந்து இந்த ஷெய்கு அஹ்மதை நோக்கினார்கள். அவர்கள் தெருசினம் கொண்டு சிறப்பு பெற்று அதபுடன் எழும்பி நின்றார்கள். கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூப்பிட்டார்கள்ளூ கிட்ட முடுகினார்கள். அவர்களுடைய தலை மேல் இறங்கியதை வைத்து தங்கள் பரக்கத்தான கையாலே

தலைப்பாகையும் சுற்றி பின்பு என் பிள்ளை அஹ்மதே நீர் அல்லாஹ் உடைய அவுலியாக்களில் நின்றும் உள்ளவர் என்று சொல்லிவிட்டு இவர்களுடைய கண்ணை விட்டும் மறைந்திட்டார்கள். அப்பால் ஷெய்கு அஹ்மது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விழித்து பார்க்கையில் தொப்பியும் தலைப்பாவும் தலை மேல் இருக்க கண்டு அல்லாஹ் தஆலாவை சுக்ர் செய்து அது இரண்டையும் கொண்டு தங்களுடைய ஷெய்களவில் மீண்டார்கள். முன்னிருந்ததை விட தங்களுடைய ஹாலின் அதிகத்தை கண்டார்கள். அவர்களுடைய ஷெய்களவில் வரும் போதெல்லாம் ஷெய்கவர்கள் பார்த்து பார்த்து சந்தோஷப்படுவார்கள். இன்னம் சொல்வார்கள் ஓய் அஹ்மதே இந்த தாஜும் இமாமத்தும் உமக்கு பரகத்தாக இருக்கும.; முன் ஒரு வாசிதா கொண்டு பைழு பெற்று வந்தீh.; அப்போது உதவி இல்லாதே நீர் நீராகவே பைழு பெருகறவரா இருந்தீர். ஆனதால் காதிரிய்யா வழியின் நி.்மத்தினாலும் கௌதுல் அ.்லமுடைய பைழினாலும் நீர் உயர்ந்தவராகி விட்டீர். அவுலியாக்களுக்கிடையில் உமது தலை உயர்ந்திடுத்து என்று இதுவெல்லாம் சொல்லி அந்த உடுப்பை அந்த ஷெய்கவர்களும் பரகத்தை நாடி தலை மேல் அணைத்;து அல்லாஹ்வை சுக்ர் செய்தார்கள். இன்னம் சொன்னார்கள் அஹ்மதே ஹழ்ரத் கௌதானவர்கள் உம்மை அவர்கள் சமூகத்தில் நி;ன்றும் சந்தோசத்திலாக்க உமது கருமத்தையும் நிரப்பமாகி விட்டார்கள் என்றார்கள். ஒரு நாள் ஷெய்கு அஹ்மது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஷெய்கிடத்தில் புகராக்களுக்கு உஜீபனம் செய்கிறதற்காக வேண்டி வழமை போல் மலை அடிவாரம் போய் விறகு கட்டு சேர்த்து வர உத்தரவு கொடுக்கும்படி வேண்டினார்கள். அந்த ஷெய்கு சொன்னார்கள் அந்த வேலைக்கும் உமக்கும் இடையில் ஒத்துவராது என்றார்கள். உத்தரவு தரதான் வேணுமென விரும்பி தேடினார்கள். அதற்கு உம்முடைய பிரியம் என்று ஷெய்கு சொன்னார்கள். அப்பால் மலைக்குப் போய் விறகு சேர்த்து குமியமாக கட்டி தலை மேல் எடுத்து வைக்க நாடவும் விறகு கட்டாகிறது பிளந்து வந்து தலைக்கு உயரும் முலமடுக்கு இடை கிடக்கும்படி நின்றது அவர்கள் நடக்கும் போதெல்லாம் விரகும் நடந்து ஷெய்கு அவர்களுடைய சமூகம் சோர்ந்தார்கள். அப்போது ஷெய்கு சொன்னார்கள் ஓய் அஹ்மதே ஒரு தலையாகப்பட்டது கௌதவர்கள் அதற்கு தாஜு அமாமத் உடுத்து தகுமாக்கிய பின் உளர்ந்த விரகு கட்டை அந்த தலை மீது சுமக்க தகுதி உண்டோ இல்லை என கௌதாகிறவர்கள் மரம் அனைவதுக்கும் ஷெய்கு என்று அல்லாஹ் தஆலா பிரத்தால் கூப்பிடப்பட்டவர்கள் ஆனதால் என்று அருன் செய்த பின் இன்னம் சொன்னார்கள் இனி இப்பனிவிடை நீர் செய்யாதயும் என்று மெலிந்து பின் ஷெய்கவர்களின் சொல்லை கபூல் செய்து கொண்டார்கள். இன்னம் ஷெய்கு சொன்னார்கள் திடமாக கௌதாகிறவர்கள் உமது கருமத்தை நிறப்பமாக்கி அல்லாஹ் உடைய ஒலிமாரில் வலுப்பமுற்றவரிலாகினார் என்றார்கள். இவர்களும் தங்கள் சேர்ந்த மர்தபாவில் எல்லாம் சேர்ந்தார்கள் ரலியல்லாஹு அன்ஹும் அரலு அன்ஹு.

**நாற்பத்தி நாலாம் ஹிகாயத்தாவது மிகுதி ஜனத்தை ஒரு பார்வையினால் அல்லாஹ் அளவில் சேர்த்த சேதியில் பேசுவதாயிருக்கும்.**

கௌதல் அ.்லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு நாள் அல்லாஹ் தஆலாவில் நின்றும் ஏவப்பட்டுது. 700 ஆண் பிள்ளை 500 பெண் பிள்ளை இவர்களை ஒரு பார்வையால்

அல்லாஹ் அளவில் சேர்த்திடும் படியாய.; அப்போது ஆண் பிள்ளை ஒரு புறம், பெண் பிள்ளை ஒரு புறமாய் சேர்த்து தங்களின் செந்தூரமான பார்வையால் பார்த்தார்கள். அதனால் அந்த மனுகளின் அகன்கள் என்ற செம்பு சுத்தியாகி சுத்த தங்கமாகி விட்டது அல்லாஹ் தஆலா அளவில் சேர்ந்திட்டார்கள்.

**நாற்பத்தைந்தாம் ஹிகாயத்தாவது கௌதவர்கள் நபி நாயகம் அவர்களை மின்பர் மேல் சந்தித்த சமாசாரத்தை பேசுவதாயிருக்கும்.**

ஜாமிவுல் உலும் என்கிற கிதாபில் சொல்லுகிறார்கள் ஒரு நாள் கௌதுல் அ.ஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மின்பர் மீது வ.ஃலுக்கிருந்தார்கள். பின்பு தீபரமாய் கடைசி படியளவில் இறங்கி ஒரு கை மேல் ஒரு கையை வைத்தவராய் தரிபட்டு நி;ன்றார்கள். அப்பால் ஒரு மணி நேரத்திற்குப் பின் மின்பரில் ஏறி தங்களுடைய தளத்தில் இருந்தார்கள். வ.ஃலு சொன்னார்கள.; பின்பு இவ்விதமாய் நடந்ததை குறித்து கூடினவரில் நின்றும் ஒருவர் கேட்டார் அதற்கு என் பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வரக்கண்டேன். மின்பரில் இருந்து அவர்களின் சமூகத்தில் அதபுக்காக கீழ்படிக்கு இறங்கினேன். அவர்கள் எழுந்து போகும் போது எனது தளத்தில் இருந்து வ.ஃலை சொல்லும்படி ஏவினார்கள் என்று உரைத்தார்கள்.

**நாற்பத்தாராம் ஹிகாயத்தாவது கௌதவர்கள் துஆ செய்து ஒரு பெண் பிள்ளைக்கு லவ்குல் ம.ஃபூலில் இல்லாத சில பிள்ளை கிடைத்த சேதியை பேசுவதாம்.**

முன்தஹபி ஜவாஹிரில் கலாயித் என்கிற கிதாபில் சொல்லுகிறார்கள் ஒரு நாள் ஹழ்ரத் கௌதுல் அ.ஃலம் ரலியல்லாஹு அனஹு அவர்கள் அளவில் ஒரு பெண் பிள்ளை வந்து அல்லாஹ் தஆலா இடத்தில் தங்கள் பிள்ளை தர துஆ செய்ய வேண்டும் என தேடினாள். அப்போது முராகபா செய்து லவ்குல்; ம.ஃபூலில் பார்க்க பிள்ளை அவளுக்கு எழுதப்படவில்லை. அப்போது இரண்டு பிள்ளை கொடுக்க வேண்டும் என அல்லாஹ் தஆலாவிடம் கேட்டார்கள். அப்போது சத்தம் உண்டாச்சிது. லவ்கில் ஒரு பிள்ளையே இல்லை நீர் அவளுக்கு இரண்டு பிள்ளை தேடுரீரே என்று. அப்போது 3 பிள்ளை கொடுக்க வேண்டும் என்றார்கள். முன் போல் சத்தம் வந்தது பின்பு 4 பிள்ளை கொடு என்றார்கள். அதற்கு முன்படியே தான் சத்தம் வந்தது. பின்பு 5 பிள்ளை கேட்டார்கள். முன்போல் தான் சத்தம் உண்டாச்சிது. பிறகு 6 பிள்ளை கேட்டார்கள். முன் போல் சத்தம் வந்த பின் 7 பிள்ளை கொடுக்க வேண்டும் என்றார்கள். அந்த ஷைக்கினையினால் அவளுக்கு நன்மாராயம் கிடைத்தது 7 பிள்ளை அல்லாஹ் தஆலா வகுப்பான் என்பதாய். அப்போது கௌது நாயகம் அவர்கள் கொஞ்சம் மண் அள்ளி கொடுத்தார்கள். அந்த பெண் பிள்ளை அந்நேரம் ஹழ்ரத் கௌது நாயகம் அவர்களில் உண்மை நின்னயம் நிரம்பியவளாக இருந்தாள். அந்த மண்ணை வெள்ளி கூட்டில் வைத்து துஆ போல் கழுத்தில் கட்டிக் கொண்டாள். அல்லாஹ் தஆலா 7 ஆண் குழந்தை வகுப்பது கொண்டவளை சங்கையாக்கினான். இனி சில காலத்திற்குப் பின் கௌதுல் அ.ஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹக்கில் அவள் நின்னயம் பசாதாகிவிட்டது. சொன்னாள் கௌது தந்தார்களே அந்த மண்ணானது அதில் என்ன பாயிதா? என்று இப்படி மொழிந்தது மட்டும் உண்டும்

அதனால் அவள் பிள்ளைகள் மவ்த்தாகி விட்டது. கௌது நாயகம் அவர்கள் அளவில் அழுதவளாய் வந்து சாளயப்பட்டு கௌதுல் அஃலமே என்னை இரட்சியுங்கள் என்று சொன்னாள். கௌது நாயகம் சொன்னார்கள் அந்த காலம் அதின் காலமாயிருந்துது பாயிதா இல்லை என்றார்கள். இன்னும் ஒரு ரிவாயத்தில் வருவது அவளுக்கு கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் உன் வீட்டளவிலே மீண்டு போ . ஏது நிய்யத்தை கொண்டு வந்தாயே அது போல் உன் பிள்ளைகளை கண்டு கொள்வாய் என்று சொன்னார்கள.; வீட்டிற்குப் போனாள் பிள்ளைகள் எல்லாம் ஹயாத்தாகி இருக்கிறது கண்டு அல்லாஹ் தஆலாவை சுக்ர் செய்து கொண்;டாள்.

**நாற்பத்தேழாம் ஹிகாயத்தாவது ஜின்கள் கௌது நாயகம் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் சமாசாரம்.**

செய்யிது சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய காலத்தில் ஜின் ஷெய்தான்கள் ஹல்கின் பேரில் சாட்டப்பட்டு தொந்தரவு செய்வதாயிருந்தது. ஒரு நாள் யோசித்தார்கள் ஜின் ஷெய்த்தான்கள் எல்லாம் நம் வழிபாட்டில் இருக்க ஹல்குகளை தொந்தரவு செய்து கொண்டிருக்குதே நமக்குப் பின் ஹல்குடைய ஹால் எப்படியாகும்? என்று. அப்போது ஒரு தோத்தரவில்லா சத்தம் உண்டாச்சுது. திடனாக நான் தனிப்பட்டதை பிந்தின காலம் என் ஹபீபு முஹம்மதை கொண்டு முடிப்பேன். அவர் பிச்சளத்தில் நின்றும் செய்யிது அப்துல் காதிர் என்ற நாமம் தரித்த ஒருவர் வருவார். ஜின் ஷெய்தான்களை எல்லாம் அவர் தேர்ப்பு கட்டுப்பாடிலாகும் என்று. இது கேட்டு நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சந்தோசமாகி அல்லாஹ்வை சுக்ர் செய்தார்கள். பின்பு அதுகளை விலங்கிட்டு கடலில் எறிய ஏவி விட்டு சொன்னார்கள்: கடைசி காலத்தில் இவர்களின் தளைகள் விடுதலாகும். எல்லாரும் அந்த கௌதுடைய ஹுக்மின் கீழ்வார் பயப்படுங்கள் அவராகிறது மனு ஜின் மலக்குகள் அனைவருக்கும் ஷெய்காக இருக்கும் என்று. இப்போது அதுகள் கௌது நாயகம் அவர்களுடைய கலிபாக்கள் முரீதுகள் உடைய வழிபாட்டிலாயிருக்கும்.

**நாற்பத்தெட்டாம் ஹிகாயத்தாவது கௌதவர்கள் தங்களின் ஓர் முரீதை முன்கர் நகீர் மலக்குடைய அதாபை விட்டகற்றிய செய்தியாயிருக்கும்.**

அந்த முரீதும் கௌதை தவிர யாதொன்றும் அறியாதவராய் இருந்தார். கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதுகளில் நின்றும் ஓர் மனிதன் ஹழ்ரத் கௌது நாயகம் அவர்கள் அளவில் பிசகர நின்னயமுள்ளவராயும் முஹப்பத்தில் பனாவாகி பகாவெற்றவராயிம் ஆனார். அப்படி இருக்கையில் அவர் மரணித்து அடக்கம் செய்தபோது கேள்விக்காக மலக்குகள் இருவரும் வந்து உன் நாயன் யார்? உனது நபி யார்? உன் மார்க்கம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு இவர் என் குரு செய்யிது அப்துல் காதிரு. என்னில் யாதொன்றும் யான் அறியேன் என்று சொன்னார். அப்போது இருவரும் தஹய்யருலாக்கி நாயனே! நீ மிகவும் அறிவாளன். உனது அடிமை இன்னான் இன்னது சொல்லுரார் என்பதை சொன்னார்கள். பின்பு அல்லாஹ் தஆலா அதாபு செய்யும்படியாக ஏவினான். அவர் இருவரும் அதாபு செய்ய நாடும் போது ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்

வெளிப்பட்டு இவன் அல்லாஹ் ரஸூலை அறியாதவனாக இருக்கிலும் யஃனி தீனுடைய காரியத்தை அறியாமல் இருக்கில் என்னை அறிந்து என்னை துடர்ந்தான். ஆதலால் நீங்கள் ஏதை தொட்டும் அவனிடம் கேட்பதனைத்ததையும் யான் அறிவேன். எனக்காக அவனை அதாபு செய்யாதீர்கள் என்று கௌது நாயகம் அவர்கள் அருளினார்கள். அப்போது இருவரும் கௌதுல் அஃலம் சுல்தான் முஹியத்தீன் செய்யிது அப்துல் காதிரு இன்ன இன்ன விதம் சொல்கிறாரேனவே முறையிட்டார்கள். அப்போதும் அதாபு செய்யும்படியாய் ஏவினான். அந்தபடி அதாபு செய்ய ஆரம்பிக்கும் போது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இருவர் கையில் இருக்கும் தடியை பறித்து கொண்டு சொன்னார்கள். அவன் அளவில் நீர் இருவரும் முடுகாதயும். இஸ்கெனும் பெறிப்பு என் அகத்தில் இருப்பதின் மிகுதம் அதற்கு ஒரு வஸ்து கொண்டும் நிகரிடப்படாது. இல்லாதிருக்கில் அதனால் நரகம் சுவர்க்கம் இரண்டையும் கரித்துப் போடுவேன். அய் சுவர்க்கத்தில் ராகத்தும் உண்டாகாது, நரகத்தில் அதாபும் இல்லை என்று. இப்படி கௌது நாயகம் அவர்கள் சொன்ன போது அல்லாஹ் பிரத்தால் நின்றும் சத்தம் வந்தது: அவனை தொட்டும் பொறுத்து கொண்டு என் அதாபு செய்ய வேண்டாம் என்பதாய் வந்தது. ஆகையால் இதுவெல்லாம் ஹக்கு தஆலா கௌது நாயகம் அவர்களை சங்கை செய்வதாயிருக்கும்.

**நாற்பத்தொன்பதாம் ஹிகாயத்தாவது கௌதுடைய முரீதுகளின் மர்தபாவை பேசுவதாம்.**

கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இடத்தில் அவர்கள் முரீதுகளின் தகுதியை குறித்து மனிதர்கள் கேட்டார்கள். அப்போது நாயகம் அவர்கள் சொன்னார்கள:; ஒரு முட்டை ஆயிரத்துக்கு சமானம் ஒரு குஞ்சு அதை விலை மதிக்க கூடியது என்றார்கள். முட்டை என்றதன் கருத்து தங்களின் மேலுமுற்ற தரீக்கில் புகுந்து துவர்க்கமானவன், குஞ்சு என்பதின் கருத்து சுபிய்யா பாதையில் நடந்து அல்லாஹ் தஆலாவை திக்ர் செய்வது கொண்டு கல்பு ஹயாத் பெற்றனே அவனாயிருக்கும். கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் துவக்கமாயுள்ளவர்கள் முட்டை கொண்டும் நடுக்கிறவர்களை குஞ்சைக்கொண்டும் ஒப்பிட்டார்கள். அதின் பயனாவது என் முரீதுகளில் துவக்கமாகவுள்ள ஒருவன் மற்றும் மஸாயிஹுக்குள்ள 1000 முரீதுக்கு நிகரானவன் நாடுகிறவன் அவனுக்கிவ்வளவு விலை மதிக்க கூடாது. துவக்கமானவரும் நடுக்குள்ளவரும் இவர்களுடைய பதவிப்படியா இருக்கில் நிறப்பமுள்ளவரின் மர்தபா ஹக்லுக்கு பிரமால்தான் ஷெய்கு அபுல் பராஜ் இப்னு ஷெய்கு அலியை தொட்டும் பேசிவருகிறார்கள். ஒரு ஷெய்குக்குள்ள ஒரு முரீதும் கௌது நாயகம் அவர்களுடைய முரீதைக் காண மிக சீதேவியானவர் இல்லை. ஷெய்கு பகா இப்னு பதவி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள:; நமது நாயகம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடைய அஸ்ஹாபிகள் அனைவரையும் சீதேவியோர்களின் சங்கத்தில் முகம் ஒளிவு உடையவராய் கண்டேன் என்றார்கள். ஒருவர் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அவர் முரீதில் நல்லோர் தீங்கரை குறித்து கேட்டார். அதற்கு நன்றி செய்வதன் நாயனுக்கு தீனுக்கு செய்தவன் நான் அவனுக்கு என்றார்கள். ஷெய்கு அதிய்யு இப்னு முஸாபர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். மஸாயிஹுமார்களுடைய முரீதுகளுக்கு ஹிர்கா எனும் உடுப்பை அணிய நான் திரானி

பெறுகிறேன். கௌதுடைய முரீதுக்கு ஹிர்கா எனும் உடையை அணிய யான் தரானி பெறுகிறேன் இல்லை ஏன் அவர்களாகிறது கரை இல்லா சமுத்திரமும் யான் சிறிய வாய்க்காளுமானதால், செய்யிது ஜலால் புஹாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கிதாபு துஹ்பதுஸ் ஸீரில் சொல்லுகிறார்கள் யாரையும் ஜின் தொட்டுதானால் யா ஹழ்ரத் அஷ்ஷெய்கு குத்பில் ஆலம் முஹ்யில் ஹக்கி வத்தீன் அஷ்செய்யிது அப்துல் காதிருல் கைலானி என்றோதி காதில் ஓதினால் நீக்கப்படும். இனி பகைவர் பட்டாளம் இஸ்லாமுடையோர்களில் மிகைத்து அடைந்தேரிடில் அல்லது பதை விட்டு முறிப்பவரால் ஒருவர் பயணத்தில் பூமியில் நின்றும் கருமணல் எடுத்து கௌது நாயகம் அவர்களுடைய திருநாமத்தை சொல்லி அம்மண்ணில் ஓதி அதை அவரே திரியின் பிரத்தால் எறிந்திடில் கௌது நாயகம் அவர்கள் சொன்னது போல் அந்த மண்ணை சத்துராதிகள் கண்ணில் போடப்பட்டு அதனால் அல்லாஹ் தஆலா அவர்கள் பார்வையை குருடாக்கி அவர்களை அடக்கிப் போடுவான். இன்னும் சொல்லுகிறார்கள் ஒருவன் ஒருவர் மத்தில் தட்டளிந்து திகைக்கும் நேரம் கௌது நாயகம் அவர்கள் அளவில் சிபாரிசு தேடினால் அல்லாஹ் தஆலா அவன் வருத்தத்திற்கு பகரமாக இலேசைக் கொடுப்பான். அவனது மாட்டாங்கி பணத்தை விட்ட கண்டு சந்தோஷம் மகிழ்ச்சி அவனைத் தொடும். இனி ஒருவன் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹிர்காவை அணிந்தால் ஈடேற்றம் பதவிகளை பெறுவான். திடனாக கௌது நாயகத்தை குறித்து முரீதுகளுக்கும் முஹிப்புகளுக்கும் துஆ கேட்டிருக்கிறார்கள். அவர்களாகிறது ஆலத்திற்கு குத்பாக இருக்கும.; அவர்கள் துஆவும் சக்கின்றியே ரஹ்மானிடம் கையேர்க்கப்பட்டதாக இருக்கின்றது. ஒரு நாள் ஒரு மனிதர் கௌது நாயகம் அவர்களை பார்த்து சொன்னார் தங்கள் சமூகத்தால் ஓர் தருமமும் இன்னையில் யான் காணவில்லை என்று. அப்போது நாயகம் ஏவல் செய்தார்கள் பாசிகீன்களில் நின்றும் 140 பேரை சீக்கிரம் கொண்டு வரும் படியாய் அந்த படி கூட்டி வந்து விட்டார்கள். வலது பக்கம் 70 பேரும் இடது பக்கம் 70 பேரையும் விட்டு இருபுறமும் ஒரு பார்வை நோக்கினார்கள். அந்த பார்வையில் அல்லாஹ் தஆலா அளவில் மூடிமுழிக்கும் நேரம் அவர்களுடைய பார்வை ஏற்றதாலும் பரகத் பெற்றதாலும் சேர்ந்திட்டார்கள். அப்பால் முன் கேட்ட மனிதரை நோக்கி இன்னைக்கு எனது தருமத்தை கண்டீரா? என்று சொன்னார்கள் ரலியல்லாஹு அன்ஹு.

**ஐம்பதாம் ஹிகாயத்தாவது அல்லாஹ்விடத்தில் கௌது நாயகம் அவர்களுக்கு அவர் குபாடம் செய்திடாதே வாக்கு 70 தரம் எடுத்த செய்தியை பேசுவதாயிருக்கும்.**

பஹ்ஜதுல் அஸ்ரார் என்ற கிதாபில் பேசப்பட்டிருக்கிறது ஷெய்கு நஜீபுத்தீன் அப்துல் காதிருஸ் ஸுஹ்ரவர்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் நான் ஷெய்கு ஹம்மாதிடத்தில் இருந்தேன். அவ்விடத்தில் கௌது நாயகம் அவ்வேளை இருந்தார்கள். அவர்கள் வலுப்பமான பழக்கம் பேசினார்கள். அப்போது ஷெய்கு ஹம்மாது சொன்னார் அப்துல் காதிரே நீர் புதுமையான பழக்கம் மொழியிரீh.; அல்லாஹ் தஆலா உம்மைக் கொண்டு மக்ரு செய்திடுவான் என்பதை பயப்படுகிறீரில்லையே என்பதாக சொன்னார்கள். அப்போது கௌது நாயகம் அவர்கள் தங்களுடைய சிறப்பு தங்கிய கையை ஷெய்கு ஹம்மாத் ரலியல்லாஹு

அன்ஹு அவர்களுடைய நெஞ்சில் வைத்து உம்முடைய மன கண்ணிணால் எனது கையில் எழுதி இருக்கிறதை பாருமெனவே காட்டினார்கள். உடனே ஷெய்கு ஹம்மாதாகிறவர்கள் ஒரு மறதி மறந்தார்கள். அப்பால் கௌது நாயகம் அவர்கள் அவர் நெஞ்சை விட்டு கையை உயர்த்தினார்கள். ஷெய்கு ஹம்மாத் சொன்னார்கள் கௌதாகிறது அவர்களை குபாடம் செய்யாதிருக்க அல்லாஹ் தஆலாவில் நின்றும் 70 வார்த்தைப்பாடு எடுத்ததாய் கண்டேன் என்று சொல்லி, பின்னும் சொன்னார்கள் அதன் பின் குற்றமில்லை அதன் பி;ன் குற்றமில்லை என்றிருவிடுத்தம் சொல்லி இதோ அல்லாஹ் உடைய பத்ல் அதை அவன் நாடியவருக்கு கொடுப்பான் அவனோ பத்ல் உடையவன் என்று சொன்னார்கள்.

**ஐம்பத்தொராம் ஹிகாயத்தாவது கௌது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வலுப்பமான பேச்சு பேசுனதில் பேசுவதாம்.**

பஹ்ஜதுல் அஸ்ரார் எனும் கிதாபில் பேசப்பட்டிருக்கிறது ஷெய்கு ஸதகதுல் பக்தாதி ஆனவர்கள் ஷர்யில் பொருத்த கேடானவன் ஓர் பேச்சை பேசினால் இராஜாவாக தெரியப்படுத்தினதில் முதவல்லி உடைய வீட்டிற்கு வருத்தி ஆக்கினை செய்ய உத்தரவு கொடுத்தார். அந்தபடி ஹாலிராகி அவர்கள் அவருடைய தலையை திறந்தார்கள். அவருடைய ஹாதிம் வாஷெய்காகு எங்களுடைய நாயகமே என்று சத்தமிட்டார். அப்போதிவரை அடிக்க நாடினவர் உடைய கை சோர்ந்திட்டது. அல்லாஹ் சுப்ஹான வதஆலா முதவல்லி உடைய கல்பில் பயங்கரத்தை விட்டான். அதை மந்திரிக்க தெரியப்படுத்தினார். அவர் கல்பிலும் பயம் தொட்டது. அதை இராஜாவுக்கு அறியப்படுத்தினார். அவர் கல்பிலும் அல்லாஹ் தஆலா பயங்கரத்தை விட்டான். விட்டதும் படி உத்திரவு செய்தார். ஷெய்கு ஸதகதுல் பக்தாதி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஜாகாவில் வந்து புகுந்தார். ஷெய்குமார்களும் மனிதர்களும் கௌது நாயகம் அவர்கள் இல்மு பேச வருவதை வழிபார்த்திருப்பதாய் கண்டு ஷெய்குமார்களுக்கிடையில் இருந்தார்கள். கௌது நாயகம் அவர்கள் வந்து குர்சியின் பேரில் ஏறினார்கள். அறிவு பேசவில்லை ஆயத்து ஓதும் காரியை ஓதும் படி ஏவவும் இல்லை. அப்படி இருக்க மனிதருக்கு பாரமான ஒரு மனதாசை தொட்டு வலுப்பமான ஒரு கருமம் அவர்களுக்கு புகுந்தது. அப்போது ஷெய்கு ஸதகதுல் பக்தாதி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தன்னுள் எண்ணுகிறார்கள் கௌது பேசவுமில்லை காரி ஓதவுமில்லை பின்னே எதுக்கு இந்த மகிழ்ச்சி என்று எண்ணினார்கள். அப்போது அவர்கள் திசையளவில் கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நோக்கி பார்த்து சொன்னார்கள் ஓய் இன்னாரே நமக்குள்ள ஓர் முரீது பைத்துல் முகத்திஸில் நி;ன்றும் இவ்விடத்திற்கு ஒரு எட்டு வைத்து சேர்ந்தாh.; என் கையில் தவ்பா செய்தார். ஹாலிரூன்கள் அவருடைய விருந்தில் இருக்கிறார்கள் என்று. அப்போது ஷெய்கு ஸதகதுல் பக்தாதி ஆகிறவர்கள் மனதில் எண்ணுகிறார்கள் பைத்துல் முகத்திஸில் இருந்து பக்தாத் அளவில் ஒரு எட்டு வைத்து சேர்ந்தவர் என்னத்தை விட்டும் தவ்பா செய்வார். ஷெய்களவில் எய்து ஹாஜத்து என்று எண்ணினார்கள். அப்போது கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவரை நோக்கி சொல்லுகிறார்கள் ஓய் அவர் ஆகாசத்தில் எட்டு வைத்ததை விட்டும் மீண்டார். அல்லாஹ் அளவில் முஹப்பத் வைக்க ஏகமான பாதையை இவருக்கு

ஹாஜத்து கொண்டார் என்றார்கள.; பின்பு சொன்னார்கள் நானாயிருக்கிறவன் என் வாளானது உறை உருவப்பட்டதானவன.; எனது வில்லு அம்பு வைக்கப்பட்டது. என் அம்பு நாண் வைக்கப்பட்டது. நான் எரியும் அம்பு. நேரிட்டுவது எனது வல்லயம் நட்டப்பட்டது என் குதிரை ஜீன் வைக்கப்பட்டது நானாகிறவன் அல்லாஹ் உடைய எரிக்கப்பட்ட நெருப்பு. நான் ஹால்களை உறியிரவன். நான் கரையில்லா சமுத்திரம் நான் வக்துகளுக்கு கோல் காட்டி. என்னல்லாதவரில் நான் பேசுகிறவன். நான் பேணி காக்கப்பட்டவன். நான் நோட்டம் இடப்பட்டவன், நான் பேர் கொடுக்கப்பட்டவன். ஓய் நோன்பாளியே! ஓய் நின்று வணங்குவர்களே! ஓய் மலைகளையுடையோர்களே! உங்கள் மலைகளை இடிக்கப்பட்டது. ஓய் ஸவ்மியா உடையவரே! உங்கள் ஸவ்மியத்தை இடிக்கப்பட்டது. அல்லாஹ் அளவில் நின்றும் உள்ள கருமத்தளவில் முன்னோக்கிக் கொள். நான் அல்லாஹ்வில் நின்றும் உள்ள கருமம். தரீக்குகளில் சேருதல் இல்லாதவர்களே எடுப்புகளே ஆம்பிள்ளைகளே அப்தால்களே அத்பால்களே பிடித்துக் கொள்ளுங்கள். கரையில்லா சமுத்திரத்தில் நின்றும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிப்போட்டு ஹக்கை நோக்கி சொல்லுகிறார்கள் அஜீஸ் எனும் வல்லவனே நீயே வானத்தில் ஒருவனானவன் நீயே பெரியவன். முறிவை பொருத்துபவன் பெருமையாளன் நானே தூசனிக்கப்பட்டவன் வறுமையாளன். தழுமையுடயான் வணக்கத்திற்கு பாத்திபமானவன் நீயே அல்லாதில்லை என்று சொன்னார்கள். இன்னம் சொல்கிறார்கள்: இரவு பகலுக்கு இடையில் எனக்கு எழுப்புவது விட்டும் சொல்லப்பட்டிருக்கிறது என் தனக்கு யானுமை தெரிந்து கொண்டேன் ஓய் அப்துல் காதிரே! நீர் பேசும் உம்மில் நின்றும் கேட்கப்படும் அப்துல் காதிரே! உமது மீது என் ஹக்கின் ஆணை. ஹலாக்கை விட்டும் உம்மை அச்சம் தீர்த்து போட்டேன.; என் ஹக்கின் ஆணை நீர் தின்னும் குடியும் என்று ஹக்கு தஆலா அருள் செய்தான்.

மீளவும் பஹ்ஜத்தில் வருகிறது கௌது நாயகம் அவர்களின் மஜ்லிஸில் கூடிய ஜனங்களின் சிரசுகளுக்கு மேல் உயர ஆகாயத்தில் நடக்கிறவர்களாக இருந்தார்கள். இன்னும் சொல்லுறவர்களாக இருந்தார்கள் சூரியன் என் உதயமாகிரத்திலே என் மீது ஸலாம் சொல்ல மட்டும். வருடமானது என்னளவில் வந்தேன் மீது ஸலாம் உரைத்து அதில் நடக்கும் செய்தியை சொல்லும.; மாதம் என்றும் வந்து என் மேல் ஸலாம் ஓதி அதில் நடக்கும் சமாசாரத்தை அறிவிக்கும.; கிழமை வாரங்கள் என்னளவில் வந்து எனக்கு ஸலாம் மொழிந்து அதில் நடக்கும் சங்கதிகளை அறிவிக்கும் நாள் வந்து ஸலாம் உரைத்து அதில் நடக்கும் அலுவல்களை சொல்லிவிடும். என் ரப்பின் சிறப்பின் ஆனை திட்டமாக சீதேவிகள் மூதேவிகள் குறித்து என்னிடம் எடுத்து காட்டப்படும் என்னுடைய கண் லவ்குல் மஃபூலில் பார்த்து கொண்டிருந்து அல்லாஹ் உடைய இல்மெனும் கடலில் யான் மூழ்கி இருக்கிறவன். இன்னும் அவனை முஷாஹதா செய்வதிலும் நானாகிறவன் உங்கள் மீது அல்லாஹ் உடைய ஹுஜ்ஜத்தாக இருக்கும் பூவுலகில் நான் ரஸூல்லாஹ்வுக்கு பகரமாயும் அவர்களின் அனந்தரகாரனாயுமிருக்கும். இன்னம் குரசி மீதிருந்து சொல்லுரவர்களாக இருந்தார்கள். தங்கள் மத்ரஸாவில் இருக்கும் போது ஒவ்வோர் வலியங்களும் ஒவ்வோர் நபி கதமிலிருந்தார். நான் என் பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கதமில் இருக்கிறேன். அவர்கள் பாதத்தை ஒருநாளும் விட்டு உயர்த்தினதில்லை, என் காலை அவ்விடம் வைத்தே

அல்லாது. ஆனால் நபி பட்டனத்தின் கதம்களில் நின்றும் ஒரு கதமாக இருக்கிறதொழிய திட்டமாக அதாவது நபி அல்லாதவர் பெற்றுக் கொள்ள பாதையில்லை. இன்னம் சொல்கிறவர்களாக இருந்தார்கள் மனிதர்கள் அவர்களுக்கும் ஷெய்குண்டாம் ஜின் அவர்களுக்கும் ஷெய்குகள் உண்டாம் மலக்குகள் அவர்களுக்கும் செய்குண்டாம். நானோ எல்லார்க்கும் ஷெய்காக இருக்கும் என்று. இன்னம் தங்களுடைய மௌத்து நோயில் தங்களுடைய பிள்ளைகளுக்கு சொன்னார்கள் எனக்கும் உங்களுக்கும் இடையில் வானம் பூமிக்கிடையில் உள்ள தூரம். ஆனதால் என்னை ஒருவரைக் கொண்டும் ஒப்பிடாதீர்கள். என் மீது ஒருவரையும் கொண்டு கியாசிடாதயுங்கள். தங்கள் பிள்ளை அப்துல் ஜப்பாருக்கு சொன்னார்கள் நீ நித்திரையாளன் முழிப்புடயானாக என்னில் சாகுங்கள் முழித்திடுவீர்கள் என்று சொன்னார்கள். இன்னம் சொன்னார்கள் நானாகிறவன் ஹல்குடைய கருமங்களுக்கு அப்பாலே நான் உங்களை புத்திகளுக்கு புறம்பாலே ஹக்கு உடைய ஆண் பிள்ளைகள் அடங்களும் கத்ரெனும் கர்ப்பனையின் மகாமளவில் சேர்ந்தாரயாகில் வாய்மூடி நாவை தடுத்து கொள்வார். என்னை தவிர நான் அது மகாமளவில் சேர்ந்தேன். எனக்கு வாயல் திறந்தான். யான் புகுந்தேன் ஹக்குடைய கட்டைகளை ஹக்கை கொண்டே ஹக்குகாகவே பின்னாகி தர்கித்தேன். ஆம் பிள்ளை என்பவன் கத்ருக்கு பிணங்குவானே அவன் தான் நேரிட்டிருப்பவனில்லை. இன்னம் சொன்னார்கள் என்னை கண்டவனுக்கே சோபனம். இன்னம் கண்டவனை கண்டவனுக்கே சோபனம் இன்னம் கண்டவனை கண்டவனை கண்டவனுக்கே சோபனம் இன்னம் கண்டவனை கண்டவனை கண்டவனை கண்டவனுக்கே சோபனம.; என்னை காணாதவன் என்னை காணவில்லை என்று கை சேதத்திலாவன். இன்னம் சொல்லுகிறவர்களாக இருந்தார்கள.; எடுவான் திசைபடுவான் திகையான போலோகத்துட யோரே ஆனுலகுடயோரே அல்லாஹ் தஆலா திருவுளமானான் நீங்கள் இரயாததைதை படைப்பான் என்று. ஆகையால் நான் நீங்கள் இரயாதவயிலுல்லவனாயிருக்கும். பூலோகத்தாரே வந்திடுங்கள் எனதிடம் கல்வி படித்திடுங்கள். இராக் இராஜியத்தாரே என்றும் ஹால்களாகுருது ஒரு வீட்டில் கொழுகி வைத்திருக்கும் பிடவைகளுக்கு சமானம். அதில் எதை நாடுவேனோ அதை அணிந்திடுவேன.; சலாமத்தை பற்றிப்பிடித்திடுங்கள். அல்லது அதுகண்டு உங்களுக்கு எதிர்னிக்க ஏலாபட்டாளத்தை கொண்டு வந்திடுவேன் குலாமை என்னில் நின்றும் ஓர் கலிமாவை கேட்டிடுவதற்கு ஆயருக்கும். வருடம் யாத்திரையாக்கு குலாமே விலாயத்து இவ்விடமிருந்து தரஜாத்து இவ்விடமிருந்து என் ஜாகாவில் வெகுமதிகளை பங்கிடப்படும். அல்லாஹ் தஆலா படைத்த எந்த ஓர் நபியும் எந்த ஓர் வலியும் என் மஜ்லிஸில் ஹாழிராகியே அல்லாதில்லை. அவரில் ஹயாத்தானவர் உடலோடும் மவ்த்தானோர் எல்லாரும் ரூஹோடும் வருவார்கள். இன்னம் குலாமே என்னை குறித்து முன்கர்; நகீர் இடத்தில் உன் கப்ரளவில் அவ்விருவர்களும் வரும் வேளை கேளு. என்னை தொட்டும் விஷயங்கள் சொல்வார்கள:; கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாரதூரமான பழக்கம் பேசிடில் அடுத்தான்மையாக சொல்வர்களாக இருந்தார்கள். உங்கள் பேரில் அல்லாஹ்வை கொண்டு கேட்கிறேன் நீர் உண்மை சொன்னீர்கள் என்று சொல்லுங்கள். நான் மொழிவதெல்லாம் திட்டம் கொண்டு தான் அதில் சந்தாபம் கிடையாது என்னை மொழியேன் ஏவப்பட்டேன் எனக்கு தரப்படும் பங்கிடுவேன் செய் என்று ஏவப்பட்டும் செய்வேன் என்னை

ஏவினவன் மீது அறுதிமானம் அகிலத்து பேரில் விதி திறய கொடுப்பது என்னை பொய்யாக்குவது உங்கள் மார்க்கத்தை உடனே சங்காரித்திடும். நஞ்சு உங்கள் துன்யா ஆகிரா என இருப்பதின் இன்பம் ஒளிந்திட சபபாயிருக்கும். நான் வாழ் வீசுரவன் வதை செய்திடுவன் அல்லாஹ் தஆலா அவன் தன்னை உங்களுக்கு அச்சம் காட்டிருக்குறான். மார்க்கம் எனும் கடிவாளம் என் நாவில் இல்லாதிடில் நீங்கள் தின்பது தங்கடம் செய்திருப்பது எல்லாம் சொல்லிவிடுவேன். என் முன் நீங்கள் பளுங்கி வீதர்களைப் போல் தான் உங்கள் உள்ளதக்கம் வெளிகண்டது எல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னம் ஷரீஅத் கடிவாளம் என் நாவில் போட்டாதிடில் யூசுப் நபி அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களுடைய மரக்கால் உங்கள் அளவில் எல்லாம் மொழிந்திடும். ஆகிலும் அறிவானது அறிவாளன் முந்தானியை பிடித்து காத்து கொள்ளும் அவரின் அடக்கப்பொருளை வெளிக்கிடாதிருக்க வேண்டி என்பதாய் மொழிந்தார்கள்.

**ஐம்பத்திரண்டாம் ஹிகாயத்தாவது கௌதவர்கள் மனிதருக்கு துவக்கமாக உபதேசித்ததில் கடந்த காரணம்.**

பஹ்யத்துல் அஸ்ரார் என்ற கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் 521-ம் வருடம் ஷவ்வால் மாதம் 16-ம் தேதி செவ்வாய்க்கிழமை லுஹருக்கு முன் ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கண்டேன். எனதருமை மகனே ஏன் நீர் வஃலு சொல்லவில்லை என்று கேட்டார்கள். நான் சொன்னேன் தகப்பரே நான் அஜமி மனிதன் பக்தாதோர் நாகரீகர்கள் சங்கத்தில் யான் எப்படி பேசுவேன் என்று. அப்போது வாயை திற வெண்றார்கள் திறந்தேன் 7 விடுத்தம் வாயில் உமிழ்;ந்தார்கள.; பின் சொன்னார்கள் மனிதர்களுக்கு வஃலு சொல்லும் அழகான உபதேசித்தல் கொண்டும் பூராயமரிவு கொண்டும் நாயகனின் பாதையில் அடைந்திடும் என்றார்கள். பிறகு நான் லுஹரு தொழுத பின் மிக ஜனம் என்னிடம் கூடினார்கள.; எனக்கு நாவு தடுக்காச்சுது. அப்போது அலியின் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் என் இருப்பிடத்தில் எனக்கு நேராக நிற்க கண்டேன். அருமை மகனே ஏன் பேசாதிருக்கிறீர் என்றார்கள். பாவா நாவு பூட்டிட்டதாக இருக்கிறது என்றேன். வாயை திறந்து கொள் என்றார்கள். திறக்கவும் 6 தரம் உமிழ்ந்தார்கள் அப்போது நான் கேட்டேன் ஏன் ஏழாக நிறப்பினீர்கள் இல்லை என்றேன். ரஸுலுல்லாஹ் உடைய அதபுக்காகவே என்றி என்று சொல்லி என்னை விட்டு மறைந்திட்டார்கள். அப்போது சொல்ல தொடுத்தேன் யோசனை என்னம் குளிவோடுரவன் கல்பிலும் சமுத்திரத்தில் குளியோடி மஃரிபாவேனும் முத்துக்கடல் எடுத்து நெஞ்செனும் கரை அளவில் வெளிப்படுத்தி வைத்து நாவேனும் துர்ஜுமான் விலை கூறிட வந்தனத்தின் சந்தன்கள் எல்லாம் விலைகளின் அபூர்தத்தை கொடுத்து அதுகளை உயர்த்தப்பட அல்லாஹ் தஆலா உத்தாரம் பன்னிய வீடுகள் என்ற பள்ளிவாயல்களில் வாங்கப்படும் என்றார்கள். இந்த வார்த்தைகள் புட்டுவம் மீதிருந்து மானிடற்கு வஃலு சொன்ன முதற் பேச்சு என்று உலமாக்கள் சொன்னார்கள் ரலியல்லாஹு அன்ஹு வஅன்ஹும்.

**ஐம்பத்தி மூன்றாம் ஹிகாயத்தாவது ஷெய்கு ஹம்மாது தய்யாஸ் ஹழ்ரத் கௌது நாயகத்தை புகழ்ச்சி செய்ததில் பேசுவதாம்.**

ஷெய்கு ஹம்மாத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இடத்தில் ஹழ்ரத் கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாலிப வயதாக இருக்கும் காலையில் குறித்து பேசப்பட்டது.

ஹம்மாத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் அவர் தலை மேலே விலயாத்துக்குள்ள இரண்டு கொடியை கண்டேன். கீழ் பூமியில் நின்றும் மேலாம்பர மலகூத்தளவில் நட்டப்பட்டிருக்குது. மேலோக கோனத்தில் ஷாவிஷ் சத்தம் போடுறது. சித்தீகீன்களின் பட்டணங்களைக் கொண்டு கௌது நாயகம் அவர்கள் பராய காலத்தில் ஷெய்கு ஹம்மாத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தே ஒரு நாள் வந்தார்கள். அவர்கள் எழும்பி நின்று சந்தித்து தரிபாடான மலை உசும்பிடாநிலைக்கே சோபனம் என்று ஆசாரத்தோடு தன் புறம்; ஒருத்தாட்டி வைத்து கேட்கிறார்கள். ஹதீது என்றும் கலாம் என்றும் சொல்லப்படுகின்றது இரு பேச்சுக்கிடையில் இருக்கும். பற்கு வித்தியாசம் என்ன என்று. அதற்கு கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னது ஹதீதென்பது ஜவாபில் நின்றும் நீங்கள் வருத்தி தேடி கொண்டது. கலாம் என்பது எதிர் மொழி பேசலில் உங்களை வந்திடுத்தது. அன்பியாக்களின் அழைத்தலுக்கு கல்பு நடுங்கி நிற்பதாவது ஜின் இன்செனும் இரு வகையராகுடத்தின் அமல்களை விட ஏற்றமாக இருக்கும் என்று. அப்போது ஷெய்கு ஹம்மாத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் உமது காலத்தில் நீர் ஆரிபீன்களுக்கு நாயகமாக இருப்பீர் என்றார்கள் ரலியல்லாஹு அன்ஹுமா.

**ஐம்பத்தி நாலாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்கள் ஓர் கோழியை ஹயாத்தாக்கின சேதியில் பேசுவதாயிருக்கும்**

ஒரு பெண் பிள்ளை தன் பிள்ளையை கௌது நாயகம் அவர்கள் அளவில் கூட்டி வந்து சொன்னாள் இதோ என் மகன் நீங்கள் அவனை வளர்த்து வி;ட உங்கள் சமூகத்தில் ஒப்புவித்தேன் என்றாள். கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவரை ஹல்வத்தில் இருக்க செய்தார்கள். சில நாள் சென்ற பின் மகனை பார்த்து வருவோம் என வந்தாள். பார்க்கும் போது மகன் மெலிந்தவனாய் பலம் இல்லாதவனாகவும் அவனிடம் தொலி கோதம்பின் ரொட்டி துண்டுகளும் இருக்க கண்டு கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அளவில் போனாள். அவர்கள் கோழி இறைச்சி திண்கிறவர்களாய் கண்டாள். அப்போது சொன்னாள் நாயகமே உங்கள் சமூகம் கோழி கறி தின்னுவதாக இருக்கிறது. என் மகன் தொலி கோதம்பு தின்று மெலிந்து தயீபாக இருக்கிறான் என்று. அதற்கு கௌதுல் அ:லம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் யாதொன்றும் பேசாதிருந்து கோழியின் எலும்பை கொண்டே எலும்பிடு என்;றார்கள். உடனே அல்லாஹ் தஆலா கோழியை ஹயாத்தாக்கி விட்டான் அவளுக்கு கௌது நாயகம் அவர்கள் சொன்னார்கள் உன் பிள்ளையும் இப்படி போல் ஆகத்தான் நான் நாடுகிறேன் இந்த ருத்பா அளவில் சேர்ந்தானாயாகில் அவன் நாடின ஏது

உஜீபனத்தையும் போசிப்பான் யாதொரு குற்றம் இல்லை என்பதாய் அப்போது என் பிள்ளை முஹப்பத்தை விட்டு நான் பிறப்பட்டேன் கருமம் உங்கள் அளவில் தான் என்றாள்.

**ஐம்பத்தைந்தாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்கள் 40 குதிரை உயர்ந்ததாய் விலைக்கு வாங்கி இருந்து எல்லா நாளும் ஓவ்வோர் குதிரையை முஸாபிரான நோயாளி சுகம் பெற அருப்பதற்காய் சமூகத்தில் கேட்டவர்க்கு கொடுத்திட்ட செய்தியில் விபரிப்பதாயிருக்கும்.**

தூரமான தேசத்தால் இருந்து ஓர் மனிதன் கௌது நாயகம் அவர்களுடைய வன்னிப்புகளை கேள்விபட்டு தெரிசனத்தை ஆசித்து யாத்திரை எழுந்து பக்தாதை நாடி வந்தார். வரும் வாட்டையில் கௌது நாயகம் அவர்களுடைய குதிரை பந்தி வெளியாச்சுது. அப்போது பார்க்க தங்கள் வெள்ளி வடத்தினால் பார்ப்பது குதிரை கட்டி இருக்கிறது. பட்டு போர்வையும் பொத்தி இருக்கிறது. இப்படி இருக்க கண்டு தமது அகத்தில் ஊசாட்டம் வந்தது. வலியன்றவர் எப்படி துன்யாவை தேடுவாராக இருப்பார் நாம் கண்ட காட்சி சுல்தான்கள் இடத்திலும் காணக்கூடியதே இதோ துன்ஆவை பிரியம் வைத்ததர்க்கு அடையாளம் அள்ளவே என்று அவர் நின்னயம் கெட்டு தகியாவிலும் வந்திரங்கினாரித்தை வேர் ஒரு மனிதனுடைய தானத்தில் இரங்கினார். அவருக்கு ஓர் வியாதி பிடித்து கடும் நோய். வைத்தியர்கள் மாட்டாங்கியாகிடும் எனது அப்போது ஒரு வைத்தியனார் சொன்னார் இந்த நோயிற்கு மருந்து இன்ன இன்ன வன்னிப்புடைய 40 குதிரை ஈரல் திண்டு வருகில் சுவாத்தியம் உண்டாம். அதுவே அல்லாது வேரே மருந்தில்லை என்று சொன்னார். பின்பு கூடிய ஆடவரும் ஆலொசினையிட்டு அருளினார். இப்பனிப்பு பெற்ற குதிரை கௌதிடத்தில் அல்லாது வேரு ஓருவரிடமும் கிடையாது. ஆகயால் அவருடைய ஹழ்ரத்திற்கு நாம் ஏகி குதிரை கேட்போம். அவர்களோ கொடையாளர் நம்மை பேர் கேட்டில் ஆக்கார் என்றார்கள். அவர்கள் எல்லாவரும் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹழ்ரத்தளவில் போய் இன்ன இன்ன வன்னிப்பான குதிரை உண்டு தர வேண்டும் என கேட்டார்கள். அப்போது கொடுக்கும் படி ஏவினார்கள். அப்பால் இரண்டாம் நாளையிலும் மடக்கியும் வந்தார்கள் குதிரை கேட்டார்கள். கொடுக்கச் சொன்னார்கள். ஆக நாற்பத்தினாலும் நிறம்பும் அளவில் குதிரை கேட்டு கொடுக்கும்படி உத்தரவு செய்தார்கள். அல்லாஹ் தஆலாவும் அந்த நோயாளி உடைய நோயை சுகமாக்கினான். இனி அவர் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமூகம் துதி செய்ய வந்தார். அவருக்கு கௌது நாயகம் அவர்கள் சொன்ன சமாசாரம் யாபுலான் நீர் கண்ட குதிரைகள் அவைகள் உமக்கானதால் விலைக்கு எடுத்தேன். ஏன் நீர் உமது இல்லை விட்டு வெளியேறி நம்மளவில் மனப்பிரியம் வைத்து நாடின போதே நமக்கு அறிவு உண்டாகினது. உம்மை கொள்ளிப்போடுமான கொடூரமுள்ள ஒரு நோய் உம்மை தொடுகுது இவ்வன்னிப்பு பெற்ற குதிரை நாற்பதின் ஈரலை திண்ணுவதல்லால் அப்பிணிக்கு வேற அமிழ்தமில்லை என்று. ஆதலால் அவைகளை உமக்காகவே விலை கொடுத்தேன். அப்பால் நீர் நம்மின் குதிரை பந்தி வாட்டையில் நடந்து வரும் போது அவைகளையும் அதுகளின் கட்டுகரை அடங்களையும் தூசி குளிர் சூட்டை காற்றிடும் பொற்வைகளையும் கண்ட மாத்திரமே உமது அகீதா பேதளித்து நமது ஜாகா அல்லாத் ஒரு தளம் சென்று இறங்கு நீர்.

உம்மைக் கொண்டு இரங்கினது எல்லாம் இரங்கிச்சுது என்றுலாக இம்மொழி விளவும் இம்மனிதர் அச்சனமே அக்குறைவிட்டகன்று மீண்டு பிழை பொருப்பு தேடி நின்னயத்தயும் சரி படுத்தி கொண்டார். பின்பு கௌது நாயகம் அவர்கள் அந்த கண்ணுக்கு இனிய குதிரைகள் கட்டும் வடங்களையும் அதுகளின் போர்வைகளையும் அந்த ஹகீம் என்ற வைத்தியருக்கு கொடுத்திட ஏவினார்கள். சொல்ரார்கள் அந்த ஹகீம் ஸாஹிப் நஸ்ரானி கொளத்தில் இருந்ததாகவும் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கைய்யிலுடனே இஸ்லாம் மார்க்கம் பெற்றனராம் ரலியல்லாஹு அன்ஹு வஅன்ஹும்.

**ஐம்பத்தாராம் ஹிகாயத்தாவது கௌதுடைய மிருகம் கட்டிய பிந்தி வாசலில் இருக்கும் நாயானது ஒரு புலியை ஆராந்திட்ட ஆகத்தில் அறிவிப்பதாம்.**

ஷெய்கு அஹ்மது ஜன்தா ரலியல்லாஹு அன்ஹு என்பவர்கள் புலி மேல் ஏறி அவுலியாக்கள் இருக்கும் இடத்தே சவாரி போய் இறங்கிருப்பதும் அவர்களுக்கு விருந்து கொடுப்பவர்கள் அந்த புலிக்கும் ஒரு மாடு தின்ன கொடுப்பதுமாக நடந்து வருகையில் ஒரு தினத்தில் பக்தாத் நகரம் வந்து கௌது நாயகம் அவர்கள் இடத்தில் இறங்கினார்கள். மனிதர்கள் புலிக்கு மாடு கொடுத்து வரும் வழமையை சொல்லி காட்டினார்கள். துலாபுஸ் ஸாகிலா மடைக்கி தண்ணீர் புகட்டும் ஜாலில் நின்றும் உள்ள ஒரு பசுவை கொடுங்கள் என்றார்கள். அது போல் மாட்டு பந்தியினிடத்தே கூட்டி வந்தார்கள் அப்பந்தியின் வாயலில் நாய் குட்டி மூன்றும் அவர்கள் செல்லும் போது நாயும் துடர்ந்து பின்பு மாட்டை புதிக்கு முடுகவிட்டு புலி மாட்டை பாய நாடிடும் போது நாய் புளியை பாய்ந்து ஆராய்ந்சிட்டுது. முன் குறித்த ஷெய்கவர்கள் ஹழ்ரத் கௌதுல் அஃலம் அவர்கள் அளவில் வந்து பரக்கத்து செய்யப்பட்ட கரத்தை முத்தமிட்டு தவ்பா செய்து மீண்டார்களாம்.

**ஐம்பத்தெழாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்கள் அல்லாஹ்வை தவிர மற்றும் வஸ்துவடங்கள் மீது தத்துவம் ஊச்சிதம் இருப்பதில் பேசுவதாம்.**

புதுஹாதுல் மக்கிய்யா என்ற கிதாபில் 73-ம் பாடத்தில் ஷெய்குல் அக்பர் சொல்லுகிறார்கள் அவுலியாக்களில் நின்றுமாயிருக்கும் ஒரு ஆண் பிள்ளை சில காலம் பெண் பிள்ளையாயுருமிப்பார். இப்படி எல்லா காலத்திலும் உண்டு அவருக்கு குர்ஆனில் ஆயத்தாவது

وهوالقاهرفوق عباده என்றதாயிருக்கும் ஆயத்தின் பொருள் அவனாகிறவன் அவன் அடியார்களுக்கு

மேலான அரசாலுபவனாக இருக்கும.; ஆக இப்படி குணம் பெத்தவர் அந்தந்த காலத்தில் உண்டாவார் அவருக்கு அல்லாஹ் தஆலாவை தவிர உள்ள எல்லா வஸ்துவிலும் தத்துவமும் ஊச்சிதமும் உண்டாம். தைரியமுள்ளவர் சுட்டவீரர் முன்னிலை ஆனவர் ஹக்கு கொண்டு வழக்குரைப்பு மிகுந்தவர் ஹக்கானதை சொல்லுவார் நீதமாய் தீர்ப்பு செய்வார். பக்தாத் ஊரில் நமது ஷெய்கு அப்துல் காதிரில் ஜிலானி ஆகிறவர்கள் இந்த மகாமையுடயோர்களாக இருந்தார்கள். ஹல்குகள் மேல் இவர்களுக்கு வீரம் ஊச்சிதமிருந்தது. கருமம் வழுப்பமுற்றவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய ஆகன்கள் பிரதிஸ்டயானது. நான் அவர்களை சந்தித்து கொள்ளவில்லை என்கிலும் இந்த மகாமில் நமது ஜமானை உடையவரை

சந்தித்துக் கொண்டேன். ஆகிலும் அப்துல் காதிராகிரவர்கள் ஒரே கருமங்களில் நான் சந்தித்த மனிதரைக்காண மிக நிரப்பவாளராக இருக்கும.; மற்றவரும் மவ்த்தாகிவிட்டார்கள். அவர்களுக்குப் பின் இந்த மகாமில் காரியஸ்தராகப் பட்டவர் இதுவரைக்கும் இன்னாரேன நமக்கு தெரியவில்லை என்று இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் ரலியல்லாஹு அன்ஹும் வரலு அன்ஹு.

**ஐம்பத்தெட்டாம் ஹிகாயத்தாவது பக்தாதில் உள்ள பிக்ஹாலிகளில் 100 பகீஹ் சேர்த்து ஒவ்வொருவரும் இல்முகளின் வகையில் ஒவ்வொரு மஸ்அலா மற்றவர் கேளாத்ததை கேட்கவேன கூடி வந்ததிலும் அவர்கள் வஃதுடைய மஜ்லிஸில் ஒவ்வொருவருக்கும் ஜவாப் கொடுத்ததிலும் பேசுவதாயிருக்கும்.**

ஷெய்கு அபூ முஹம்மதுல் முபர்ரஜ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள்; பக்தாத் பஸ்தியில் உள்ள பிக்ஹு உலமாக்களில் புத்திமான்களாய் 100 பகீஹ் ஒன்று கூடி சேர்ந்;து ஒவ்வொரு பகீஹும் மற்றவர்கள் கேளாத கேள்வியாய் கேட்டு பொருக்க வைத்திட வேண்டும் என நினைத்து வந்தார்கள். வஃளுடைய மஜ்லிஸில் அந்நேரம் நானும் அங்கே இருக்கிறேன். ஆக மஜ்லிஸ் கூடி இருக்கையில் ஷெய்கவர்கள் தலையை கவிழ்த்தினார்கள் தங்கள் நெஞ்சில் நின்றுமாய் ஒளிவிளங்கி வீசினது. அல்லாஹ் தஆலா நாடியவர் அல்லாததை மற்றவர்கள் காணமாட்டார்கள். அவ்வெளிவும் அந்த நூருக்கு மேலால் ஒவ்வொருவராக போக போக அவரவரும் வாய் மூடி துளும்புதல் கொண்டார்கள். பின்பு அவர் எல்லாவர்களும் நினைவில்லாதே ஒரு அத்தாட்சி சத்தமிட்டு பிடவைகளையும் கிழித்துக் கொண்டு கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிருக்கும் பட்டு கத தலைகளையும் திறந்து அளவில் ஏறி ஏறி சென்று சிரசுகளை கௌது நாயகம் அவர்களின் இருபாதத்திலே வைத்தார்கள். இனி மஜ்லிசை உடையவர் எல்லாம் ஒரே இரைச்சலாய் இறைஞ்சார்கள் பக்தாத் ஒருபாட்டம் துளும்பிடும் என யான் என்னும் மட்டும் ஆக கருமம் இப்படியாய் இருக்கவே ஷெய்கவர்கள் ஒவ்வொருவரையும் பிடித்து நெஞ்சோடு அணைத்து அனைத்துவிட்டார்கள். அந்த 100 பேரையும் அதன் பின் ஒவ்வொருவருக்கும் சொன்னார்கள் ஓய் நீர் உமது கேள்வி இன்னவிதம் அதற்கு ஜவாப் இப்படி என்றே சொல்லி சொல்லி அந்நூரு பகீஹின் சுவாலையும் தங்கள் தானே எடுத்து காட்டி காட்டி அதற்கு மறுமொழியும் இசைந்தார்கள். இதை பேசிவந்தவர்கள் சொல்லுகிறார்கள் ஆக மஜ்லிஸ் தீர்மானித்த நேரம் அவ்வகைரா அளவில் நான் வந்து உங்களின் கருமங்கள் என்னவேன கேட்டேன். அவர்கள் சொல்லுகிறார்கள் நாங்கள் வந்து உட்கார்ந்த நேரம் எங்களுக்கு அறிவாயிருந்த கல்வி அனைவதையும் இழந்தோம். அதுகள் எங்களை விட்டு மாற்றப்பட்டது போலும் நமக்கருகே ஒருக்காலும் நடக்காதது போலுமாச்சுது. அவர் நெஞ்சளவில் எங்களை அணைத்து அணைத்து விட்ட நேரம் எம்மை விட்டு கழற்றப்பட்ட கல்விகள் மீண்டன. அவராகவே நாங்கள் விரித்திருந்த கேள்விகளையும் பிரித்தனர்.

**ஐம்பத்தொன்பதாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்குளடயிலும் வானத்திலும் பேசுவதாயிருக்கும்.**

சொல்லுகிறார்கள் துப்பட்டி போடுவார்கள் உலமாக்களினுடைய அனைவர்கள் உயர்ந்த உடுப்புடுத்துவார்கள். கோவேறுக் கழுதை ஏறுவார்கள். அதற்கு விரிப்பு விரிக்கப்படும். உயர்ந்த பட்டுகம்பளம் மேல் இருப்பார்கள். தங்களின் பிளக்கத்தில் தீவிரமும் பராஷியம் உண்டு யாவரும் கொண்டுப் கொள்ளுமான வாக்கும் மூன்றும் மொழிந்தால் அம்மொழியை கேட்கவென காது தாழ்த்துதல் வாய் மூடுதலாகும். ஒரு வஸ்தைக் கொண்டு ஏவார்களால் சீக்கிரம் செய்யப்படும். வல் நெஞ்சுடயான் கண்டிடில் அச்சம் கொள்வான். அவர்களை நீ கண்டாயாகில் மனுவ பைத்தியும் கண்டாய் ஜும்ஆ நாளையில் ஜாமிஆவிற்கு ஏகுவார்களாகில் கடை வீதிகள் மனுவோர் கண்டு தமது தமது நாட்டங்களை இவர்களைக் கொண்டு ஆண்டவனிடம் கேட்பார்கள் அவர்களுக்கு அழகிய கீர்த்தியும் அடயாளமும் உண்டாம்.

**அறுபதாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்கள் உடைய குணங்களில் குறிப்பதாம்.**

கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்ணீர் தீபரமானவர்கள். அல்லாஹ்வை பயப்படுதல் கொடூரமானவர்கள். அவர்களை எவர் காண்கில் இவர்கள் பயமிகுத்தவர்கள் துஆ கபூல் செய்யப்பட்வர்கள் நற்குணம் சற்குணம் சங்கையாளர்கள் அங்கம் வியர்வதை மனத்தவர்கள் பின்கம் கெடுதி விட்டகன்றவர்கள். மனுவில் எல்லாம் ஹக்களவில் முடுகியவர்கள் அல்லாஹ் தஆலா உடைய ஹுர்மத்திற்கு குறைவு வந்திடில் யஃனி யாரும் கெடுவேலை செய்திடில் ஆக்கினை கடுசானவர்கள். தனக்காக கோபிக்கார்கள். நாயன் அல்லாதவர்களுக்கு உதவியாகார்கள். பிச்சை கேட்பவரை தட்டிவிடார்கள். தமது இரு பிடவையில் ஒன்றை கொண்டாகிலும் சரி. அல்லாஹ் தஆலா நற்கருமத்தில் நல்லுதவி கட்டளையிடுதல் இவர்களுக்கு பரிவட்டம் சொல் செயலில் பிலவந்தம் செய்தல் உதவியாக இருந்தது அறிவே வெடிப்பு தூயமாக்குவதாக இருந்தது. ஹக்குக்கு முடுகுதல் அதபு வருத்துவதா இருந்தது கல்பு ஹுழூர் புசயலாகவிருந்தது மஃரிபா துரை இவர்களின் பணிவிடை ஹக்குடனே திருமொழி பேசுதல் உஷாவுத் துனையாக இருந்துது. ரப்புடைய நோட்டம் தூதனாக இருந்துது ரஹ்மானுடன் மருகுதல் தோழனா இருந்தது. சமாலமாகுறது நடபிடியா இருந்துது உண்மை அடையாள கொடியா இருந்துது. ஒத்தி பெறுதல் வர்த்தக சரக்கா இருந்துது. அமர்த்தி தொழிலா இருந்துது. திக்ர் மந்திரியா இருந்துது. பிக்ர் இராகத்தை பேசுவதா இருந்துது. கஸ்பு வஜீபனமா இருந்துது. முஸாஹதா சுவாத்தியமா இருந்துது. ஷரீஅத்தின் ஒழுங்குகள் ஒளி கொளமா இருந்துது. ஹகிகத்தின் வன்னிப்புகளின் உள் அடக்கமா இருந்துது.

**அறுபத்தொராம் ஹிகாயத்தாவது அவர்கள் கோலம் குரியில் பேசுவதாயிருக்கும்.**

கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடல் மேலானவர்கள். ஒத்த உயரம், நெஞ்சகலம், தாடி அகலம், தாடி நீளம், சிகப்பு கலந்த வெள்ளை புது நிறம், கூட்டு புருவம், கனத்த சத்தம் உள்ளவர்கள். தெளிவான அடையாளம் உயர்ந்த தகுதி நிறைந்த கல்வி ஆக இவ்வன்னிப்போல் உள்ளவர்களாக இருந்தார்கள் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

**அறுபத்தி இரண்டாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்களுடைய அஸ்ஹாபுகள் கியாம நாள் வரைக்கும் உள்ளவர்கள். முரீதுகளின் நாமங்களை எழுதப்பட்ட ஓர் கடிதம் அல்லாஹ் தஆலா கொடுத்திருக்குற நாமம்.**

பஹ்ஜத்துல் அஸ்ரார் எனும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் கண் எட்டும் தூரத்திற்கும் கடிதம் எனக்கு கொடுக்கபட்டிருக்கிறது. அதில் என் அஸ்ஹாபுகள் உடைய நாமங்கள் கியாம நாள் வரையும் உள்ள முரீதுகள் உடைய நாமங்கள் எழுதப்பட்டிருக்கிறது. இன்னம் எனக்கு சொல்லப்பட்டது அவர்களை உமக்கு நன்கொடையாய் கொடுக்கப்பட்டது என்று நரகத்திற்கதிபதி மாலிக்கிடத்தில் கேட்டேன். உம்மிடத்தே அஸ்ஹாபுகளில் யாரும் உண்டோ என்று அவர் இல்லை என்றார். என் நாயகனின் வலுப்பம் மேன்மையின் பேரில் ஆணையாக என் முரீதுகள் மேல் என் கையாகிறது எப்படி இருக்கும் என்றால் பூமி மீது வானம் மூடியது போல் இருக்கும். என் முரீது திருத்தமல்லாதிருக்கிலும் நான் திருத்தம் உள்ளவன். என் ரப்புடைய அஜ்ஜத் ஜலால் மேல் ஆணையாக! என் நாயகாதினன் சமூகம் என் இருகாலும் நீங்காதிருக்கும். அவன் என்னமும் உங்களையும் சுவன பதியளவில் நடத்திவிக்க மட்டுக்கும் முஜக்கின் நுபூசேனும் கிதாபில் ஷெய்கு குதுப் இப்னு அஷ்ரபிர் ரூமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள்: கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறவர்களாக இருப்பார்கள் என் முரீது திருத்தமுள்ளாதில்லாதிடினும் நான் திருத்தம் உள்ளவன். என் ரப்புடைய இஜ்ஜத் மேல் ஆணை! என் கியானத்து என் முரீதின் சிரஸு மேல் நான் மஸ்ரிகிலும் அவன் மக்ரிபிலும் இருக்கும் ஹாலிலும் சரி அவன் அவ்ரத்தை நீக்கப்பட்டால் நான் மஸ்ரிக்கிலிருந்து என் கையை நீட்டுவேன,; மறைத்து கொள்வேன். என் நாயன் சிறப்பினாலே கியாம நாளையில் ஜஹன்னம் வாசலிடத்தே நான் தரிபட்டு நிற்பேன.; என் முரீதெல்லாம் அதை கடக்க மட்டுக்கும் என் முரீதை நரகத்தில் புகவிட மாட்டேன் என்று அல்லாஹ் தஆலா எனக்கு உறுதிமானம் தந்திட்டான். என்னளவில் சேர்ந்தவனை நான் ஒப்புக் கொண்டு அவன் அளவில் யஃனி அல்லாஹ் அளவில் முன்னோக்கி செல்ல செய்திடுவேன். முன்கர் நகீர் இடத்தில் நான் வார்த்தைப்பாடு எடுத்திருக்கிறேன். கப்ரில் என் முரீதை திடுக்கத்திலாக்காதிருக்க வாக்கெடுத்திருக்கிறேன் என்றார்கள்.

**அறுபத்தி மூன்றாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்களுடைய இருவிரலை இருவர் சூப்பி அதனால் அவரை விட்டும் உணவு, குடிப்பு இல்லாமலான செய்தி.**

ஆரிபாகிய ஷெய்கு அபூ முஹம்மது சாவர் சப்தில் மஹல்லி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் பக்தாதில் நமது ஷெய்கு கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை சிக்க புகுந்தே சில நாள் அங்கே இருந்தேன். மிஸ்ருக்கு ஹல்கை விட்டும் இருந்து பாதையில் போக நாடின போது உத்தரவு தேடினேன். அப்போது ஒருவரிடமும் ஒன்றும் கேளாதே என்று வசிய்யத்து செய்தார்கள். தங்களின் இரு விரலை என் வாயில் வைத்தார்கள். சூப்பிக்கொள் என்று ஏவினார்கள். நான் விளங்கி அறிந்து கொண்டேன்.

நீ நேர் பெற்றவனாய் போ என்றார்கள். இவர் சொல்லுகிறார் என் தத்துவமும் அதிகமாய் தின்னாமலும் குடியாமலும் பக்தாத் விட்டு மிஸ்ரு வந்து சேர்ந்தேன் என்பதை சொன்னார்.

**அறுபத்தி நாலாம் ஹிகாயத்தாவது பக்தாதில் புகுதுவோர்க்கு கௌது நாயகத்தை ஜியாரத் செய்து கொள்ளும் படி செய்யதுல் கபீர் அஹ்மது ரிபாயி வஸியத்து செய்திருப்பதில் பேசுவதாம்.**

தங்களுடைய உடன் பிறந்தார் மக்களுக்கும் தங்களுடைய அஸ்ஹாபுகளில் பாரவான்களுக்கும் வஸிய்யத் செய்கிறவர்களாக இருந்தார்கள். கௌது நாயகம் அவர்களை ஜியாரத் செய்யும்படியாய் ஒரு மனிதர் வந்து பக்தாதுக்கு போறேன் என்பதாய் பயணம் அனுப்பிக்கொள்ள வந்தார். அப்போது சொன்னார்கள் பக்தாதில் புகுந்தீர்களானால் ஷெய்கு அப்துல் காதிரை தரிசனம் செய்ய முன் ஒன்றையும் முற்படுத்திடாதீர்;கள் அவர் ஹயாத்தாக இருக்கில். இனி அவர் மவ்த்தாகயிருக்கில் அவரின் கப்ரை ஜியாரத் செய்யும் முன் ஒன்றும் செய்யாதீர்கள். திடனாக அவருக்கு வார்த்தைப்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹால்களுடையயோரில் எவரும் பக்தாத் ஊர் புகுந்து அவருடைய மவ்த்திற்கு முன்னாலயானாலும் சரி அவரை ஜியாரத் செய்யாதிடில் ஹாலை உரியப்படும் என்பதாக. இன்னும் ஷெய்கு அப்துல் காதிரானவர் அவரை காணாதவர் மீது கைசேதமாயிருக்கும் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா.

**அறுபத்தைந்தாம் ஹிகாயத்தாவது இரு பிரமாளும் யஃனி தாய் தகப்பர் என்னும் இரு புறத்தாலும் உள்ள வங்கிசத்தில் பேசுவதாயிருக்கும்.**

அறிந்து கொள் கௌது நாயகம் அவர்கள் தகப்பர் வங்கிசத்தில் வந்த விபரமாவது செய்யிது ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமைக் குமாரராகிய இமாம் ஹஸனுல் முதன்னா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் செல்வ குமாரராகிய இமாம் அப்துல்லாஹில் மஹ்து ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகனாகிய இமாம் மூஸல் ஜவ்ன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகனாகிய இமாம் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் செல்வ மைந்தரராகிய இமாம் மூஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமை மைந்தரராகிய இமாம் தாவூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வராகிய இமாம் முஹம்மத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமைப் புதல்வராகிய அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமை குமாரராகிய இமாம் அபூ ஸாலிஹ் மூஸா ஜன்கி தொஸ்த் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கல்புக் கனியாகவும் கண்ணின் மணியாகவும் வந்துதித்த வள்ளல் ஷெய்குனா செய்யிது அப்துல் காதிருல் ஜெய்லானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களாயிருக்கும்.

இவர்கள் தாயார் வங்கிசத்தில் வந்த விபரமாவது செய்யிதினா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகனாரான இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கண் மணியாகிய இமாம் ஜெய்னுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கல்பு கனியாகிய இமாம் முஹம்மதுல் பாகிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரராகிய இமாம்

ஜஃபருஸ் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மைந்தராகிய இமாம் மூஸல் காழிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வராகிய இமாம் அலியுர் ரிலா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமை மகனாராகிய இமாம் செய்யிது அபூ அலாவுத்தீன் முஹம்மதுல் ஜவாத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமைக்குமாரராகிய இமாம் செய்யிது கமாலுத்தீன் ஈஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் செல்வ புதல்வராகிய இமாம் செய்யிது அபூல் அதாயி அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமை மைந்தராகிய இமாம் செய்யிது மஹ்மூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் செல்வராகிய இமாம் அபூ ஜமாலுத்தீன் செய்யிது முஹம்மத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மைந்தராகிய இமாம் செய்யிது அப்துல்லாஹ் அஸ்ஸவ்மயிற்றி அஸ்ஸாஹித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகளாகிய பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கண்மணியாகிய இமாம் செய்யிது அப்துல் காதிருல் கைலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களாயிருக்கும்.

**அறுத்தாறாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்களுடைய சிறப்பான நாமங்களை கூறுவதாயிருக்கும்.**

சொல்லுகிறார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு 99 பேர் இருப்பதாம். பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம். அந்நாமமாகிறது அப்துல் காதிர் செய்யிது நாயகம் முஅய்யத் உதவி கொடுக்கப்பட்டவர்கள் கரீம் சங்கையாளர்கள் அதீம் வலுப்பமானவர்கள் ஷரீப் சிறப்பானவர்கள் லரீப் வள்ளலானவர்கள் இமாமுன் முன்னிலையானவர்கள் ஹுமாமுன் செய்யிதானவர்கள் சாலிகுன் ரப்புடைய பாதையில் நடப்பவர்கள் நாசிகுன் வணக்கமுள்ளவர்கள் முஃமின் ஈமான் புன்டவர்கள் மூகின் உறுதியுள்ளவர்கள் முன்யிம் சுகம் அடைந்தவர்கள் முக்ரிம் சங்கையுத்தவர்கள் தபீப் அகநோக்கு வைத்தியர்கள் தைய்யிப் மனமானவர்கள் முதய்யிப் மனமாக்கி வைக்கிறவர்கள் ஜவாத் கொடயுள்ளவர்கள் முன்காத் வழிபாட்டுடையவர்கள் காயிம் நின்று வணங்குகிறவர்கள் சாயிம் நோம்பு பிடிப்பவர்கள் ஆபித் வந்தனம் செய்பவர்கள் ஜாகித் துன்யா மனம் வெருத்தவர்கள் சாஜித் சுஜூத் செய்தவர்கள் வாஜித் ஹக்காசை உரைந்தவர்கள் ஜியலி ஜீலானோரில் சேர்ந்தவர்கள் ஹன்பலி அஹ்மது இப்னு ஹன்பலி இமாம் மத்ஹபை சார்ந்தவர்கள் தகிய்யி தக்வாவெனும் ஹக்குடைய கட்டளைகளை பேணி நடப்பவர்கள் நகிய்யி தூய்மை பூண்டவர்கள் காமில் நிறப்பவாளர்கள் பாதில் நற்பாதையில் செலவு செய்பவர்கள் ஜகிய்யி துப்புரவானவர்கள் சபிய்யி தெளிவானவர்கள் ஜமீல் அழகானவர்கள் ஜலீல் வலுப்பமானவர்கள் மாசுன் முரீதுகளை பாதை கடத்தும் சங்கவான் மனாசுன் துன்பம் விட்டோடி செல்ல தம்னமானவர்கள் ஸயீத் சீதேவியானவர்கள் ரஸீத் நேர் நெறி செய்தவர்கள் சஹிய்யி தருமவாளர்கள் வபிய்யி வாக்கு நிறைவேற்றவர்கள் யாரிசா சிறப்புடையவர்கள் நகீப் அவுலியாக்கள் தலமை நோட்டகாரர்கள் நஜீப் வெடிப்பானவர்கள் ஹாதிஃ வெளி அச்சம் உடையவர்கள் ஹாஷிஃ உள் அச்சம் உடையவர்கள் ஜாஹிப் தகமயானவர்கள் தாகிப் ஒளிவிளங்குவர்கள் வாரித் நபி நாயகத்திநந்திரார்கள் ஹாரித் பதவியான அமலை பயிர் செய்பவர்கள் வாரிஃ மார்க்கத்தில் பேனுதல் உள்ளவர்கள் பாரிஃ கல்வியில் கடப்புள்ளவர்கள்

பாயிக் யாவரையும் மேல் எடுத்துக் கொள்பவர்கள் லாயிக் தக்துக்கினங்கியவர்கள் ராசிஹ் அறிவில் உரைந்தவர்கள் ஷாமிஹ் பிரிவில் உயர்ந்தவர்கள் வலிய்யி அல்லாஹ் உடைய காரியஸ்தர் ஹபிய்யி தகுதி மறைந்தவர்கள் லாஹிர் கீர்த்தனம் வெளியானவர்கள் தாஹிர் துய்தானவர்கள் முதீஃ வழிபாட்டில் இசைந்தவர்கள் மனீஃ நெருங்க கூடாதே அறனிப்புள்ளவர்கள் லபீப் சுட்டிவான் ஹபீப் நாடியவரிடம் வருகின்றவர்கள் ராஷித் நேர்வுள்ளவர்கள் ஜாயித் நெறி மிகுந்தவர்கள் காயித் இராஜன் வலி கொள்காட்டுரவர்கள் பஸீர் அகவிழியுள்ளவர்கள் முனீர் கல்பை ஒளிவாக்குகிறவர்கள் சிராஜ் வீன்ஜயில் விள்க்கானவர்கள் தாஜ் மஃரிபாவில் கிரீடமானவர்கள் பாயிஹ் திசை எல்லாம் வாசனை வீசுரசர்கள் பாதிஹ் மனப்பூட்டை திரப்பவர்கள் முகற்றப் முன்னவனுக்கு முடுகி வாக்கப்பட்டவர்கள் முஹத்தப் குணம் துப்புரவாக்கப்பட்டவர்கள் ஹலீல் முன்னவனுக்கு தோழன் தலீல் மறை முரை காட்டுகிறவர்கள் ஸாதிக் உண்மையாளர்கள் ஹாதிக் புத்தி கூர்மை உள்ளவர்கள் சுல்தான் அவுலியாக்களுக்கு அரசர் புர்கான் தெளிவாளரின் அத்தாட்சி ஹஸனிய்யி தந்தை வழி ஹஸனை கூப்பிடப்பட்டவர்கள் ஹுஸைனிய்யி தாய் வழி ஹுஸைனை சேரப்பட்டவர்கள் ஆலிம் அறிவு சிறந்தவர்கள் ஹாகிம் நீத தீர்ப்பு நிறைந்தவர்கள் முயீன் உதவி செய்கிறவர்கள்; முபீன் மறைவை வெளியாக்குகிறவர்கள் மிஸ்பாஹ் வேத விளக்கானவர்கள் மிப்தாஹ் மறை பொருள் களஞ்சியத்தின் திறவுகோல் சாகிர் பாக்கியத்திற்கு பகரம் செய்தல் எனும் சுக்ர் உடையவர்கள் தாகிர் ஓய்வு ஓளிவு இல்லா திக்ருள்ளவர்கள் கல்மலாத் சஞ்ஜலம் விட்டு தூங்க தஞ்சமானவர்கள் மஆத் நோவினை அகன்று ஒளியும் காவலார்கள் ஸாலிஹ் தீனுக்கு இனங்கியவர்கள் நாஸிஹ் ஹக்கின் உபதேசத்தில் ஆனவர்கள் பாதிஹ் வெற்றி ஜெயம் உற்றவர்கள் வாலிஹ் தூயதான பானத்தில் துளாம்பரமானவர்கள் வ ஸல்லல்லாஹு அலா ஹைரி ஹல்கிஹி செய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன்.

**அறுபத்தெழாம் ஹிகாயத்தாவது கௌது நாயகம் அவர்களுடைய வஸிய்யத்தில் பேசுவதாயிருக்கும்.**

அப்துர் ரஜ்ஜாக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் தகப்பனாராகிய கௌது நாயகம் அவர்களிடத்தில் கேட்ட போது வஸிய்யத் அருளினார்கள் சந்ததி அறிந்தது. எனக்கும் உமக்கும் இன்னம் இஸ்லாமானவருக்கும் அல்லாஹ் தஆலா நல்உதவி அருள்வானாக. உனக்கு நான் வஸிய்யத் செய்கிறேன.; தக்வாவை கொண்டும் வழிப்படுவதைக் கொண்டும் மார்க்கத்தை பூன்று கொள்வதைக் கொண்டும் அல்லாஹ் தஆலா உடைய கட்டளையை மீறாதவனே பேணுவது கொண்டும் நமது தரீகத்தாவது அது எடுக்கப்பட்டதாக இருக்கிறது. குர்ஆன் ஹதீதின் படிக்கும் கபடு சூனியம் ஹஸதை விட்டு நெஞ்சு ஸலாமத்தாய் இருப்பதிலும் கை கொடை கொடுப்பதிலும் தர்மமீவுதலிலும் முஸ்லிமான உடன் பிறப்பை வெறுப்பதை விடுவதிலும் அவர்களின் குறை குற்றங்களை மன்னிப்பதிலும் இன்னும் வஸீயத்துரைக்கிறேன். என் காமில்களான புகராக்களை அருமை பெருமையாய் வைத்திடவும் ஷெய்குமாரின் சங்கைகளை பேணி நடக்கவும் இஹ்வான்களோடு சேர்ந்து உறவாடி அதின் அழகைக் கொண்டும் சிறியோர் பெரியோர் எவரோடும் இணங்கி நடப்பது கொண்டும் மார்க்க விஷயம் அல்லாத மற்றும் கருமத்தில் வழக்கடிப்பை விடுவதிலும் வஸிய்யத் செய்கிறேன். மகனே

அல்லாஹ் நல்லுதவி கட்டளை அருள்க. பக்ரு எனும் வறுமை ஹாஜத்து படுதல் என்றதின் உள்ரங்கம் உன் போல் ஒத்தவன் அளவில் நீ நாட்டம் கொள்ளாதிருக்கும் போது தான். இனி வாழ்வில் அந்தரங்கம் உன் போல் ஒத்தவனை விட்டு தேவையற்று இருப்பது தான். சூபி தனம் என்பது திட்டமாக அது ஓர் ஹால் எனும் நடபிடி. அதுவே அல்லால் கீழ் காலெனும் வார்த்தை சாத்துவது கொண்டு மட்டும் எடுப்பவனுக்கள்ளை குணம் எடுத்து நடப்பவனுக்கல்லால் நீ கானமலா ஒரு பகீரை காண்டாயாகில் இவரைக் கொண்டு பிச்சை துவக்காதே கிருபையை கொண்டு உரைத்திடு இவரை கேட்பது அவரை விரட்சியாக்கிவிடும் கிருபை அவரை உண்ணுடன் மருதலிலாக்கிடும். யா வலதி உனக்கும் எனக்கும் முஸ்லிமானவர்க்கும் அல்லாஹ் தஆலா நற்கட்டளை செய்தருள்க தஸவ்வுப் என்ற கல்பு தெளிவு பெருதலானது 8 கருமமிதே எடுக்கப்பட்டது. முதலாவது தருமம் இரண்டாவது பொருத்தம் மூன்றாவது பொருமை நான்காவது ஷைக்கினை ஐந்தாவது பதுரேசம் ஆராவது கம்புளி உடை ஏழாவது பதவிட்டேகி திறிவது எட்டாவது வருமை. தருமம் செய்தல் இப்ராஹீம் நபிக்கும் பொருந்துதல் இஸ்ஹாக் நபிக்கும் பொருதி ஐய்யுப் நபிக்கும் ஷைக்கினை ஜகரிய்யா நபிக்கும் மருடேசம் பொகுதல் யுசப் நபிக்கும் முடி உடை அனைதல் யஹ்யா நபிக்கும் பதவி விட்டு திறப்பது ஈஸா நபிக்கும் வருமை நபியுல்லாஹ் தூதாங்கர நமது உகப்புள்ள நாயகம் மன்றாடி காப்பாற்றுகிறவர்களான மகிமை அகன்ற பறவையாகிய முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் குணங்களான நடபிடியாக இருக்கும். வலதே நீ சீமான்களோடு பெருமையுடன் சேர்ந்திருக்குவதையும் புகராக்களோடு தாழ்மையாய் இருப்பதையும் பற்றிப் பிடித்துக்கொள். கலப்பருதல் என்ற இஹ்லாசை பற்றிப்பிடி அதின் பொருள் அடக்கம் செய் கருமத்தில் ஹல்குக்கு தெரிய வேண்டுதளை மறந்து ஹக்கு பார்த்திருக்கிறான் என்பதை நெமமாக்குதல் இன்னம் சபபுகளில் அல்லாஹ் தஆலாவை சந்தாபம் கண்டிடாதே எல்லா ஹாலிலும் அவன் அளவில் ஒதுங்குதலாயிரு. இன்னம் உன்னுடைய நாட்டங்களை ஒருவனுக்கும் உனக்கும் இடையில் முடுகுதல் உகப்பு தோழமை இருப்பது என்று அவன் பேரில் பாரம் சாட்டுதாய் வைத்திடாதே மூன்று கருமம் கொண்டு புகராக்களுக்கு பனிவிடை செய்தலை நீ பற்றிப்பிடி முதலாவது தாட்ச்சனம் இரண்டாவது சர்குனம் மூன்றாவது நப்ஸ் தெளிவு உன் நப்ஸை சாவடித்து அது சீவன் பெருமட்;டும் இன்னம் அல்லாஹ் தஆலா அளவில் ஹல்கிலெல்லாம் மிக முடுகின வனாகிறவன் குணம் விஸ்தீனமானவனாக இருக்கும். அமல்களில் எல்லாம் அதிக விரிவானது அல்லாஹ்வை தவிர உள்ள எவை அளவிலும் திரும்பி நோக்காமல் சிற்றை பேனுவதாக இருக்கும். புகராக்களுடன் சேர்ந்தாயாகில் சப்ரு கொண்டும் ஹக்கு கொண்டும் வஸிய்யத் செய்வதை பற்றிப்பிடித்துக் கொள். துன்யாவில் நின்றும் உனக்கு இரண்டு வஸ்துவை போதுமாக்கி கொள். பகீரை சேர்தலும் வலை சங்கை செய்தலும். மகனே அறிந்துக் கொள் பகீராகிரவன் அல்லாஹ் தஆலாவை தவிர ஒரு வஸ்துவை கொண்டும் தேவையற்றவன். மகனே உன் போல் கொத்தவன் மீது உன் வீரத்தை செலுத்துவது பலகீனாமாக இருக்கும். உனக்கு மேல் உள்ளவன் மீது உன் வீரத்தை செலுத்தல் பெருமானம். இனி தஸவ்வுபும் பக்ருமாவது இரண்டும் திட்டமாகிய உண்மை ஆதலால் வீன் பரியாசத்தில் நின்று மொன்றை கொண்டும் கலந்திடாதே. இப்போது சொல்லிய உபதேசமானது உனக்கும் முரீதுகளில் கேட்டுக் கொள்வோருக்கும்

என்னுடைய வஸிய்யத்தாயிருக்கும். முரீதுகளை அல்லாஹ் தஆலா மிகுதமாக்கி வைப்பானாகவும். அவனே உனக்கும் எனக்கும் நல் உதவி அருள்வானாக. நான் சொல்லி விபரித்ததை எடுத்து நடக்கவும் இன்னம் நம்மை முன்னோர் நடபிடியை துயந்து நடக்கவும் சர்ச்சைனர் இல்லாக்குவானாகவும் நமது நாயகம் நபி ஷபீஃ முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டால் ஆமீன். யா ரப்பல் ஆலமீன்.

**அறுபத்தெட்டாம் ஹிகாயத்தாவது தொழுகை தொழுது கௌது நாயகம் அவர்களினால் உதவி தேடுகிறதை பேசுவதாயிருக்கும்.**

பஹ்ஜத்துல் அஸ்ரார் கிதாபிலும் தக்மிலத்துல் யாபிய்யி என்ற கிதாபிலும் சொல்லுகிறார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருளினார்கள் யாரும் துன்பமான சமயத்தில் என்னை கொண்டு இரட்சிக்க தேடினால் துன்பம்; நீக்கப்படும். ஒரு ஹாஜத்தில் என்னை கொண்டு சிபாரிசு தேடினால் நாட்டம் நிறைவேற்றப்படும். இன்னும் ஒருவன் இரண்டு ரக்அத் தொழுகையில் ஒவ்வொரு ரக்அத்திலும் பாத்திஹாவிற்குப் பின் சூரா இக்லாசை 11 தரம் ஓதி தொழுது பின்பு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் 11 விடுத்தம் ஸலவாத் ஓதி பின்பு ஈராக் திசை அளவில் 11 எட்டு வைத்து எனது பெயரையும் சொல்லி தன் ஹாஜத்தை குறித்து கேட்க, நிறைவேறும். முன் கூறிய இரு கிதாபில் வருவது முடிந்துது.

நான் அத்தொழுகை தொழுவதற்கு விரித்து பிரித்து சொல்கிறேன் அவன் சொல்கிறது அரபில் எழுதினபடி நிய்யத் அதின் பொருள் சிற்று தொழுகை அல்லது ஹாஜத் தொழுகை இரண்டு ரக்அத்தை அல்லாஹ் அளவில் முடுகுதல் பெறவும் அவன் அல்லாததை விட்டு பத்துதலரவும் சிறப்பாகிய கஃபா திசையினளவில் முன்னோக்கி தொழுகுறேன். அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கட்டவும்.

அப்படி தக்பீர் கட்டி பாத்திஹாவுக்கு பின் குல் குவல்லாஹு அஹத் சூராத்தை 11 தரம் 11 தரம் இரண்டு ரக்அத்திலும் ஓதி தொழுது ஸலாம் கொடுத்து பின் ஸுஜூதும் செய்வான். பின்பு 11 தரம் இந்த முனாஜாத்தை சொல்வான்.

يا شيخ الثقلين يا قطب الرباني يا غوث الصمداني يا محبوب السبحاني يا محي الدين ابا محمد السيد عبد القادر الجيلاني اغثني

وامددني في قضاء حاجتي هذه يا قاضي الحاجات

இதன் உரை அவர்களை கூப்பிட்டு தேடுதல் செய்வது என்னை இரட்சியுங்கள் என் நாட்டம் கை கூட உதவி அருளுங்கள் நாட்டம் நிறைவேற்றுகிறவர்களே என்று, பின்பு எழும்பி நின்று ஈராக் இராஜியத்தின் திசை அளவில் 11 எட்டு வைத்து ஒவ்வொரு எட்டிலும் இதை சொல்வான்.

ياشيخ الثقلين ياقطب الرباني ياغوث الصمداني يامحبوب السبحاني يامحي الدين ابا محمد السيد عبد القادر الجيلاني

பின்பு இடது கால் மேல் வலது காலை வைத்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது முதலாய் ஸலவாத் சொல்வான். 11 விடுத்தம் பின்பு பாத்திஹா, இக்லாஸ,; இதா ஜாஅ நஸ்ருல்லாஹ் இம்மூன்று சூரத்தையும் பதினோரு பதினோரு தரமாய் ஓதி பின்பு சொல்லுவான்.

ياجنود الله وياعباد الله اغيثوني وامدوني في قضاء حاجتي هذه ياقاضي الحاجات امين امين

பொருள் - அல்லாஹ் உடைய கூட்டங்களே அல்லாஹ் உடைய அடியார்களே என்னை இரட்சித்திடுங்கள் எனது இந்த ஹாஜத்தை நிறைவேற்றலில் உதவி செய்திடுங்கள் ஹாஜத்தை நிறைவேற்றவனே கபூல் செய்தருள்

ياشيخ الثقلين ياقطب الرباني ياغوث الصمداني يامحبوب السبحاني يامحي الدين ابا محمد السيد عبد القادر الجيلاني

பொருள் - ஜின் மனு இரு கூட்டத்திற்கும் குருவே! ரப்பளவில் சேர்க்கப்பட்ட குத்பே! சமதானிய்யான கௌதே! தீனை ஹயாத்தாக்கியவர்களே! முஹம்மத் எனும் மகனாருக்கு தகப்பரே! செய்யிது வலியான அப்துல் காதிருல் ஜெய்லானி ஆண்டவர்களே.!

பின்பு முராக்கபாவைக் கொண்டு பராக்கி முஸல்லாவில் லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் தவ்ஹீத் கலிமாவை 108 விடுத்தம் திக்ரு செய்து பின்பு அல்லாஹ்வுக்கு சுஜுது செய்து அந்த ஸுஜுதில்

ياروح القدس

என்று அரபில் எழுதிய

ياروح القدس وياجنود الله وياعباد الله اغيثوني وامدوني في قضاء حاجتي هذه ياقاضي الحاجات امين امين

முனாஜாத்தை சொல்லுவான். ஆக இவ்வேலையின் துவர்க்கத்தில் மணம் கொண்டு புகுர் போட்டுக் கொள்வான். பின்பு 11 பகீருக்கு சதகா கொடுத்துக் கொள்வான்.

**அருத்தொன்பதாம் ஹிகாயத்தாவது கௌது ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வபாத்தில் கூறுவதும்.**

சொல்லுகிறார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வபாத் முடுகின பொழுது நாயகம் இஜ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு மடிக்கப்பட்ட கடிதம் நாயகன் சமூகத்தில் நின்றும் பொழுது அஸ்தமிக்கும் நேரத்தில் கூடி வந்து இவர்கள் புத்திரர் அப்துல்

வஹ்ஹாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இடத்தில் கொடுத்தார்கள.; மேல் வாசகம் எழுதி இருந்தது இக்கடிதம் முஹிப்பில் நின்றும் மஹ்பூப் அளவில் சேர்வது என்பதாய். அதை மகனார் கண்ட போது அழுது சஞ்சலம் அடைந்து இஜ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடனே காகிதத்தை கொண்டு ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அளவில் புகுந்தார்கள். இதற்கு 7 நாளைக்கு முற்பட கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இடத்தில் மேலாம்பர ஆலத்துக்குள் அவர்கள் யாத்திரையாவதும் அஸ்லான குடிபதி அளவில் மீழ்வதும் இரையப்பட்டதாக இருந்துது. அது கொண்டு அவர்கள் சந்தோமாக்கப்பட்டவர்களாகயும் இருந்தார்கள். இன்னும் முரீதுகள் முஹிப்பீன்கள் இஹ்லாஸ் உடையவர்கள் இவர்களுக்கெல்லாம் பிழை பொறுக்குவது கொண்டு அல்லாஹ் தஆலா இடத்தில் துஆவும் இறைந்தார்கள். கியாம நாளையில் அவர்களை மன்றாடி கரை சேர்ப்பதென அவர்களுக்கு அல்லாஹ் தஆலா வாக்கும் கொடுத்தான். அல்லாஹ் தஆலாவுக்கு சுஜூது செய்தார்கள். முத்மயின்னதான நப்ஸை உன் நாயன் அளவில் நீ பொருந்துனதினாலும் உன்னை பொருந்தப்பட்டதாயும் மீழ்சையாக்கு என்று ஹக்கின் புறத்தால் சத்தம் உண்டானது. இன்னும் மனு, ஜின் ஆலம் அழுகை கொண்டு இரச்சல் இட்டது. இவர்களின் சந்திப்பை கொண்டு மேல் லோக மலகூத்து ஆலம் அலங்காரம் கொண்டது. 561-ம் வருடம் ரபீயுல் ஆகிர் மாதம் 11 தேதி திங்கள் கிழமை ஈஸா தொழுகைக்குப்பின் வபாத்தாகப்பட்டது. கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வபாத் நாளையில் உலமாக்கள் ஹிலாபாக்கினார்கள்.

பஹ்ஜத்துல் அஸ்ரார் எனும் கிதாபில் சொல்லுகிறார்கள் ரபீவுல் ஆகிர் மாதம் 9 நாள் என்று செய்யிது அஹ்மது ரிபாயி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மல்பூதுல் நூர் அஹ்மது என்ற கிதாபில் வருவது ரபீயுல் ஆகிர் மாதம் 10 நாள் ஜும்ஆவிற்குப் பின் சனி இரவில் என்று. இன்னும் ஒரு ரிவாயத்தில் அந்த மாதம் 8-ல் என்று தஹ்பதுல் காதிரிய்யா எனும் கிதாபில் அந்த மாதம் 17 என்றும் செய்யிது நூருத்தீன் மஹ்மூதுல் காதிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்ராதுல் காதிரிய்யா எனும் கிதாபில் சொல்லுகிறார்கள் அந்த மாதம் 17-ம் நாள் வியாழக்கிழமை இன்னும் சொல்லப்பட்டிருக்கிறது அந்த மாதம் 13-ல் என்பதாய் அசஹ்ஹான சொல் ஜும்ஆ நாள். இன்னும் சொல்லப்பட்டிருக்கிறது அந்த மாதத்தில் 11 அல்லது 8 அல்லது 17 வியாழக்கிழமை என்பதாக. கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வபாத் ஹாலிரான போது மக்களுக்கு சொன்னார்கள் என்னை சுற்றி இருப்பதை விட்டும் தூராகுங்கள். திட்டமாக நான் லாஹிரில் உங்களுடனும், பாதினில் உங்கள் அல்லாதவர் உடனுமாக இருக்கும். ஏன் என்றால் என்னிடத்தில் உங்களை அல்லாத பேரும் ஹாலிராக இருக்கிறார்கள். அவர்களுக்கு இடம்; கொடுத்து அதபாக இருங்கள். இவ்விடம் வழுப்பமான ரஹ்மத் இருக்கிறது. அவர்கள் மீது தளம் கிட்டுமையாக்காதயுங்கள் என்று நாயகம் அருள் செய்தார்கள்.

இன்னும் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுரவர்களாக இருந்தார்கள் அலைகுமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு அல்லாஹு தஆலா எனக்கும் உங்களுக்கும் குற்றம் மன்னித்து தவ்பாவை கையேர்ப்பானாகவும்

بسم الله غير مودعين

என்று இப்படி ஒரு பகலும் இரவும் சொன்னார்கள.; அவர்கள் பிள்ளை ஷெய்கு அப்துர் ரஜ்ஜாக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சொன்னார்கள் ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் இருகரம் உயர்த்தி நீட்டி வஅலைகுமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு நீங்கள் தவ்பா செய்யுங்கள் உங்கள் அளவில் யான் வரும் போது சப்பில் புகுதுங்கள் என்று சொல்லுகிறவர்களாக இருந்தார்கள். இன்னும் மவ்த்திடத்தில் சொன்னார்கள் கிருபையாய் வஅலைகுமுஸ்ஸலாம் உங்கள் அளவில் நான் வருகிறேன் நான் வருகிறேன் என்று இன்னும் சொன்னார்கள்: தரிபடுங்கள் என்று பின்பு ஹக்கு வந்துது யஃனி மவ்த்துடைய வருத்தம் வந்துது சொன்னார்கள் நான் அல்லாஹ் உடைய இல்மில் நின்றும் பிரளுகிறேன் ஒரு வஸ்தை தொட்டும் எனதிடம் ஒருவரும் கேட்க வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் மகன் ஷெய்கு அப்துல் ஜப்பார் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டார்கள் உங்களிடத்தில் என்ன வருத்தம் வந்துது என்று, அப்போது சொன்னார்கள் எனது உறுப்பு அடங்களிலும் நோகுது என் கல்பை தவிர. அது அல்லாஹ்வுடன் இருக்கிறது நோகவில்லை என்று. அவர்களின் குமாரர் ஷெய்கு அப்துல் அஜீஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நசலை குறித்து கேட்டார்கள். என் நசல் அதை ஒருவரும் அறிந்து விளங்கமாட்டார்கள். மனு ஜின் மலக்கு ஒருவரும் அறியார்கள். அல்லாஹ் உடைய அறிவு அவன் ஹுக்மினால் குறைந்திடாது ஹுக்ம் பேதகமாகும் அறிவு பேதகமாகாது. அல்லாஹ் தஆலா அவன் நாடுவதை அளிப்பான் நாடுவதை தரிபடுத்துவான். அவனிடத்தில் உம்முல் கிதாபு இருக்கிறது. அவன் செய்வதை குறித்து கேட்கப்படாது. ஹல்குகள் கேட்கப்படுவார்கள். சிபதுகளின் ஆகன்கள் அருவது போல் நடக்கும் இன்னும் சொல்லுகிறவர்களாக இருந்தார்கள்.

استعنت بلا اله الا الله سبحانه وتعالي والحي الذي لايخشي الفوت سبحان من تعزز بالقدرة وقهر عباده بالموت لا اله الا الله

محمد رسول الله

அவர்கள் மகனார் ஷெய்கு மூஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வபாத் முடுகின நேரம் சொன்னார்கள்.

تعزز ولم يودها علي الصحة

என்று அந்த சொல்லை மடக்கி மடக்கி சொன்னார்கள் நாவு சரியாகுமட்டும் பின்பு

الله الله الله

என்று சொன்னார்கள். பின்பு சத்தம் மறைந்தது. நாவு ஹல்குடைய முகடுடன் சேர்ந்ததாய் பின்பு சங்கையான ரூஹ் பிறப்பட்டுது ரலியல்லாஹு தஆலா அன்ஹு வநபஅனா பிஹி பித்தாரைன்.

**எழுபதாம் ஹிகாயத்தாவது தங்கள் பிள்ளைகளை பயான் செய்வதில் பேசுரது.**

ஷெய்கு இப்னு நஜ்ஜார் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய தாரீஹில் சொல்லுகிறார்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர் செய்யிது அப்துர் ரஜ்ஜாக் தாஜுத்தீன் அபூபக்ர் சொல்ல கேட்டிருக்கிறேன் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு 49 பிள்ளை பிறந்தது 27 ஆண் பிள்ளை 22 பெண் பிள்ளை. இன்னும் சொன்னார்கள், ஒரு தடவை சுகம் இல்லாதிருந்து கடுப்பமாச்சுது. மயக்கமாக இருந்துது நாங்கள் சூழால் இருந்து அழுது கொண்டிருந்தோம். பின்பு தெளிவு வந்து சொன்னார்கள் அழுகாதீர்கள்.; இந்த நோயில் நான் மவ்த்தாக மாட்டேன். எனது பிள்ளை யஹ்யா என் முதுகில் இருப்பது அது துன்யாவில் ஜீவிக்க வேண்டும் என்று சொல்லவும், நாங்கள் எண்ணினோம் இவ்வார்த்தை நோயின் கொடூரத்தால் சொல்கிறார்கள் என்று. பின்பு அல்லாஹ் தஆலா ஆபியத்தாக்கினான் அவர்களுக்கு ஒரு ஹபஸீ வெள்ளாட்டி இருந்துது. அவர்களால் செய்யிது யஹ்யா பிறந்தார்கள் கடைசி பிள்ளை. பின் சில காலத்திற்கு பிறகு வபாத்தானார்கள்.

கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பின் சில பிள்ளைகள் இருந்தார்கள் அவர்களில் உள்ளவர் தான் ஷைபுத்தீன் அப்துல் வஹ்ஹாப் 522-ம் ஆண்டில் பிறந்து 593-ம் ஆண்டில் பக்தாதில் வபாத்தாகப்பட்டது. கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பின் 32 வருடம் இருந்தார்கள். இன்னும் அவர்களில் உள்ளவர்கள் ஷரபுத்தீன் செய்யிது ஈஸா இவர்களுக்கு கோர்வையாக்கப்பட்ட கிதாபுகளும் உண்டு. அதில் உள்ளது தான் ஜவாஹிருல் அஸ்ரார் இவர்களுக்காக கௌது நாயகம் அவர்கள் புதூகுல் கொயிப் என்ற கிதாபு கோர்வை செய்தார்கள். 572-ம் வருஷத்தில் வபாத்தானார்கள். கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் 12 வருடம் இருந்தார்கள். இன்னும் அவர்களில் உள்ளவர்கள் ஷம்சுத்தீன் அப்துல் அஜீஸ், இன்னும் அவர்களில் உள்ளவர்கள் ஷிராஜுத்தீன் அபுல் பரஜ் அப்துல் ஜப்பார் இவர்கள் 573-ல் வபாத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பின் 12 வருடம் இருந்தார்கள். இன்னும் தாஜுத்தீன் அபூபக்ர் அப்துர் ரஜ்ஜாக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 528-ம் ஆண்டில் பிறந்து 623-ல் வபாத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் 42 வருடம் இருந்தார்கள், இன்னும் அபு இஸ்ஹாக் இப்ராஹிம் இவர்கள் பக்தாதில் 600-ம் ஆண்டில் வபாத். கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் 39 வருடம் இருந்தார்கள், இன்னும் அபுல் பத்ல் முஹம்மத் எங்கப்பட்டவர்கள் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் 39 வருடம் இருந்து பக்தாதில் 600-ம் ஆண்டில் வபாத்தானார்கள், இன்னும் அபு அப்துர் ரஹ்மான் அப்துல்லாஹ் அவர்கள் 508-ம் வருடம் பிறந்து கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் 26 வருடம் இருந்து பக்தாதில் 587-ம் வருடம் வபாத்தானார்கள், இன்னும் அபு

ஜகரிய்யா யஹ்யா அவர்கள் 555-ம் ஆண்டு பிறந்து கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் 39 வருடம் இருந்து 600-ம் ஆண்டின் பராஅத் இரவில் பக்தாதில் வபாத்தானார்கள், இன்னும் செய்யிது ஸாலிஹ் பக்தாதில் வபாத் அவர்களுடைய கப்ரு பரக்கத் செய்யப்பட்ட யுக்அத்திற்கு வெளியே இருக்குது, இன்னும் தியாவுத்தீன் அபு நஸ்ரு மூஸா இவர்கள் 539-ம் வருடம் பிறந்து திமஸ்கில் 615-ல் வபாத்தானார்கள்.

இந்த பாரிஷிய்யா ரிஸாலாவை கோர்வை செய்தவர்கள் சொல்லுகிறார்கள் முஃதபரான கிதாபுகளில் சிலதில் கண்டேன் ஹழ்ரத் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நாம் சொன்ன பிள்ளை அல்லாமல் இன்னும் சில பேர்களும் இருப்பதாய் கண்டேன். அவர்களில் உள்ளவர்கள் செய்யிது யூசுப் அவர்கள் பிறந்ததும் வபாத்தும் பக்தாத் ரவ்தாவில். அவர்களில் உள்ளவர்களான அஷ்ஷெய்யிது அப்துல் ஜொப்பார் அஷ்ஷெய்யிது ஹபீபுல்லாஹ் வஅஷ்ஷெய்யிது ஜாஹித் வஅஷ்ஷெய்யிது அப்துல் ஞொனி வஅஷ்ஷெய்யிது மன்சூர் இவர்கள் 7 குத்பில் ஒருவராக இருந்தார்கள், வஅஷ்ஷெய்யிது அப்துல் ஜொப்பூர் வஅஷ்ஷெய்யிது அப்துல் ஹாலிக் வஅஷ்ஷெய்யிது அப்துர் ரவூப் இவர்கள் அளவில் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மிகுந்த அமலையும் சேர்க்கப்படும், இந்த செய்யிது மஜ்துத்தீன் எங்கப்பட்டவர்கள் மேலாம்பர மகாம்களை உடைய உலமாக்களில் சிலரிடத்தில் கடைசி பிள்ளை இவர்கள் தான் என கூறி இருக்கிறார்கள்.

وكريمته امة الجبار فاطمة رضوان الله تعالى عليهم اجمعين

இந்த பாரிஷி ரிசாலாவை அரபு வாக்கில் கோர்வை செய்தவர்கள் சொல்லுகிற கிதாபின் முடிவு நான் சொல்லுகிறேன் இந்த தர்ஜுமாவை முடித்தேன் கௌது நாயகம் அவர்களுடைய மன்கிபுகளில் பஹ்ஜதுல் அஸ்ராரிலும் மற்றதிலும் சிலதை தெரிந்து எடுத்து சேர்த்து 70 மன்கியத்தாய் நிறப்பினேன். ஏன் என்றால் 70 கொண்டு பால் பார்க்கும் மோகமாய் ஏன் அதற்கு ஹர்பாகிறது عين அதற்கு சில பொருள்கள் உண்டு, பார்வை, சுனை, சூரியன், நல் வஸ்து, தங்கம், உள்ரங்கம், அந்தரங்கம், ஆக இதுகளாயிருக்கும்.

ஆதலால் அல்லாஹ் தஆலா இடத்தில் கேட்கிறேன். இந்த மனாகிபேனும் கீர்த்தி உடையோர்களின் பொருட்டால் அல்லாஹ் தஆலா நமது அகவிழியை முஸாஹதா ஷுஹுதெனும் சுர்மாவில் ஒளிவாக்கி நமது கல்புகளை பைளெனும் சுனயரிவியாக்கி அதனால் உஜுதுடைய சிற்றுகளும் பூராயங்கள் எனும் தண்ணீரை நாவெனும் மடையினால் பாய்ந்து ஓட செய்யவும் நமது சிற்றின் மீது மஃரிபா இர்பான் எனும் கதிரவன் ஒளிவு கொண்டு அவன் வெளியாகவும் நம்மை இக்காலத்துடையோரில் சர்ச்சனரான நற்கூட்டத்தில் ஆக்கி அருளவும் பங்கபடிப்பான பளவன்னிப்பூ கெடுதிகளை விட்டகற்றி மாத்துரை நிறம்பிய பொற்கட்டி சுத்தம் போல் ஆக்கி விடவும் நமது அடக்கப்பொருளை அறிய உதிப்பை விதிக்கவுமிரக்குறேன். எவ்வஸ்துவும் அவனிடத்தே மிக்தாரு கொண்டாயிருக்கும். இன்னும் மூஸா அலைஹிஸ்ஸலாம் தங்களினது கவ்முகளில் தவ்பாவில் மீகாதுக்காக 70 பேரை

தெரிந்து கொண்ட பொருட்டாலும் ஆகையால் அல்லாஹ் போதும் இவ்வெழுவது மனாகிபின் பொருட்டு நமது தவ்பாவெனும் அவன் அளவில் நாம் மீழ்ச்சையாவதை கையேற்று நமது பாவதோசத்தை மன்னித்து அழித்து நமது கருமங்களையும் திருத்திவிட்டு நமது நரைக்கும் இரைக்கு கிருபை பொறிந்து அவன் திருசமூகம் இடத்திலும் கௌது நாயகம் அவர்களுடைய ஹழ்ரத்திலும் தீனிலும் துன்யாவிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கூட்டத்தில் ஆக்கிக் கொள்க. அவனே போதும் என நம்பி இயம்பினேன் திடமாய் அவனாகிறவன் கேட்டும் கேலாமையும் கொடை ஈபவனும் உள் கிருபை வெளிக்கிருபை செய்பவனுமாய் இருக்கும்.

اللهم انفعنابه وبركات علومه واجعلنا منسلاين في السلسلة العلية القادرية واحينا في الحضرة القادرية وامتنا علي محبته

وابعثنا في الحشر مع مريديه المحبين المخلصين الذين لاخوف عليهم ولاهم يحزنون

எங்கள் ஆண்டவா கௌது நாயகம் அவர்களுடைய பொருட்டாலும் அவர்கள் பரக்கத்தாலும் அவர்கள் கல்வி கலஞ்சியத்தின் பொளிவாலும் எங்களுக்கு பிரயோசனம் செய்து மேலாம்பர காதிரிய்யா சில்சிலாவெனும் வடத்தோடு தொடர்கின்ற மனிதராகிக்கொள். காதிரிய்யா ஹழ்ரத்தை முஹப்பத் பெருவதில் எம்மை ஹயாத்தாக்கி வைத்து அது முஹப்பத்திலே மவ்த்தாக்கி அவர்களின் முரீதுடன் மஹ்ஸரில் எழுப்புவாயாக. எப்படிப்பட்ட முரீது என்றால் கலப்பில்லாதே இஹ்லாசுடைய கூட்டம் அவர்கள் பேரில் யாதொரு அச்சம் இல்லை சலிக்கவும் மாட்டார்கள் அந்த கூட்டத்தில் ஆக்கி அருள்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام علي المرسلين والحمد لله رب العالمين وصلي الله علي سيدنا محمد وعلي اله

وصحبنه وسلم اجمعين والحمد لله رب العالمين امين

இந்த ரிசாலாவான அரபு பாஷையை அறியாதாற்கு அறிவாக வேண்டும் என அரிவி (அரபுத்தமிழ்) பாஷையில் அவ்வாக்கியங்களை தமிழுரையாக்கி விட வேண்டும் என்றே தேடி கொண்டவரின் நாட்டம் நிறைவேற்றும் முகமாய் தெரிந்த மட்டும் அரபு லப்ளுகளை தமிழால் கருத்தும் கரயும் அறியாதவனாக இருக்கிலும். கரனித்த முஹம்மத் ஸதகதுல்லாஹ் இப்னு அஷ்ஷெய்குல் ஆலம் முஹம்மத் லெப்பையில் காஹிரி அல்மர்ஹூம் என்ற பாவியான அடிமை யான் சொல்லுகிறேன். இந்த உரையானது அரபு லப்ளுக்கு தமிழ் மஃனாவை வெளிப்பொருளிலும் எனக்கு அறிவாகின மட்டிலும் எழுதி கொண்டதால் அதை பார்ப்பவரும் கேட்பவரும் வார்த்தை வித்தியாசத்தாலும் கருத்துரை மாற்றத்தாலும் ஏதும் இருந்தது போல் இந்த நேர் நெறி உள்ளார் கண்டில் சகல பிழை பொறுக்கும் சங்கையாளனாகிய நாயகாதிபன் பால் மன்னித்து கிருபை அருள கேட்பார் என்ற ஆசிப்புடன் அந்த நாயகனிடமே ஆவலுடன் கேட்கிறேன்.

ஆண்டவா எனக்கும் என் தாய் தகப்பருக்கும் என் ஜுய ஜனத்திற்கும் உஸ்தாதுமார் சினேகிதர்கள் இதை உகந்தவர்கள் உதவியாளர்கள் அனைவருக்கும் இரட்சித்து காப்பாற்றுதலோடும் கூடிய கிருபை அருள்வாயாக. ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

وصلي الله علي سيدنا محمد وعلي سائر الانبياء والمرسلين وال كل منهم وصحبهم اجمعين والحمد لله رب العالمين

*முற்றும்*

www.sufimanzil.org